விலை ரூபா 2-00 ★ 16 பக்கங்கள்

ஈழநாடு

வாரமலர் THE EELANADU

(1958 — வெள்ளிவிழா ஆண்டு — 1983)

மலர்: 25 கார்த்திகை 25 ரபி-அவ் 5 இதழ் 299

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 11-12-83

## கப்பல் சேவையில் இவர்களுக்கு முன்னுரிமை

(கொழும்பு)

இந்திய பாஸ்போட் வைத்திருக்குப் ஆடிக்கலவர தமிழ் அகதிகளை ஜனவரி மாதம் ஆரம்பமாகும் கப்பல் சேவையில் முன்னுரிமை கொடுத்து அனுப்பிவைப்பதற்கான ஏற்பாடுகளை அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் செய்துள்ளது.

இதற்காக பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அலுவலகத்தில் மத்தியவங்கி, இந்தியத் தூதரகம் குடியகல்வுகுடிவரவுத் திணைக்களம் அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் ஆகியவற்றைச் சேர்ந்த அதிகாரிகள் செயலாற்றுகின்றனர். (8-ம் பக்கம் பார்க்க)

# ‘பிரிவினையைக் கைவிட்டால் தமிழர் கூட்டணிக்கு அழைப்பு!’

## ஜனாதிபதி அறிவிப்பு!

(இ. கந்தசாமி)

தனிநாடு கோரிக்கையை தமிழர் விடுதலைக் கூட்டணி கைவிட்டால் மாத்திரமே நடைபெறவிருக்கும் சர்வ கட்சிமாநாட்டில் கலந்துகொள்ள அந்தக்கட்சிக்கு அழைப்பு விடுக்கப்படும். அத்துடன் இலங்கைத் தமிழர் பிரச்னைபெரும்பான்மை சிங்கள மக்களின் சம்மதத்துடனேயே தீர்த்து வைக்கப்படும் என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர் ஜெயவர்த்தன அறிவித்தார்.

ஐ. தே. கட்சியின் 29-வது வருடாந்த மகாநாடு நேற்று சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றபோது ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையிலேயே மேற்கண்டவாறு இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

''பல்வேறு கட்சிகள் மதத்தலைவர்கள், பொது ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் இலங்கைத் தமிழர்கள் பிரச்னை தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும். இப்பிரச்னையைத் தீர்க்க பலசிக்கல்கள் ஏற்படலாம், பல காலங்கள் நீடிக்கலாம். ஆனாலும்இப்பிரச்னையை சமரசமாக தீர்க்கநான் திடசங்கற்பம் பூண்டுள்ளேன்.

''இலங்கையின் சுதந்திரம் இறமை என்பவற்றின் உள்ளடக்கிய ஒற்றையாட்சி முறை தொடர்ந்து பேணப்படவேண்டும். ஐ. தே. கட்சி ஆட்சியில் இருக்கும்வரை இது பூரணமாக பாதுகாக்கப்படும்.

''தமிழர் விடுதலைக் கூட்டணியின் இந்த ஒற்றையாட்சி முறையை ஏற்கவேண்டும். அதனை ஏற்கும் பட்சத்தில்தான் அவர்களின் ஏனைய கோரிக்கைகள் பரிசீலனை செய்யப்படும். தமிழ்மக்கள் உரிமைகளை பாதுகாக்கும் பொறுப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியை விட ஐக்கியதேசியக் கட்சிக்குத்தான் அதிக பங்கு உண்டு. அதனைத் தொடர்ந்து

(8-ம் பக்கம் பார்க்க)

## ஐ. நா. செயலாளரின் மனித உரிமைகள் தினச்செய்தி

(நியுயோர்க்)

உலகநாடுகள் பலவற்றில் மனித உரிமைகள் மீறப்படுவதாக ஐ. நா. பொதுச் செயலாளர் திரு பெரஸ் டி. கொய்லர் மனித உரிமைகள் தினம் தொடர்பாக வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார். (சூ)

## க.பொ.த. (சாதாரண) பரீட்சை 20-ம் திகதி ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

கல்விப் பொதுத்தராதர சாதாரண பரீட்சை இம்மாதம் 20ம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

4 லட்சத்து 88 ஆயிரத்து 220 மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள்.

2,921 பரீட்சை நிலையங்களில் இப்பரீட்சை நடைபெறவுள்ளது.

495 பரீட்சை இணைப்பு நிலையங்கள் பரீட்சைகளைக் கவனிக்கும் நிலையங்களாக இயங்கும்.

வழமைபோல் இம்முறையும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பரீட்சை நிலையங்களில் பலப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது [மா]

## கொழும்பு முகாம்களில் 10,257 அகதிகள்!

(இ. கந்தசாமி)

இனக்கலவரத்தால் பாதிக்கப்பட்டவர்களில் கொழும்பு முகாம்களில் 10,257 பேர் அகதிகளாக இருக்கிறார்கள்.

பம்பலப்பிட்டியில் 3,969 பேர் முகாம்களில் இருக்கிறார்கள்;

கொட்டாஞ்சேனையில் 1,664 பேர். இரத்மலானை இந்துக்கல்லூரியில் 2,279 பேர், இரத்மலானை விமான நிலையத்தில் 2,245 பேர்.

நுவரெலியாவில் 66 பேர், மட்டக்களப்பில் 424 பேர், திருகோணமலையில் 5 பேர்' அநுராதபுரத்தில் 112 பேர்,

யாழ்ப்பாணத்தில் 14முகாம்களில் 5,268பேர், வவுனியாவில் 3 முகாம்களில் 984 பேர், முல்லைத்தீவில் 5 முகாம்களில் 440 பேர், மன்னாரில் 165பேர்.

## நீதித்துறை சுதந்திரம்: பதில் பிரதம நீதியரசர் கருத்து

(கொழும்பு)

''கடந்த ஜூன் மாதம் உயர் நீதிமன்ற நீதியரசர்கள் சிலரின் இல்லங்களுக்கு முன்னால் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் 600 பேர் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. ஆனால் அத்தொகையினரில் ஒருவரையாவது இனங்கண்டுகொள்ள முடியாமல் போனது மிக வேதனைதரும் விடயமாகும்.

இவ்வாறு பதில் பிரதம நீதியரசர் திரு எஸ். சர்வானந்தா நேற்று முன்தினம் வருடாந்த நீதித்துறை மகாநாட்டில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: ''அன்று அந்த ஆர்ப்பாட்டம் நல்ல சூரிய வெளிச்சத்தில் காலை 11 மணியளவிலேயே நடந்தது ஆனால் பொலிஸார் அவ் ஆர்ப்பாட்டம் பற்றி அறிந்து கொண்டபோதிலும் உடன் செயலில் இறங்கவில்லை. அத்துடன் அவர்களால் ஆர்ப்பாட்டக்காரரில் ஒருவரையோ, அல்லது அவர்கள் வந்திறங்கிய பஸ் வண்டியையோ அடையாளம் காணமுடியாமல் போனதும் வேதனைதருகின்றது

எதிர் காலத்திலாவது பொலிஸ் அதிகாரிகள் இதுபோன்று நீதிபதிகள், நீதிமன்றங்கள் மற்றும் நீதித்துறை சார்ந்த விடயங்களுக்கு விடுக்கப்படும் பயமுறுத்தல்களை முறியடிக்க வேண்டும். இதன் மூலமே நீதித்துறைச் சுதந்திரத்துக்கு மாசு ஏற்படுவதைத் தடுக்க முடியும்.

நீதித்துறைச் சுதந்திரத்தின் அடிப்படையில் நீதிபதிகள் விருப்பு-வெறுப்பு, கோப-தாபம், பீதி-ஆதரவு ஆகிய தன்மைகளுக்கு அப்பாற்பட்ட வகையிலேயே தமது தீர்ப்புக்களை வழங்கவேண்டியவர்களாக இருக்கிறார்கள். இந்நிலையில் தீர்ப்புக்கள் பாதிப்புக்களை ஏற்படுத்தலாம். ஆனால் அரசாங்

8 ம் பக்கம் பார்...

## கொழும்பில் பதட்ட நிலை! கப்பமும் கேட்கிறார்கள்!!

### அமிர்தலிங்கம் கூறுகிறார்

(திருச்சி)

கொழும்பில் மீண்டும் பதட்ட நிலை காணப்படுகிறது. அங்கு சில விஷமிகள் தமிழ் மக்களைப் பயமுறுத்துகிறார்கள். அவர்களிடம் கப்பம் கேட்டு வாங்குகிறார்கள்' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் நேற்று தெரிவித்துள்ளார்.

நேற்று அவர் திருச்சியில் இதனைத் தெரிவித்தார்.

தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாடு இலட்சிய அடிப்படையிலேயே செயல்பட்டு வந்தது ஆயினும் இப்பிரச்னையைத் தீர்க்க இந்தியா முன்வந்ததினால் அந்தநாடு தெரிவிக்கும் தீர்வினை ஏற்கும் வகையிலேயே நாம் இப்போது செயல்பட்டு வருகிறோம். அதற்காக நாம் எமது இலட்சியத்திலிருந்து விலகிவிட்டோம் என்று அர்த்தமல்ல'' என்று கூறினார்.

''இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்னை தீர்த்து வைக்கப்படுவதனையே விரும்புகின்றார்கள். அவர்கள் பிரச்னைக்கு முழுமையான தீர்வு முன்வைக்கப்படுமானால் அவர்கள் அதனை ஏற்றுக்கொள்வார்கள் கொழும்பில் நடைபெறவிருக்கும் சாவ கட்சி மாநாட்டில் எமது கட்சிக்கு அழைப்புவிடும் பட்சத்தில் நாம் அதில் கலந்து கொள்வோம். அத்தகைய அழைப்பு ஒன்றினை எதிர்பார்த்துத் தான் தாம் சென்னையில் தங்கியிருக்கிறோம் என்று குறிப்பிட்டார்.

வீட்டுக்கொரு தென்னைநடும் விரதமெடுப்போம்

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நல்லநிலைமையிலுள்ள 8 ஸ்ரீ மொறிஸ் ஒக்ஸ்போட் கார் விற்பனைக்குண்டு. 418 (772) ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 10508

உடுவில் டச் றோட்டுக்கு அருகாமையில் 4½ பரப்பு கிணற்றுடன். பரப்பு ரூ. 30,000/- ஜெயராசசிங்கம், சந்தை ஒழுங்கை, வட்டுக்கோட்டை. (10463)

கெற்பாப்புலவு வற்றுப்பளையில் இரண்டு காணிகள் 40 ஏக்கர், 25 ஏக்கர் பஸ் பாதையில் விற்பனைக்குண்டு. விலை ஏக்கர் ரூ. 4,000/-க்கு மேல். விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10191மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம். (10191)

யாழ். நகரில் ஆட்டுக்கல், அம்மி, உரல், திருகை, மின் அரவை ஆட்டுக்கல் முதலியன கிடைக்குமிடம்: S. S. அபூபக்கர் அன் கோ, 112, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். கைதேர்ந்த கலைஞர்களால் தயாரித்து அளிப்போர் சூரியா ஸ்ரோர்ஸ் கந்தசாமி கோவில் வீதி, வவுனியா. (10252)

கீரிமலை நகுலேஸ்வர பஸ் றோட்டில் கீரிமலையிலிருந்து முக்கால் மைலில் மூன்றுபரப்பு காணித்துண்டுகள் விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன. விண்ணப்பிக்கவும்: விளம்பர இல; 10272 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 10272

நல்ல நிலைமையிலுள்ள 11 ஸ்ரீ Ford Anglia காரும்,, Sisil R 80 குளிர்சாதனப்பெட்டியும் விற்பனைக்குண்டு. தொடர்பு: 'சமல வாசா,' நந்தாவில், கொக்குவில் (சம்பியன் லேன் ஊடாக). (10370)

195 வாடகைக்கு விடப்படும் இரும்புக்கதிரைகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: செ. கோபால், மெயின் வீதி, சங்கானை. 10361

நல்ல நிலையிலுள்ள 8 ஸ்ரீ தொடர் இலக்கமுடைய மொறிஸ் ஒக்ஸ்போட்கார் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அரு. அம்பலவாணர் காட்டுப்புலம் தொண்டமனாறு. அல்லது சக்திவேல் மீனாட்சி அம்மன் கோவில்வீதி வல்வெட்டித்துறை. 10363

4½ பரப்பு குடியிருக்க உகந்த காணி, கைதடி மேற்கில் விற்பனைக்கு உண்டு. விபரங்களை அறிய திரு. ப. முத்துக்குமாரசாமி சிரேஷ்ட தபால் அதிபர், மணியல்லவம், கைதடியுடன் தொடர்புகொள்ளவும். 10407

உடுவில் ஆர். சி. தேவாலயத்திற்கு அண்மையில் 7 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு ஷப்ரு, 207, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி; 22078 [10419]

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்திற்கு காமையில், யாழ். பலாலி பிரதான வீதிக்கு அண்மையில், 20, பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: Dr .இ. நன்னித்தம்பி, புன்னாலைக்கட்டுவன். (10443)

வண்ணை சிவன் கோவிலுக்கு அருகாமையில் காங்கேசன்துறை வீதியில் ஒரு கடையும், ஊரெழுவில் தொழிற்சாலை அமைக்க, வீடுகட்ட அல்லது விவசாயத்துக்கும் உகந்த 30 பரப்புக்காணி அம்மன் கோவிலுக்கண்மையில் விற்பனைக்குள்ளது. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 10440, மே/பா, ஈழநாடு, யாழ்ப்பாணம். 10440

## விற்பனைக்கு

புதிதாகப் பக்கிங் உடையாத நிலையில் 8. 5 CC. Kenwood குளிர்சாதனப்பெட்டி. Sony 2060E 20'' கலர் ரெலிவிசன் (குறைந்த மின்சாரம் உள்ளஇடத்திலும்தெளிவாகச் செயற்படக்கூடியது) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ரஞ்ஜனஸ் வீடியோ சென்ரர், 60, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 10478

கோழிமுட்டை குஞ்சு பொரிக்கும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு. ஒரு முறையில் 300 முட்டைகள் வைக்கக்கூடியது. மேலதிக விபரத்திற்கு தொடர்பு கொள்ளவேண்டிய விலாசம் சிவ சிறீஸ்கந்தநாதன் ''தமிழ்அகம்'' சங்குவேலி வடக்கு, மானிப்பாய். 10425

நுணுவில் சந்திக்கு அருகாமையில் கண்டி றோட், லயன்ஸ் கழகத்துக்கு முன்பாக சகல வசதிகளுடனும்கூடிய 4 பரப்பிலுள்ள புதிய வீடு வளவு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: அ. கதிர்காமநாதர், (மருதடி) கைதடி - நுணுவில், சாவகச்சேரி. 10479

யாழ்மிளகாய்த்தூள் - திறம் படத்தயாரித்து 50, 100, 200 கிறும் பைக்கற்றில் விற்பனைக்குண்டுதயாரிப்பாளர், விற்பனையாளர்: எஸ். பி. வேலாயுத பிள்ளை அன்ட் சன்ஸ், செம்பியன் லேன், கொக்குவில். போன்; 24062 (10484)

மட்டுவில் வடக்கு ஆயத்தியடி சாவகச்சேரி புத்தூர் பிரதான வீதியில் தென்னை வருமானம் உள்ள 12 பரப்பு காணி வீட்டுடனும் 16 பரப்பு வயலும், 50 பரப்பு தென்னங்கன்று நாட்டக்கூடிய காணியும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: தவராசா, ஈவினை, நிலாவரை றோட், புன்னாலைக்கட்டுவன்-வடக்கு. 10485

புத்தம் புதிய 14 அங்குல கலர் டி. வி. சென்னை, ரூபவாஹினி பார்க்கக்கூடியஇரட்டை அன்டினு, பூஸ்டர்கள், கேபிள், 40 அடி பைப் சகிதம் விற்பனைக்குண்டு. 496, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். 10499

கிறைன்டிங்மில்-சைனுகல்லர், பொலிஷர், 2 கிறைனிடர் 2 மோட்டர், மின்சார உபகரணங்கள் உட்பட விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும்; V. S. நடராசா, நீர்வேலி வடக்கு. 10502

தெல்லிப்பளை சந்தியிலிருந்து ¼ மைல் தூரத்தில் 4 பரப்பு காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு; R சுந்தரமூர்த்தி, C/o ஸ்கந்தவரோதயாக்கல்லூரி. சுன்னாகம். 10194

பண்டத்தரிப்பு சந்தியிலிருந்து கால்மைல் தூரத்தில் சண்டிலிப்பாய் வீதியில் வீடு கட்டுவதற்கு மூன்று பரப்பு பனங்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: S. A. பொன்னுத்துரை சண்டிலிப்பாய் வீதி, பண்டத்தரிப்பு 10494

தரமான கொங்கிறீட் பூச்சாடிகளுக்கு விஜயம் செய்யுங்கள். M T பொன்னம்பலம், 36, K. K. S. றோட் யாழ்ப்பாணம். 10489

18/1 மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடத்தில் 2 பரப்புகாணி வீட்டுடன் விற்பனைக்குண்டு. சுற்றுமதில் கிணறும உண்டு. தொடர்பு: க. இரத்தினம் 55, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம். 10495

## விற்பனைக்கு

ஒருதொகை பலகைகள்' திராந்திகள், ELF-150மொடல் பின்கதவுகள் சயிற் கதவுகள் போட் எஸ்கொட் இஞ்சின் மற்றும் சாமான்கள், 1200 மொடல் போக்ஸ்வகன் கார் பொடியுடன் கூடிய சாமான்கள். N. பொன்னுத்துரை, தேவி பிளசா, 28, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். 10500

இராமநாதன் கல்லூரிக்கு மிகு அண்மையில் தோட்டமுகப்பிலுள்ள 10 பரப்பு பனம்காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. விபரங்களுக்கு: சி சிவஞானம், ஆசிரியர், சேர் இராமநாதன்வீதி, மருதனுமடம், சுன்னாகம். (10435)

**FOR SALE**

Lancer 1981 model, Met Blue, Purchased new, Owner driven, Sparingly used, Agents maintained, Highest offer, No Brokers, 504 A, Navalar Road, Jaffna. 10422

## தேவை

யாழ்ப்பாணத்தில் தென்னம் தோட்டத்தில் குடியிருப்பதற்கு சிறு குடும்பம் தேவை றைவர் விரும்பத்தக்கது. சி. அருணாசலம், 165, கொழும்புத்துறை கிழக்கு, யாழ்ப்பாணம். 10469

## தேவை

மணமகன் தேவை: வலி. மேற்குப் பிரிவில் இந்து வேளாண் குடும்பத்தைச் சேர்ந்த சராசரி அழகுடைய 28 வயதுப் பெண்ணுக்கு அரசாங்க அல்லது தனியார் நிறுவனத்தில் நல்ல உத்தியோகம் பார்க்கும் மணமகன் தேவை. அனுஷ நட்சத்திரம், 12-ல் செவ்வாயுண்டு. ஜாதகக் குறிப்பு புகைப்படப் பிரதிகளுடன் முதல் கடிதத்திலேயே முழுவிபரங்களையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10487 மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 10487

மூவர் கொண்ட குடும்பத்திற்கு சிறியவீடு அல்லது பகுதி வீடு யாழ்ப்பாண நகரில் அல்லது கிராமப்புறங்களில் வாடகைக்குத் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10465 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 10465

**WANTED**

Hindu Vellala Parents looking for their Technical Officer son working in an African State. an educated partner below Twenty Seven. Full particulars in first letter. Apply: Advt. No: 10483, C/o Eelanadu, Jaffna. 10483

## பயிற்சி

மோட்டார் மெக்கானிஷம்-எலக்றிக்கல் வயறிங் - வெல்டிங் பயிற்சிகள் 12-12-1983ல் ஆரம்பமாகின்றது. இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியறிங் ரெக்னொலொஜி 11B மொம்சாக் கட்டிடம் ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 10324

## சோதிடம்

பிரபல சோதிடர் Prof. K. நடராஜா ஜே. பி.யை 'லிங்ககிரி' அளவெட்டி (தபாற் கந்தோருக்கு எதிரில்) என்ற முகவரியில் தற்போது தொடர்பு கொள்ளலாம். 10467

## சேவை

புதிய பழைய படங்கள் வெளிவந்துள்ளன. இன்றே அங்கத்துவம் பெறுங்கள். சிற்றி வீடியோ கிளப், 135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 10269

திறமைமிக்க வீடியோ படப்பிடிப்புக்கும் புதிய T. V. டெக், கசற் வாடகைக்கும் புதிய பழைய T. V. க்களையும் டெக்குகளையும் வாங்கவும் விற்கவும் நாடுங்கள் ரஞ்சனஸ் வீடியோ சென்ரர், 60, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். 10477

**ஷண்!**

உடனே கொழும்புக்கு வரவும். பிரச்சினைகளைச் சுமுகமாகத் தீர்த்து வைக்கலாம். தவறாது வரவும். தயக்கம் எதுவும் வேண்டாம்.

-மாமா-
யாழ்ப்பாணம்.
10462

## மணமகள் தேவை

கல்வி, பண்பு, நிறைந்த இந்து வேளாள குடும்பத்தைச் சார்ந்த அழகும் நிறமும் உடைய முப்பது வயதிற்குட்பட்ட சாதகக் குற்றங்களற்ற மணமகளை, நற்பழக்க வழக்கங்களையுடையவரும், யாழ். நகரைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், அரசாங்கக் கூட்டுத்தாபனம் ஒன்றில் மாதம் இரண்டாயிரம் ரூபா சம்பளம் பெறுபவருக்கு அவரின் குடும்பத்தினர் தகுந்த மணமகளைத் தேடுகின்றனர். வீடு, வளவு யாழ். நகரில் விரும்பத்தக்கது. முதற் கடிதத்திலேயே சகல விபரங்களையும், குறிப்புகளையும் விரைவாக அனுப்பவும். தரகர் வேண்டாம். விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 10438, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (10438)

## சேவை

சகலவித நில அளவைக்கும் தொடர்பு கொள்க: ஆ. தம்பிராசா A. Thambirajah உதவி அளவை நாயகம் Asst. Surveyor General (Retd.) அளவெட்டி தெற்கு, அளவெட்டி. 9920

## கல்வி

பட்டதாரி ஆசிரியரினால் G. C. E. (A/L) 84, 85 மாணவர்கட்கு தூய, பிரயோக கணிதம் தனிப்பட்ட முறையில் வீட்டிற்கு வந்து சிறந்த முறையில் கற்பிக்கப்படும். விபரங்கட்கு: N. கணேசானந்தன், 25, பொன்னப்பா லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். 10481

## அறிவித்தல்

(1) தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில்(கொடிகாமம்) 5000க்கு மேலான வெற்றுச் சாக்குகளும், 45 கலன் கொள்ளக்கூடிய வெற்றுப்பரல்களும் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்கு இருக்கின்றது. ரூபா 150/- முற்பணம் கட்டி கேள்விப்பத்திரங்களைச் சங்க அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும் 26-12-83ந் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12-00 மணி வரை பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். பொருட்களைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

(2) தென்மராட்சி கிழக்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், கொடிகாமம் தனது 1984 ஆண்டிற்கான பொதிகள் ஏற்றுவதற்கான லொறி சேவை ரெண்டர் மூலம்கோரப்படுகின்றது. விண்ணப்பப்பத்திரம் பிரதம சங்கத்தில் பெற்று பூர்த்தி செய்து 26-12-83ந் திகதிக்கு முன்பு பொது முகாமையாளரிடம் சேரல் வேண்டும். தெரிவு செய்யப்படுபவர் பிணை ரூபா 1000/- செலுத்தி சங்கத்துடன் ஒப்பந்தம் செய்தல்வேண்டும்.

பொது முகாமையாளர்
தென்மராட்சி கிழக்கு
ப. நோ. கூ. சங்கம்,
கொடிகாமம், 7-12-83.
10447

**WANTED**
**LATHE OPERATOR—GAS ELECTRIC WELDER**
**FOR IMMEDIATE APPOINTMENT**
**MEKI TABLE**
Keeripallai Road, Karaveddy. 10496

## தேவை

சந்தோர் உபயோகத்திற்கு சட்டத்தரணிகள் குழு ஒன்றிற்கு அலுவலகப் பாவிப்பிற்கு நீதிமன்றத்திற்கு அருகாமையில் கட்டிடம் ஒன்று வாடகைக்குத் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**செல்வி M. வேலாயுதம்,**
66, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். (10493)

## ஓராண்டு நினைவஞ்சலி

**- அமரர் ஆர். நாராயணன் -**



மறைவு: 22 12-82

நாராயணன் எனும் நாமம் சொல்ல நாவெல்லாம் இனிக்கும் என்பர் ஊர்மக்கள். ஐயா, இன்று திதித்தினம், நின் நினைவு எம்உள்ளமெல்லாம் இனிப்பால் நிறைகிறதே. நின் நாமம்வாழ்க ஆத்மா சாந்தி பெறுக.

என்றும் மறவா
அன்பு மனைவி, மக்கள்,
பேரப்பிள்ளைகள்,
உற்றார், உறவினர்கள்.

82, ஸ்ரான்லி றோட்,
யாழ்ப்பாணம்.
10450

## ★ வட லெபனுனிலிருந்து

# பாலஸ்தீனர் வெளியேறுவதைதடுக்க இஸ்ரேலிய கடற்படை முயற்சி?

பெய்ரூட், டிச. 10

லெபனுனின் வடபகுதித் துறைமுக நகரமான திரிப்பொலியை அடுத்துள்ள கடற்பகுதியில் இஸ்ரேலியக் கடற்படைக் கப்பல்கள் பல நங்கூரமிடப்பட்டுள்ளன. இவற்றில் சில தரையிலுள்ள பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினரின் நிலைகள்மீது பீரங்கித் தாக்குதல்களை நேற்று நடத்தின.

திரிப்பொலியில் தற்போது சுமார் 4000 பாலஸ்தீன விடுதலை இயக்க யாஸீர் அரபாத் விசுவாசிகள் இருந்துவருகின்றனர். இவர்கள் அடுத்த வாரமளவில் இங்கிருந்தும் கடல் மார்க்கமாக வெளியேறவுள்ளனர். எனவே இவர்களின் வெளியேற்றத்தைத் தடுக்கும் நடவடிக்கையே இஸ்ரேலின் கடற்படைத் தாக்குதல்கள் என்று பாலஸ்தீன இயக்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இரு வாரங்களுக்கு முன்னர் பாலஸ்தீன இயக்கத் தலைவர் அரபாத், ஐ நா. விடமிருந்து தமது விசுவாசிகளை ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு ஐ. நா.கொடியைத் தாங்கிச் செல்லும் உரிமையைப் பெற்றிருந்தார். இதனைத் தொடர்ந்து கிரேக்கத்திலிருந்தும், பிரான்ஸிலிருந்தும் சுமார் ஐந்து கப்பல்கள் பாலஸ்தீன வீரர்களை ஏற்றிச்செல்ல இணங்கின்.

ஆனல் தற்போதைய சூழ்நிலை இக்கப்பல்களைத் திரிப்பொலித் துறைமுகப் பகுதிக்கு வராதவாறு செய்துள்ளது. இஸ்ரேலிய கடற்படைகளால் அச்சுறுத்தல்கள் வரலாமென அக்கப்பல்கள் அஞ்சுகின்றன. இதுபற்றி பாலஸ்தீன விடுதலை இயக்கப் பிரமுகர்களும் எடுத்துக் கூறிவருகின்றனர்.

இதேவேளை பாலஸ்தீன விடுதலை இயக்கத்தவர்மீது தாக்குதல்களை நடத்த இஸ்ரேலியக் கடற்படை அணியொன்று திரிப்பொலித்துறையில் நேற்றுத் தரையிறங்கியதென்று தெரிவிக்கப்பட்டது.

பாலஸ்தீன வட்டாரங்கள் இந்த அணிமீது தமது வீரர்கள் தாக்குதல்களை நடத்தி இதன் முன்னேற்றத்தைத் தடுத்தனர் எனத் தெரிவித்தன. இத்தாக்குதலின்போது 4 இஸ்ரேலிய கமாண்டோக்கள் கொல்லப்பட்டதாகவும், இருவர் படுகாயமடைந்ததாகவும் பாலஸ்தீன வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

திரிப்பொலியிலிருந்து வெளியேறவுள்ள பாலஸ்தீன வீரர்கள் டுனூஸியா அல்லது வட யேமனுக்குச் செல்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. [கி]

## இந்தியாவில்இன்று உயிரியல் மரபு மகாநாடு!

### 3 நோபல் பரிசு அறிஞர்களுடன் 2500 உலகவிஞ்ஞானிகள் கலந்து கொள்கின்றனர்!

(புதுடில்லி)

இந்தியா உட்பட உலகின் 2500 விஞ்ஞானிகள் பங்குபற்றும் உயிரியல்பற்றிய மகாநாடு புதுடில்லியில் இன்று ஆரம்பமாகின்றது. பிரதமர் திருமதி இந்திரா காந்தி இம்மகாநாட்டை ஆரம்பித்து வைக்கிறார். 10 தினங்கள் இம்மகாநாடு இடம்பெறும்.

'உயிரின மரபு மகாநாடு' என இது அழைக்கப்படும். ''உயிரின வளர்ச்சியில் ஏற்படும் மாற்றங்கள் மற்றும் உயிரினங்களின் உற்பத்தித் திறன் ஆகியனபற்றியே இம்மகாநாட்டில் விசேடமாக ஆராயப்படும்'' என்று இந்திய விஞ்ஞானியும், இம்மகாநாட்டு ஏற்பாட்டுக் குழுத் தலைவருமான டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன் தெரிவித்தார்.

இம்மகாநாட்டில் கலந்து கொள்ளும் விஞ்ஞானிகளில் 'நோபல்' பரிசு பெற்ற மூன்று அறிஞர்களும் அடங்குகின்றனர்.

இம்மாநாட்டை யொட்டி உயிரின மரபு சம்பந்தமான கண்காட்சியொன்றும் புதுடில்லியில் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. [கி]

## கண் பரிசோதனை

(மன்னர்)

மன்னர் மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த மாணவ மாணவிகளுக்கான கண்பரிசோதனை மன்னர் அரசினர் ஆதார வைத்தியசாலையில் நடைபெற்றது.

இக் கண் பரிசோதனையை யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த வைத்தியக் குழு ஒன்று நடத்தியது.

இக் கண்பரிசோதனைக்கான ஏற்பாடுகளை மன்னர் மேற்கு கிராமோதய சபை மேற்கொண்டிருந்தது.

## சாவகச்சேரியில் உப மின் நிலையம்

[மட்டுவில்]

சாவகச்சேரி நகரசபையால் புதிதாக அமைக்கப்பட்ட உப மின்நிலையம் இயங்கத்தொடங்கியதும் சாவகச்சேரி நகர மின் பாவனையாளர்களின் கஷ்டங்கள் மறைந்துவிடும் எனஎதிர்பார்க்கப்படுகிறது.

சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரிக்கு அண்மையில் சுமார் 4 லட்சம் ரூபா செலவில் இந்த உப மின் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கு இரு சிறிய உப இணைப்புக் கருவிகள் மட்டும் பொருத்தப்பட்டதும் மின்நிலையம் இயங்கத் தொடங்கிவிடும். இந்த இரு கருவிகளுக்கான கேள்விப்பத்திரங்கள் தற்போது ஏற்கப்பட்டுள்ளன.

## திருவெம்பாவை

(மன்னர்)

சரித்திரப் பிரசித்திபெற்ற திருக்கேதீஸ்வரம் ஆலயத்தில் இம்மாதம் 12-ஆம் திகதி ஆரம்பமாகும் திருவெம்பாவை விழா இம்மாதம் 21-ஆம் திகதி வரை நடைபெறும்.

இதேபோன்று மன்னர் சித்திவிநாயகர் ஆலயம், பேசாலை ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம், தலைமன்னர் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் ஆகியவற்றிலும் திருவெம்பாவை விழா நடைபெறும்.

## பொலிஸ்-மக்கள் இணைந்து ஆஸ்பத்திரியில் சிரமதானம்!

(புலோலி)

''பொலிசாருக்கும் பொது மக்களுக்குமிடையே நெருங்கிய தொடர்பு ஏற்படும் போதுதான் ஒருவரையொருவர் புரிந்துகொண்டு நாட்டில் அமைதியான சூழ்நிலையை உருவாக்க முடியும்.''

இவ்வாறு, பருத்தித்துறை பொலிஸ் பொதுமக்கள்நல்லுறவுக் குழுவினுல் ஒழுங்கு செய்யப்பட்டு பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் நடாத்தப்பட்ட சிரமதானத்திில்கலந்து கொண்டு உரையாற்றிய காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. ரி.கே. ஜெயராசா குறிப்பிட்டார்.

இச்சிரமதானத்தை மந்திகை அரசினர் வைத்திய சாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் ஆரம்பித்து வைத்தார். பருத்தித்துறைப் பொலிஸ் பகுதிக்குட்பட்ட பொது நிறுவனங்கள் அரசாங்க அலுவலகங்களைச் சேர்ந்த சுமார் 150பேர் பொலிசாருடன் இணைந்து இச்சிரமதானத்தில் ஈடுபட்டனர்.

பேராசிரியர் வீ. கே. கணேசலிங்கமும் உரையாற்றினர். உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஜெயராசா பருத்தித்துறை பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. மகேந்திரன் உட்பட இச்சிரமதானத்தில் கலந்துகொண்டோர் அரசினர் வைத்தியசாலையில் பல்வேறு வகையான சிரமதான முயற்சிகளை மேற்கொண்டனர். (கு)


## ரஸ்ற் ரவல் சேர்விஸ்

11/A, மொம்சாக் கட்டிடம்
ஸ்ரான்லி வீதி,
யாழ். நகர்
T. P. 24111

தலைமைக்கந்தோர்
65, சதாம் வீதி,
ஹைறிராமணி ஆர்காட்,
கோட்டை.

★ உங்கள் வெளிநாட்டுப் பயணங்களுக்கு நம்பகரமான ஸ்தாபனம். இடத்திற்கு முந்திக் கொள்ளுங்கள்.

★ பிராக் பெல்ஜியம் விசா ஒழுங்குகள் செய்து தரப்படும்

★ பெல்ஜியம் விசா இருவழிப்பாதையுடன் 21000/-

★ அதிகப்படியான டிக்கட்டுகளுக்கு ஒரு டிக்கட் இலவசம்.

★ குறைந்த கொமிசனில் ரவலர்ஸ் செக் செய்து தரப்படும்.

★ அதிகப்படியான மத்திய கிழக்கு டிக்கட்டுகளுக்கு 13% கழிவு தரப்படும்.



## வெற்றிடங்கள்

மெக்கானிக்குகள் (Mechanics)

அவுட்போட் மோட்டர் திருத்துவதில் முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

கொல்லர் (Blacksmiths)

பொருத்துனர் (Fitters)

தரம் - 1 குறைந்தது 3வருட அனுபவம்
தரம் - 2 முறையான தொழில் நுட்பப் பயிற்சி பெற்றவர்கள்

மனுச்செய்க

டைனமிக் என்ஜினியரிங் லிமிற்றெட்

காங்கேசன்துறை வீதி, தெல்லிப்பழை.



# பவர்ஸ் உரம்
## ஒப்பற்றது

A B C

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11, கொழும்பு - 1, தொலைபேசி: 20551-6

MASTERS ABC 4/82 (A)

# பாரதியும் கிருத யுகமும்

### இன்று பாரதி பிறந்த தினம்

'புதிய ருஷியா' என்ற தலைப்பில் ரஷ்யப் புரட்சியை வரவேற்றுப்பாடிய பாரதி "கிருதயுகம் எழுக மாதோ" எனப்பாடலை முடிக்கிருன்.

சூ. யோ. பற்றிமாகரன்

பாரதி 'நான்மணி மாலையிலே' கிருதயுகத்தை வலியுறுத்துவதைப் பார்க்கையில், பாரதி ஆன்மீகத்தினூடாக இதனையடைய நினைத்தான் என்பதையும் உயிர்கள்யாவுமே இறைத்தோற்றமெனக் காட்டுவதன் மூலம் கிருதயுக மனோபாவம் தோன்றச் செய்யலாமென எண்ணினுன் என்பதையும் உணரக்கூடியதாயுள்ளது. இதையே எல்லா உயிர்களிலும் நானேயிருக்கிறேன்என்றுரைத்தான் கண்ணபெருமான்" எல்லாரும் அமரநிலையை எய்யும் நன்முறையை இந்தியா உலகிற்களிக்கும்" எனப்பாடினுன். அத்துடன் நில்லாது கிருதயுகத்தை வலியுறுத்திய அதே விநாயகர் நான்மணி மாலையில் "பொய்க்குங் கலியை நான்கொன்று பூலோகத்தார் கண்முன்னே மெய்க்குங் கிருதயுகத்தினையே கொணர்வேன், தெய்வ விதியிஃதே" எனவும் கிருதயுகத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம் நான் கொண்டனன்" எனவும் பாரதி பாடுகின்றான். இவற்றிலிருந்து 'கிருதயுகம்' என்னும் காலத்தைப்பாரதி எவ்வளவு நேசித்தான் என்பது வெளிப்பாடு.

இந்தக் 'கிருதயுகம்' என்றால் என்ன என்பதற்குப் பாரதி தனது 'சும்மா' கதையில் வரைவிலக்கணம் தருகிருன் 'எந்த ஜந்துவும் வேறு எந்த ஜந்துவையும் ஹிம்சை பண்ணுமலும் எல்லா ஜந்துக்களும் மற்றெல்லா ஜந்துக்களையும், தேவதாரூபமாகக் கண்டு வணங்கும் படிக்கும் விதியுண்டானல் அதுதான் கிருதயுகம்' என்பது பாரதி குள்ளச்சாமியாரூடாக வெளிப்படுத்தும் விளக்கம். இதிலிருந்து பாரதி யோகியெனப் போற்றிய குள்ளச்சாமியாரே பாரதியிடம் 'கிருதயுகம்' ஆவல் வளரக் காரணியாக அமைகிருர். மேலும் மனுதர்ம சாஸ்திரமே கிருதயுகக் கருத்தையும் கட்டிஎழுப்பியது என்பது அமரர் பேராசிரியர் கைலாசபதியவர்களின் 'கிருதயுகமும் கேடில்லா வாழ்வும்' என்ற கட்டுரை வாயிலாகத் தெளிவாகிறது. அத்துடன் பேராசிரியர் இக்கட்டுரையில் இலட்சியக்காலங்கள் பற்றிய ஏக்கங்கள் இந்தியக் கலாச்சாரத்தில் மட்டுமல்ல கிரேக்கரிடையும் நிலவியது என்பதைச் சுட்டிக் காட்டுகிருர். எனவே 'கிருதயுகம்' பற்றிய எண்ணக்கரு வேதாந்தத்தின் ஊடுருவலாகவும் பண்டை மரபின் எச்சசொச்சமாகவுமே பாரதியில் கருக்கட்டியது.

நான்மணி மாலையில் கடமையாவன தன்னைக்கட்டுதல், பிறர்துயர்தீர்த்தல், பிறர் நலம்வேண்டுதல்...... உலகெலாங் காக்கும் ஒருவனைப்போற்றுதல். இந் நான்கேயிப் பூமியிலெவர்க்கும் கடமையெனப்படும்" எனக் கூறுகிருர்.

நடைமுறையில் பாரதியின் இலட்சியங்கள் கைகூடவில்லை. இதனுல் பாரதி தனிமையுணர்வினை அடைந்தான். இதனை ஞானரதம், குயில் பாடல், சுயசரிதை படைப்புகளில் காணலாம். ஆயினும் பாரதியின் தனிமையுணர்வை தணிக்கக்கூடிய முறையிலமைந்தது அக்காலத்தில் ரஷ்யாவில் ஏற்பட்ட புரட்சி அலைகளும் மாமேதை லெனின் வழிகாட்டலும். ஸ்ரீமான் லெனின் தலைமையில் தேசத்தின் விளைநிலங்களும் பிறசெல்வங்களும் தேசத்திலுள்ள அத்தனைஜனங்களுக்கும் பொதுவுடமை ஆகிவிட்டது" என எழுதி மகிழும் பாரதி லெனின் ரஷ்யபுரட்சியில் கிருதயுகக் கூறுகளைக் கண்டான். பொதுவுடைமைக் கோட்பாடு பரவுவதினூடாகக் கிருதயுகம் மலருமென்ற நம்பிக்கையிலேயே 'ரஷ்யப் புரட்சி'ப்பாடலின் முடிவில் "கிருதயுகம் எழுக மாதோ" எனப்பாடிப் பரவசமடைகிருன்.

### பாலர் பாடசாலைக் கூரை திருத்தப்படும்

(மன்னார்)

இடிந்துவிழும் நிலையிலுள்ள மன்னார்-தாழ்வுபாடு பாலர் பாடசாலைக் கட்டிடத்தின் கூரை விரைவில் திருத்தியமைக்கப்படும்.


# சாயி ரெலி ரேப்

## புதிய யுக்திகளுடன்
## புதுமையான (STEREO) படப்பிடிப்பு

புத்தம் புதிய வீடியோ சாதனங்களுடன் உங்கள் வைபவங்களுக்கு வருகைதந்து உரியமுறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்பவர்கள்.

## சாயி ரெலி ரேப்

★ திருவிழாக்கள் ★ திருமண வைபவங்கள் ★ கும்பாபிஷேகங்கள்
★ குடிபுகு வைபவங்கள் ★ இசை விழாக்கள் ★ அரங்கேற்றங்கள்

இதுபோன்ற அனைத்து வைபவங்களையும் இயற்கை வர்ணக்கலரில் எழில்மிகு காட்சிகளுடன் ஏற்றமுறையில் வீடியோ படப்பிடிப்புச் செய்து கொள்ள

சாயி ரெலி ரேப் தொலைபேசி: 23759

விபரங்களுக்கு:

## ஸ்ரீசாயி ஸ்ரோர்ஸ்

141, ஆஸ்பத்திரி வீதி,
நவீனசந்தை
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22660

● குறிப்பு: கேக் தயாரிப்பதற்கான சகல பொருட்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



ஸ்ரீதேவிகருமாரி அம்மன் துணை



## கருமாரி மோட்டோர் கம்பெனி

எமது வாடிக்கையாளர்களுக்கு

# ஓர் நற்செய்தி!

இரண்டு சக்கர உழவு இயந்திரங்களுக்கான உதிரிப்பாகங்களும்

மற்றும்

ஸ்கூட்டர், மூன்று சக்கர ஓட்டோ றிக்ஷா, கார், லொறி ஆகியவற்றுக்கான உதிரிப்பாகங்களும்

இல: 281A, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

என்ற முகவரியில் அமைந்திருக்கும் எமது புதிய கிளையில் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

எமது வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவை செய்யும் விதமாக எமது மேற்படி கிளை

நேற்று (சனிக்கிழமை) வைபவ பூர்வமாகத் திறந்து வைக்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

# கருமாரி மோட்டோர் கம்பெனி.

அலுவலகம்:
தென் மயிலை, தெல்லிப்பளை.
தந்தி: கருமாரி தெல்லிப்பளை.

புதிய கிளை:
281A ஸ்டான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 24248 23183
TELEX: 22119
GLOBAL CE
ATTN: KARUMARIE

° 10403



## நத்தார் பண்டிகையோடு
## புதிய வருடத்தில்

உங்கள் பெறுமதிமிக்க முதலீடாக
யப்பானின் முதல்தரமான

# நெஷனல் ரெலிவிஷன்களை ஆக்கிக் கொள்ள

நீங்கள் நாடவேண்டிய இடம்

## V. K. இராசரத்தினம்

பிரதான விற்பனையாளர்
(Key Dealer) யாழ்ப்பாணம்.

95, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## வெளிநாடு செல்வதற்கு

- விமான டிக்கட்
- அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் காசோலை(வங்கியின் கட்டணத்தில்)
- விமான ஆசனப் பதிவுகள்

மற்றும் உங்கள் சகல பிரயாண தேவைகளுக்கும்

(Passport, Visa எந்த ஒரு நாட்டுக்கும் எடுத்துக்கொடுக்கப்படமாட்டாது இதுசம்பந்தமான படிவங்களும் (Application Forms) எம்மிடம் இல்லை)

இன்றே நாடுங்கள்

# மக்கிரேன் டிரவல்ஸ் லிமிட்.

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(Zambian Airways பிரதான விற்பனைப் பிரதிநிதி)
GENERAL SALES AGENTS

த. பெ. எண்: 92 போன்: 24154

வார மலர்
ஈழநாடு
EELANADU VARAMALAR

ஒரு நூற்றுண்டுக்கு மேல்

திட்ட அளவிலேயே இருந்துவரும்

# யாழ். கடல்நீர் ஏரிகள் நன்னீர்த் திட்டம் வெறும் கனவுதானு?

**யா**ழ்ப்பாண மாவட்டத்தின் அரசாங்க அதிபராக 1879இல் இருந்தவர் சேர் வில்லியம் துவைனம் என்ற ஆங்கிலேயராவர். அவர் ஆனையிறவைக் கடந்து பிரயாணம் செய்ய நேரும் வேளைகளில் ஆனையிறவுக் கடனீரேரியினுள் மழைகாலத்தில் கனகராயன் ஆறு, புலுத்தி ஆறு என்பனவற்றினுல் கொண்டுவந்து சேர்க்கப்படும் நன்னீரைக் கண்டார். அவை வீணே கடலைச் சென்றடைவதையும் கண்டார். இக்கடனீரேரியினுள் சேரும் நன்னீரைப் பேணிப் பாதுகாத்து அதனைப் பயன்படுத்த வேண்டும் என்ற ஆவலால், யாழ்ப்பாணக் கடனீரேரித்திட்டம் 1879ம் ஆண்டு முளைவிட்டது. 1930இல் இத்திட்டத்திற்கான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. 1946இல் இத்திட்டம் வகுக்கப்பட்டது. இதனை அமைக்க காலத்திற்குக்காலம் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனல் இன்றுவரை இத்திட்டம் பூரணமாகச் செயற்படுத்தப்படவில்லை.

ஏன்?-

**யாழ்ப்பாணக் கடல்நீர் ஏரிகள்**

**நன்னீராக்கப்பட்டால்**

**கிணறுகள்**

**உவராதல் தடைப்படும்**

**11,000 ஏக்கர் தரிசுநிலம்**

**பயிர்ச்செய்கைக்குப்**

**பயன்படும்**

இத்திட்டம் யாது?

யாழ்ப்பாணக் குடாநாடு கடனீரேரிகளைக் கொண்டமைந்திருக்கின்றது. முக்கியமாக ஆறு கடனீரேரிகள் இக்குடாநாட்டிலுள்ள வடமராட்சி, வடக்குக் கடனீரேரி, வடமராட்சி கிழக்குக் கடனீரேரி, உப்பாற்றுக் கடனீரேரி, தென்கடனீரேர, ஆனையிறவுக் கடனீரேரி, யாழ்ப்பாணக் கடனீரேரி என்பன அவையாகும். இவை யாவும் உவர்நீர் ஏரிகளாகவுள்ளன. இக்கடனீரேரிகள் கடலுடன் ஒடுங்கிய வாயில்களால் தொடர்பு கொண்டிருக்கின்றன. கடல்நீர் இந்த ஏரிக்குள் பிரவேசிக்கும் இடங்களில் அணைகளைக் கட்டுவதன்மூலமும் தேங்கும் நீர் நிலத்தில் பரவாமல் பிரிக்கும் அணைகளைக் கட்டுவதன் மூலமும் இக்கடனீரேரிகளுள் நன்னீரைத் தேக்க முடியும்.

வடமராட்சி வடக்குக் கடனீரேரியும் வடமராட்சிக் கிழக்குக் கடனீரேரியும் தொண்டமானாறு மூலமே கடல்நீரைப் பெற்றுக் கொள்கின்றன. எனவே தொண்டமானாற்றில் 1951இல் 200அடி நீளமும், 34 கதவுகளையும் கொண்ட ஓரணை அமைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் குடாநாடு 400 சதுர மைல் பரம்பினைக் கொண்டது. அதில் 40 சதுரமைல் பரப்பினை வடமராட்சிக் கடனீரேரிகள் அடக்கியுள்ளன. இக்கடனீரேரிகள் 115 சதுரமைல் நீரேந்து பரப்பினையும் கொண்டிருக்கின்றன. அதனுல் இவற்றில் 50,000 ஏக்கரடி நீர் கொள்ள முடியும். தொண்டமானாறு அணையில் கதவுகள் அமைக்கப்பட்டதன் காரணம் வெள்ள நீர் வெளிப்பாய்வதற்காகும்.

இன்னெரு அணை அரியாலையில் அமைக்கப்படவிருக்கிறது. உப்பாறுக் கடனீரேரிக்குள் கடல்நீர் புகாது அரியாலை அணை பாதுகாக்கும். இந்த அணை540 அடி நீளமும் 32கதவுகளைக் கொண்டதாகவும் அமையும். இது அமைக்கப்பட்டால் உப்பாறுக் கடனீரேரிக்குள் 41,500 ஏக்கரடி நன்னீர் நிரம்பியிருக்கும். ஆனையிறவுக்கடனீரேரிக்குள்; யாழ்ப்பாணக் கடனீரேரியினுள் இருந்து கடல்நீர் செல்லாதிருக்க ஆனையிறவு மேற்கு மூடு அணைஅமைக்கப்பட்டுவிட்டது. இந்த அணை மிகப்பெரியது. இரண்டரை மைல்கள் நீளமானது. இதன் மீதுதான் கண்டி வீதி அமைந்திருக்கிறது. ஆனையிறவுக்கடனீரேரி 30 சதுரமைல் பரப்பினையும் 79,000 ஏக்கரடி நீர்கொள்ளளவையும் கொண்டிருக்கின்றது. ஆனையிறவுக்கடனீரேரியுள் கிழக்குக் கடலிலிருந்து கடல்நீர் உட்புகாதிருக்க சுண்டி குளத்தையடுத்து ஒரு மூடு அணை அமையவுள்ளது. இது 2 மைல் நீளமானது. எனவே நான்கு அணைகளும் அமைக்கப்பட்டு சரிவரப்பாதுகாக்கப்படில் இக்கடனீரேரிகள் நன்னீராக மாறிவிடும். அத்துடன் ஆனையிறவுக் கடனீரேரியினுள் சேரும் நன்னீரை வடமராட்சிக் கடனீரேரிகளுக்கு எடுத்துச் செல்ல மண்டலாய்இணைப்புக்கால்வாய் ஒன்று வெட்டப்பட்டு அரை குறையாகவிடப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணக்கடனீரேரிகளை நன்னீராக்கும் திட்டம் 1951 ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கியது. ஆனல் அரை குறையாக விடப்பட்டிருக்கின்றது. தொண்டமானாறு அணை, ஆனையிறவு மூடு அணை, மண்டலாய்க்கால்வாய் என்பன அமைக்கப்பட்டுவிட்டன. ஏனையன தொடக்கப்பட்டு நிறைவேற்றப்படாமல் விடப்பட்டிருக்கின்றன. இத்திட்டம் மட்டும் பூரணப்படுத்தப்பட்டால்.

இன்று உப்புநீரைக் கொண்டிருக்கும் கடனீரேரிகளுள் 1,70,500 ஏக்

(VIIIம் பக்கம் பார்க்க)




சகடயோகி



கேட்டு எழுதியவர்: இ. கந்தசாமி

‘தொண்டா’ பேசுகிறர்

## நல்ல தருணம் இது இதனை நழுவவிடக்கூடாது

“இலங்கைத் தமிழர் பிரச்னை தொடர்பான இந்திய பேச்சுவார்த்தைகளில் எடுக்கப்படும் முடிவுகளைச் சிங்கள மக்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்பதற்காக அப்பேச்சுக்களைக் கைவிட்டுவிட முடியுமா? அல்லது அதன் முடிவுகளைத் தட்டிக் கழிப்பதா? தமிழ் மக்களின் பிரச்னையைத்தான் இப்படியே காலம் பூராவும் விட்டுவிட்டு இருப்பதா?

‘‘இலங்கையில் தமிழ் மக்களுக்கும் சிங்கள மக்களுக்கும் இடையே பெரும் பிரச்னைகள் உண்டு என்பது உள்நாட்டிலும் சரி வெளிநாடுகளிலும்சரி ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டது.

‘‘அப்பிரச்னைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பது நன்ருக உணரப்பட்டு விட்டது

‘‘இந்நிலையில் அப்பிரச்னைகளைக் கண்டும் காணுதது போல் இருந்துவிட முடியுமா?

‘‘முடியவே முடியாது. தீர்க்கத்தான் வேண்டும்; முடிவு எடுக்கத்தான் வேண்டும்.’’

இவ்வாறுசற்றுக்காரமாகவும் தயக்கமின்றியும் துணிச்சலான கருத்துக்களை அள்ளி வீசியவர் வேறெவருமல்ல-

எமதுநாட்டில் புரையோடி விட்ட தமிழ் மக்களின் பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியில் ஈடுபட்டு வரும் இந்திராவின் விசேட தூதுவருக்கு அடுத்தபடியாக அரசியல் தூதுவராக இந்தியாவுக்கும் இலங்கைக்கும் பறந்து திரியும் அமைச்சர் தொண்டமானின் உள்ளத்திலிருந்து வெளிவந்த வார்த்தைகளே மேற்சொன்னவை.

இலங்கைத்தமிழர்விவகாரம் குறித்து இந்தியப்பிரதமர் திருமதி காந்திக்கும் ஜனுதிபதி ஜே.ஆருக்கும் புதுடில்லியில் பேச்சுக்கள் நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை இனக் கலவரங்களை அடுத்துத் தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள தமிழர் கூட்டணித் தலைவர்களும்விசேட அழைப்பின் பேரில் புதுடில்லி சென்று தங்கியிருக்கிருர்கள்.

தமிழ் ஈழ விடுதலைப்புலிகள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் அழைக்கப்படும் தமிழ் இளைஞர்களும் புதுடில்லியிலிருந்து நிலைமையை நோட்டம் விட்டுக் கொண்டிருக்கிருர்கள். இந்திய, இலங்கைப் பத்திரிகைகள், வானெலிகள், தொலைக்காட்சிகள் எல்லாவற்றையும் புதுடில்லிப் பேச்சுவார்த்தைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருந்தன.

ஏன், உலகநாடுகள்கூட புதுடில்லிப்பக்கமே தமதுகாதுகளை வைத்துக்கொண்டிருந்தன.

இலங்கையில் எங்குபார்த்தாலும் சிறுவர்முதல் பெரியவர்

(VIIIம் பக்கம் பார்க்க)



# சிறு பிணிகளைக் கண்டு அஞ்சாதீர் அவை சாதாரணமானவை!

## இளம் கர்ப்பிணிகளுக்கு

தாய்மை அடையும் போதுதான் ஒரு பெண் முழுமை அடைகிறாள். திருமணமான இளஞ்சோடிகள் குழந்தைப் பாக்கியத்தை மிக ஆவலோடு எதிர்நோக்கியிருக்கிறார்கள். முதற்தடவையாக கர்ப்பம் தரிக்கும் பெண்களின் மனதில் பலவிதமான அச்சங்கள் ஏற்படுவது இயல்பு. முன் அனுபவம் இல்லாதவர்கள் பிறர் சொல்வதைக் கேட்பதன்மூலம்தான் ஓரளவு எல்லாவற்றையும் ஊகிக்கிறார்கள். முழுமையான, தெளிவான விபரங்களைத் தெரிந்திருக்காத இளம்பெண்கள் சிறுசிறு மாற்றங்களைக் க்ண்டதும் மனதில் பயப்பிராந்தி கொள்ள ஆரம்பிக்கின்றனர். இதனால் அனுபவமற்ற அப்பாவிக் கணவனும் பதற்றம் கொள்கிறான். எனவே ஒவ்வொரு இளம்பெண்ணும் கர்ப்பம் தரிக்கும்போது ஏற்படுகின்ற சாதாரண பிணிகளைப்பற்றி அறிந்திருப்பதன் மூலம் பலவிதமான மனப் பயங்களிலிருந்து விடுபடமுடியும். கிராமமட்டத்தில் மருத்துவ மாதர்களும், குடும்பத் திட்டப் பிரிவின் தொண்டர்களும் ஓரளவு சுகாதார போதனைகள்மூலம் இத்தகைய பிணிகளைப்பற்றி எடுத்துரைக்கிறார்கள் எனினும், போதிய ஊழியர்கள் இன்மையால் இன்னமும்கூடப் பல பெண்கள் அநேகமானவற்றைத் தெரிந்து கொள்ளாமலே இருக்கிறார்கள்.

இப்போது நாங்கள் கர்ப்பவதிகளிடம் ஏற்படுகின்ற சில சிறு பிணிகளைப்பற்றி அவதானிப்போம். முக்கியமான சிறு பிணிகளாவன:-

(1) வாந்திஎடுத்தல் (காலை நோய்)
(2) வாயூறல்.
(3) தலைச்சுற்று.
(4) மூலம்
(5) மலச்சிக்கல்
(6) கால்கை உழைச்சல்
(7) நாள வீக்கம்
(8) துரித சிறுநீர்ப்போக்கு அல்லது மட்டான போக்கு
(9) வெள்ளைபடுதல்

### காலை நோய்

கர்ப்பம் தரித்துச் சில நாட்களுக்குள்ளாகவே இந்த நோயைப் பல பெண்களிடம் அவதானிக்கக் கூடியதாகஇருக்கிறது. காலையில் நித்திரைவிட்டெழும்போதே தலைச்சுற்று, வாயூறல், பிரட்டல், வாந்தி என்பன ஆரம்பிக்கும். நேரம் செல்லச் செல்லக் குறைந்து கொண்டுவரும். இதனால்தான் இதைக் காலைநோய் என்று குறிப்பிடப்படுகிறது. அநேகமாக இவ்வறிகுறிகள் ஆறுவது வாரத்தில் ஆரம்பித்துப் பதினான்காவது வாரம்வரை நீடிப்பதுண்டு. சில கர்ப்பிணிகளுக்கு இந்த நிலை ஏற்படாமலும் போகலாம். வேறு சிலர் இதனால் மிகவும் அவஸ்தைப்படுவார்கள். அளவுக்குமிஞ்சி வாந்தி எடுப்பதனால் வயிற்று நோவு, உடலில் நீரின்மை, தலைச்சுற்று முதலானவை ஏற்படலாம். பொதுவாக இப் பிணிக்கு எந்த வைத்தியமும் தேவையில்லை. மனதுக்குப் பிடித்தமானவற்றை மட்டும் இந்நேரங்களில் அருந்துதல்



நன்று. உடலில் நீர்குறைந்து விடாமல் அதிக நீராகாரமும் உட்கொள்ள வேண்டும். எலுமிச்சம்பழத் தண்ணீர், தோடம்பழச்சாறு, இளநீர் போன்றவை நல்ல ஆகாரங்களாகும். படுத்து ஓய்வுகொள்ளுதலும் விரும்பத்தக்கது. எதையுமே உட்கொள்ள முடியாமல் தொடர்ச்சியாக மிகவும் அவதியுறும் பெண்கள் மாத்திரம் வைத்தியரை நாடலாம்.

### வாயூறல்

அதிக உமிழ்நீர் மற்றும் சமிபாட்டு நொதியங்கள் சுரப்பதால் இந்நிலை ஏற்படுகிறது. அடிக்கடி துப்ப வேண்டும் போலவும் இருக்கும். இதைப் பற்றி அதிகம் பயம்கொள்ள வேண்டியதில்லை.

**ச. முருகானந்தன்**
உதவி வைத்திய அதிகாரி

### தலைச்சுற்று

சாதாரணமாக அதிக நொதியங்கள் சுரப்பதனாலும்உடலில் சக்தி குறைவதினாலும் இந்நிலை ஏற்படுகிறது. ஆனால் சிலரில் மூன்று மாதங்களுக்குப் பின்னரும் இந்நிலை இருக்கும். தொடர்ச்சியாக இருக்கும் பெண்கள் இரத்த அமுக்கத்தைச் சோதித்துப் பார்த்தல் நன்று. ஏனெனில் இரத்த அமுக்கம் கூடும்பொழுதும் தலைச்சுற்று ஏற்படுவதுண்டு.

### மூலம்

கருப்பையின் பாரத்தினால் கீழ்ச்செல்லும் இரத்தநாளங்கள் அமுக்கப்படுவதால் இந்நிலை உருவாகிறது. சாதாரண நாட்களில் மூலவியாதி இல்லாதவர்கள் கூட கர்ப்பவதிகளாக இருக்கும்போது மூலவியாதியால் அவஸ்தைப் படுகிறார்கள். இம் மூலவியாதி தற்காலிகமான ஒன்றாதலால் அறுவைச்சிகிச்சை அவசியமற்றது. நோவிலிருந்து விடுபடுவதற்கும், சிக்கலின்றி மலம் கழிப்பதற்குமாக வைத்திய ஆலோசனையை நாடலாம்.

### மலச்சிக்கல்

இயற்கையான உணவு முறைகளால் இதைத்தவிர்க்கலாம். பழவகை கீரை, மரக்கறி முதலானவற்றைக் கணிசமான அளவில் சேர்ப்பதன் மூலம் மலச்சிக்கலைத் தவிர்க்க முடியும்.

### கால்கை நாரி உழைச்சல்

அநேகமான கர்பிணிகளில் பொதுவாக இருக்கின்ற ஒரு பிணி இதுவாகும். கைவிரல்களில் ஊசிகுத்துவது போலிருக்கும். தோள்பட்டைகள் நோவெடுக்கும்; நாரி உழையும்; காலைப்பிடிக்கும். மார்பகங்களிலும் நோவு எடுப்பதுண்டு. இந்நிலையும் தற்காலிகமானதால் அதிகம் பொருட்படுத்தத் தேவையில்லை. மிகவும் சிரமம் இருப்பின் வைத்திய ஆலோசனையை நாடலாம்.

### நாளவீக்கம்

கால்களிலுள்ள நாளங்கள் வீங்கிப்புடைத்து நோவெடுக்கும் நிலை சில கர்ப்பிணிகளுக்கு ஏற்படுவதுண்டு. இது அநேகமாகப் பிரசவகாலம் நெருங்கி வரும் போது ஏற்படுகிறது. சிசுப்பைவளர்ந்து, அதன் பாரம் கால்களிலிருந்து இதயத்திற்கு இரத்தத்தைக் கொண்டுவரும் நாளங்களை அமுக்குவதாலேயே இந்நிலை ஏற்படுகிறது. பிரசவத்தின் பின் இந்நிலை நீங்கிவிடும் எனினும் மிகவும் கஷ்டப்படுபவர்கள் வைத்திய ஆலோசனையுடன் 'கிறேப் பண்டேஜ்' (Crape Bandage) ஐ காலில் சுற்றிக் கொள்ளலாம்.

### அடிக்கடி சிறுநீர் கழிதல்

கர்ப்பம் தரித்து முதல் மூன்று மாதங்களிலும், பின்னர் கடைசி மாதத்திலும் சிறுநீர் அடிக்கடி போகக் கூடும் மட்டான, ஆனால் துரிதமான இப்போக்கிற்குக்காரணம் சிறுநீர்ப்பையின் வாசற்புறத்தைக் கருப்பை அமுக்குதலேயாகும். இதைப்பற்றி அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

### வெள்ளைபடுதல்

ஜனனேந்திரிய உறுப்பின் உட்குழாய்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்காக வெளியேறும் சுரப்பு கர்ப்பிணியில் அதிகம் சுரக்கப்படுகிறது. இதைக் கண்டு பெண்கள் பயம் கொள்ள வேண்டியதில்லை. ஆனால் கடியும் சேர்ந்திருப்பின் வைத்திய ஆலோனையை நாடுதல் வேண்டும். மொனீலியா என்றழைக்கப்படும் பங்கசு தான் அநேக கர்ப்பஸ்தீரீகளில் கடியை உண்டுபண்ணுகிறது. சலரோகம் உள்ளவர்களுக்கு, அதிக சீனி வெளியேறுவதால், பங்கசு வளர்ச்சிதுரிதமாக இருக்கும். எனவேகடியுடனான வெள்ளைபடும் கர்ப்பிணிகளின் சலத்தைச் சோதித்துச் சலரோகம் உண்டா என்பதை அனுமானிக்கவேண்டும். இவை தவிர வெகுசிலருக்கு வேறு சில வருத்தங்கள் கர்ப்பிணிகளாக இருக்கும்போது ஏற்படுவதுண்டு. அவைபற்றி பிறிதொரு சமயத்தில் அறிந்து கொள்வோம்.

# மார்கழி பிறந்தால் மகிழ்ச்சி எமக்கு

மார்கழி மாதம் பிறந்து விட்டால் கத்தோலிக்க மக்களுக்குப் பெருமகிழ்ச்சி, சிறுவர்களுக்கோ கிறிஸ்மஸ் ஆரவாரம். புது ஆடைகள் வாங்குவதில் மட்டுமல்ல, கிறிஸ்மஸ் தாத்தாவாக வேஷம் போட்டுக் கரோல் நிகழ்ச்சிகளில் ஆடிப்பாடுவதில் பெரு இன்பம்.

கர்த்தர் யேசு அவதரித்த நன்னாளே கிறிஸ்மஸ் பண்டிகை, மனுக்குலத்தை இரட்சிக்க யேசுபெருமான் அவதரித்த நல்ல தினமாக இதனை மகிழ்வோடு கொண்டாடுகிறார்கள்.

லத்தீன் அமெரிக்காவில் கிறிஸ்மஸ் பண்டிகை உறியடி உற்சவம் மாதிரியே கொண்டாடப்படுகிறது. ஒரு பெரிய மண்பானைக்குள் பல பரிசுப் பொருட்களைப் போட்டுஅதனை மேலே கட்டி, அந்தப்பானையைச் சிறு குழந்தைகளைக் கொண்டு அடிக்கச் சொல்கிறார்கள். ஒரு குழந்தைக்கு மூன்று முறை மட்டுமே சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. பானை உடைந்து பரிசுப் பொருட்கள் கீழே விழும் போது குழந்தைகள் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் ஓடிப்போய் கிறிஸ்மஸ் கீதங்களை இசைத்து அவற்றைப் பொறுக்கிக்கொள் கிறார்கள்.

கிறிஸ்மஸ்தாத்தாவைசிவந்த முகத்துடன், பெருத்த வயிற்றுடன் உருவாக்கிய ஓவியர் இன்றில்லை. நூற்றுப்பத்து வருஷங்களுக்கு முன்னர் வாழ்ந்த அவர் பெயர் தோமஸ் றெஸ்ட் ஆகும்.

கிறிஸ்மஸ் தாத்தாவை SANTA CLAUS என ஆங்கிலத்தில் அழைப்பதுண்டு. ஆனால் நாட்டுக்கு நாடு வித்தியாசமாக அழைக்கப்படுகிறார் கிறிஸ்மஸ் தாத்தா.

இங்கிலாந்து, அமெரிக்கா, நெதர்லாந்து- SANTACLAUS
பிரான்ஸ் - PERE NOEL
ஜேர்மனி - KRISS KING
சுவீடன் - JULOMTE
இத்தாலி - LA BEFANA
சுவிட்சலாந்து - SAINT LUCY
கிறீஸ் - SAINT BASIC
போலாந்து - FATHER FROST




கிறிஸ்மஸ் விடுமுறைஉலக நாடுகள் இரண்டில் மட்டும் விடுவதில்லை. பாகிஸ்தான், தைவான் ஆகியவையே இந்த இரு நாடுகளாகும்.

**சிவமூர்த்தி யுஹாந்தன்**

## எதிர்காலம் எப்படியோ?

கட்டை வண்டியில் தாத்தா போனார்
கரிக் கோச்சியிலே அப்பா போனார்
ஏரோப்பிளேனில் நாங்கள் போறோம்
எங்கள் பாப்பா எதிலே போவான்?

நாட்டுக் கூத்தைத் தாத்தா பார்த்தார்
நாடகத்தை அப்பா பார்த்தார்
சினிமா ரீவீ நாங்கள் பார்க்கிறோம்
சின்னப் பாப்பா எதனைப் பார்ப்பான்?

பதினாறு முழத்தைப் பாட்டி கட்டினாள்
பத்து முழத்தை அம்மா கட்டுறாள்
பாவாடை சட்டை நாங்கள் போடுறோம்
பாப்பா எதனைப் போடப் போறான்?

குரக்கன் பிட்டுத் தாத்தா காலம்
குத்தரிசிச் சோறப்பா காலம்
கோதுமை றொட்டி எங்கள் காலம்
குளிகைகள் ரொனிக்கா பாப்பா காலம்?

தாத்தா பயந்தது தர்மத்துக்கு
அப்பா பயந்தது தாத்தாவுக்கு
நாங்கள் பயந்தது ஆமி நேவிக்கு
பாப்பா எதற்கும் பயப்படமாட்டான்.

**- மாதவி**
9ஆம் வகுப்பு
வேம்படி மகளிர் கல்லூரி

மண்டைதீவு கலைச்செல்வி

# கற்பாறைகள் கண்ணீர் சிந்துகின்றன...



அந்த வீட்டில் அவளைத் தவிர வேறு யாருமேயில்லை. இரவில் துணைக்கு வந்து படுக்கும் அவள் மாணவி பத்மா கூட இன்று ஏதோ திருமணத்துக்குப் போனதால் வராமல் விட்டுவிட்டாள். அறைகளையும் ஒரு ஹோலையும் கொண்ட அந்தச் சிறிய வீட்டில் நிசா தனித்துப்போய் கட்டிலில் படுத்திருந்தாள். இப்படி அவள் பல தனிமைகளை சந்தித்திருந்த போதும் இன்றைய நிலை அவளுக்கு ஏதோ ஒரு திகிலைக் கொடுத்தது. விழிகள் முகட்டிலே நிலை குத்தி நிற்க... மல்லாக்காகக் கிடந்தாள் நிசா. திடீரென அந்தப் பொல்லாத இருமல் வந்து அவளைஒரு கணம் புழுவாக்கித் துடிக்க வைக்கிறது. தொண்டை இலேசாக வறண்டது. எச்சிலை பக்கத்தில் இருக்கும் தகரடப்பாவுக்குள் உமிழ்ந்து விட்டு நிமிர்கிருள் நிசா. நெஞ்சம் அளவுக்கு அதிகமாக அடித்துக்கொண்டது. உடலெங்கும் வியர்வைத் துளிகள், குளிர்வது போன்ற ஒரு பிரமை. அவளுக்குள்ளேயே வளர்ந்து முற்றிய அந்தப் பயங்கர வியாதி அவளை முழுமையாகவே விழுங்குகிற நேரம் வந்து விட்டது என்று நிசாவிற்கு புரிந்துவிட்டது,

தொடர்ந்து வந்த இருமலின் கோரத்தை சமாளிக்க முடியாமல் அப்படியும் இப்படியும் புரண்ட நிசாவின் விழிகள் புரண்டு உருண்டன. வாயில் இருந்து வடிந்த குருதி அவள் கழுத்தில் வந்து தேங்கி... பிடரிவழியே தலையணையை நனைத்தது.

- அம்...மா அம். மா ! -

முன்னெருபோதும் இல்லாத மாதிரி அவள் முனகிக் கொண்டிருந்தாள்.

- அம்மா எனக்கு... த...ண்...ணி தரக்கூட ஆருமேயில்லையம்மா... என்னை உடனே... உன்னே ட கூப்பிடம்... மா.. சகோதரங்களுக்கு வாழ்க்கையென்ற... சி... றகை பொருத் திவிட்டேன்... அதுகள் எல்லாம்.. என்னை எட்... டாத் தொலைவில விட்டு... ட்டு - எங்...கோ பறந்து விட்டனம்மா... அதுகளுக்குச் சிறகு முளைத்துவிட்டது. என... க்குச் சி...றகு. ஒடிந்து விட்டது. ஓ...சருகான என் கனவுகளே! சாம்பலாகிவிட்ட இனிய நினைவுகளே...! இலட்சியங்களே! சமாதியாகிவிட்ட என் கற்பனைக் கோட்டைகளே. என் அத்தியாயம் முடியப் போகிறது. என்வாழ்வுப் பய...ணம் முடியப்போகிறது... ! -

நிசாவின் ஆத்மா ஓலமிட்டது.

- நான் ஏன் அழுகிறேன்... எதற்காக அழுகிறேன்....சாவதற்குப் பயப்படுகிறேனு... வாழ்க்கை முழுவதும் இழப்புக்களையே கண்ட எனக்குச் சாவு ஒரு நிம்மதி... ! -

நிசா முனகினுள். எதிரே சுவரில் வைக்கப்பட்டிருந்த அந்த இயேசு சிலை அவள் கண்களைப் படபடக்க வைத்தது. அந்த இயேசு சிலையைப் பார்க்கப் பார்க்க அவளுக்குள்ளேயே ஒரு வேகம் தலையெடுத்தது. மார்பு ஏறி இறங்கிற்று. கண்கள் அதில் வெறித்து நிலைத்தன.

- சிறில் சிறில்.... - ஆம், அந்தச் சிலையைத் தன் அன்பின் காணிக்கையாகவும் காதலின் ஆழத்தின் காரணமாகவும் சிறில் அவளுக்காக இருபது வருடங்களுக்கு முன் கொடுத்தன.

- சிறில் உங்... களை ஒரு தரம்... ஒரே ஒருதரம் பார்க்க வேணும்போல இருக்கு... சிறில்... நான் போகப் போறன் சிறில் அழுதாள். குலுங்கிக் குலுங்கி அழுதாள். பைத்தியம்போல வாய்விட்டே கதறினுள். இருமல் இடையே குறுக்கிடவே மீண்டும் கபப்பு மூச்சுத் திணறல். ஒரே குருதி... குருதி வெள்ளம்.

ஏதோ ஒரு உந்தலில் எழுந்து உட்கார்ந்தாள் நிசா. பக்கத்தில் உள்ள மேசைக் கடிகாரத்தைப் பார்த்தாள். இரவு ஏழரை மணி. திரும்ப அந்த இயேசு சிலையைப் பார்க்கிருள். இப்பொழுது அவள் மூச்சு விடுவது அந்த வீடு முழுக்க எதிரொலித்தது. மெல்லக் கட்டிலை விட்டெழுந்தாள்.

உடல் கிடுகிடுத்தது. கண்கள் இருண்டன. கரங்களால் கண்களை கசக்கியபடியே சுற்றுமுற்றும் பார்த்தாள் நிசா. எதுவுமே தெரியவில்லை. ஏதோ ஒரு ஊசுத்தில் சுவரில் சாய்ந்து எட்டி யன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டாள். மூச்சு இரைத்தது. மெல்லத் தாவி றிசிவரை எடுத்தாள். பழக்கப் பட்ட... பாடமான... இருபது வருடங்களுக்கு முன் அவள் மென் கரங்களால் சுழற்றப் பட்ட அந்த இலக்கங்களைச் சுழற்றுகிருள். விரல்கள் 'டைப்' அடித்தன.

முன்பெல்லாம் அவளிடம் டெலிபோன் இல்லை. சிறிலைச் சந்தித்துக் கதைக்க வேண்டியிருந்தது. இப்போது டெலிபோன் இருக்கிறது. சிறிலைக் காண முடியாத- கதைக்க முடியாத- பிறரின் தலையீடுகள் இத்தனை நாளும் அவளுக்குள் அடக்கி ஒடுக்கப்பட்டிருந்த உணர்வுகளையெல்லாம் இன்று அணை உடைத்துப் பிரவாகிப் பதுபோன்ற உணர்வு. ஏதோ ஒரு புதிய தெம்பு பிறக்க உதடுகள் கோணித் துடித்தன.

-- ஹலோ... - தன்னுடைய பலமெல்லாம் சேர்த்துக் குரல் கொடுத்தாள் நிசா.

- ஹலோ... யார் பேசிறது. நான் டொக்ர சிறில் - மேலே அவன் என்ன சொன்னுனே! நிசா மெய்மறந்தாள். ஒரு நிமிடத்தில் தன்னைச் சுதாகரித்துக் கொண்டாள் நிசா. அதேதுடிப்பு...அதே கம்பீரம்; நீங்கமாறவே இல்ல சிறில். என்னைத் தொரியவில்லையா...? உங்க நிசா சிறில்... மனம், உடைந்து கதறியது எப்படியும் சொல்லித்தானே ஆக வேண்டும் என்ற நினைவோடு பேசினுள்.

- நா...ன்... நான் நிசா பேசிறேன்... -

- ஓ... ஓ... நிசாவா! நீ... - மறுமுனையில் அதிர்ச்சி, ஆச்சரியம், ஆனந்தம்! அவள் அந்த வேதனையிலும் மெல்லச் சிரித்தாள்.

- சிறில், நான் உங் களை உட...னடியா சந்திக்க விரு...ம்புறன்... இருபது வருடங்களுக்கு முன் நாமிருவரும் கடைசியாச் சந்தித்த அதே கடற்கரையில்... அதே பாறைக்கருகில்... உடனடியாய்! -

- நிசா... நீதானு! இத்தனை வருடத்துக்குப்பிறகு... நிசா எங்கட இலட்சியங்களை மறந்திட்டியா?.. அதுசரி இந்த நேரம்... -!

- ஆம் சிறில், எனக்கு நேரம் வந்திட்டுதே... -

- இதோ வாறேன். -

படக்கென போனவைப்பது கேட்கிறது.

நிசாவின் கண்களில் புதுத் தெளிவு.

வானத்திலே விண்மீன்கள் எந்தக் கவலையுமின்றிக் கண் சிமிட்டிக் கொண்டிருந்தன. பத்மா பிளாஸ்கில் ஊற்றி வைத்துவிட்டுப்போன கோப்பியை எடுத்துக்குடித்தாள். முன்பைப்போல சிறிலைக் காணச் செல்லும் போது ஏற்பட்டதடைகள் இல்லை. சொந்தத்தைச் சுட்டிக்காட்டி... சாதிச்சுவரைச் சாட்டி... அவளைப்பிடித்து இழுத்து வீட்டுக்குள்ளே அடைத்து... அவள் காதலைப் பெயரளவில் முறித்தவர்கள் இங்குயாருமேயில்லை.

- நிசா நீ போகக்கூடாது.. அந்த சாதி குறைஞ்சவனைத் தாரக்கப் போறதாய் இருந்தால் எங்கட பிணத்தைத்தான் காணுவாய்... இன்றையோடு அவனை மற... உன் சகோதரங்களுக்காக... கௌரவத்துக்காக... நீ அவனை மறக்கத்தான் வேணும். -

அவனுடைய அம்மா அவளைத் தடுத்து நிறுத்தியது இன்று போல் இருக்கிறது. அன்று அவர்களால் அவளைத் தடுக்க முடிந்தது. ஆனல் அவள் உள்ளத்தில் நிலையாகி விட்ட சிறிலைப்பிரிக்க முடியவில்லை. அவன் முகத்தைக் காணமலேயே இந்த இருபது வருட காலமும் அவள் வாழ்ந்து விட்டாள். கனவில் மிதந்து... கற்பனையில் நனைந்து இதயத்தால் பிணைந்து ... ஓ... அவள் வாழ்க்கையாரலுமே வாழமுடியாது.

குளிர் காற்று அவள் பலத்தைச் சோதித்தது, இருப்பினும் அந்த நிலவொளியில் ஏதோ ஒரு இலட்சியவெறியுடன் நடந்து கொண்டிருந்த நிசா, அந்தக் கற்பாறையடியில் வந்து நின்ற போது ஏதோ பெரியஉலக சாதனையையே நிலைநாட்டி விட்ட பெருமையில் பூரித்தாள்.

அந்தமகிழ்வு கணநேரம் தான் உடனேயே அவளுக்கு குமட்டிக் கொண்டு வந்தது இரத்தம் வாந்தியாகிடல் நீரோடு... அவள் செயலிழக்கின்ற வேளை...

- நிசா... என்னம்மா இது... ஐயோ நிசா!... - ஒரே பாய்ச்சலில் கத்திக்கொண்டே அவளைத்தூக்கினுன் சிறில்.

- சிறில்... சிறில்... வ...ந்... திட்டிங்களா... நான் போய்க்கொண்...டிருக்கிறேன் சிறில்!- அவள் மலங்க மலங்க அவன் முகத்தை பார்த்தாள். இதே பாறையில் இருவரும் கடைசியாகச்சந்தித்தபோது பரிமாறிய வார்த்தைகள் அவள் அறிவு மயங்கிவிட்ட நிலையிலும் அவற்றில் ஒலித்தது.

- நிசா... நான் விரும்பினது உன்னுடைய தூய்மையான உள்ளத்தைத்தான். களங்கமில்லா அன்பைத்தான்.! கேவலம், உன்னுடைய அழகையோ... உடலையோ... உயர்ந்தசாதியையோ. நான் லவ்பண்ணேல்ல... நிசா, நான் உன்னைக்கல்யாணம் செய்வதால் உன்னுடையகுடும்பமே அழியுமென்ருல் நான் அதை விரும்பயில்லை... நிசா, நீ என்றைக்குமே என் மனைவி தான். உன்னுடையமுகத்தைப் பார்க்காமலேயே உன்னுடைய நினைவுகளோடு என்சேவையைத் தொடர என்னல் முடியும்.! - இருபது வருடங்களுக்கு முன் அவன் சொன்னுன். நிசாவிற்கு அப்போது என்ன செய்வதென்றே புரியவில்லை. உள்ளத்தை அவனும் உறுதிப்படுத்தினுள்.

- சிறில், உங்களால அப்படி வாழ முடியுமென்ருல் என்னுலும் வாழ முடியும் சிறில். நீங்கள் என் கணவன் எங்களுடைய வாழ்க்கை மற்றவர்

(VIIம் பக்கம் பார்க்க)

எமது சிறுகதை

## மன்னிக்க வேண்டுகிறேன்

உங்களைத்தான்! இப்படியே
உறக்கமின்றி யிருப்பதேனே?
பங்கமென்ன நேர்ந்ததுவோ
படிப்பதற்கு மனமிலையோ?
திங்களுக்குச் சென்றவரின்
திறன்காண விழைகிறிரோ?
இங்கெனையே தவிக்கவிட்டு
இதுவென்ன சிந்தனையோ?

பார்புகழ நானெருகை
பார்த்திடுவேன் படிப்பிலென்நீர்
சோர்வடைந்து சோகமுடன்
சோம்பியிருப் பதேனே?
போர்வையினை யெடுத்துவைத்துப்
போய்ப்படுக்க முன்னரெனை
நீரணைப்பீர் அந்தவின்பம்
நீடுலகில் ஏதுமில்லை.

அன்றொருநாள் வந்திருந்தாள்
அத்தைமகள் ... ஞாபகமா?
தென்றலென்றும் திங்களென்றும்
சீர்தமிழ்ப்பாச் செல்வியென்றுஞ்
சென்றழிந்த நீரிரவிற்
சிந்தனையே யின்றியெனை
அன்றுமறந் தேங்கவிட்டீர்
அணையாமற் சென்றதுமேன்?

மாலையிளம் மங்கலிலே
மகிழ்ந்தெனையே தூண்டிவிட்டு
வேலைபல என்றுசொல்வீர்
வேடிக்கை பார்ப்பதற்கா?
பாலருந்திப் பழமருந்திப்
படுக்கையிலே செல்கையிற்றன்
மாலையிலே பற்றவைத்த
மனங்குளிர அணைத்திடுவீர்.

எனைத்தினமும் தூண்டுகிறீர்
எரிகின்ற நெஞ்சுணர்வை
நினைந்தொருக்கால் பார்த்ததுண்டா
நெஞ்சழுத்தங் கண்டதுண்டா?
தினமுமக்காய் ஒளிருகிறேன்
தித்திப்பாய்க் கதைத்ததுண்டா?
மனதினிலே பதித்துவையும்
மறக்காம லெனையணைக்க.

மன்னிக்க வேண்டுகிறேன்
மனதிலென்ன சந்தேகம்?
கன்னிப்பெண் இப்படியே
கண்கலங்கிப் பேசுகிருள்
என்றுமட்டும் வாசகர்கள்
எண்ணிவிட்டால் ஏமாந்தீர்
மின்விளக்கு நானய்யா
மிகுதிக்கதை தெரியாதோ?

- எஸ். வி. எஸ். சிதம்பரநாதன்




[5]

''சென்றவரின் கடிதத்தை நோக்கி நோக்கிச்
சிலதினங்கள் சென்றனவே இரவில் ஓர்நாள்
என்துணைவன் கனவினிலே காட்சி தந்தார்
எழிலார்ந்த அவர்முகத்திற் சோகம் கண்டேன்
ஒன்றுமே பேசாதே என்னைப் பார்த்தும்
உருகுகின்ற விழிகொண்டு மகளைப் பார்த்தும்
நின்றவரை நான்பார்த்தே என்ன என்றேன்
நிமிடங்கள் சிலசெல்ல அவரோ சொன்னார்''

''உயிரனையாய் கயல்விழியும் நீயும் இந்த
உலகில் அலைந் திடப்போறீர்! அதனா லேதான்
துயரடைந்தேன் என அழுதார் சற்றுப் பின்னர்
துயில்நீங்கிக் கண்விழித்தேன் கனவின் அர்த்தம்
நயமிலையே எனநினைத்தேன் எனினும் என்றன்
நங்கைகயல் விழிக்கதனை உரைத்தேன் இல்லை
அயலவரோ அவ்வேளை இங்கு வந்தே
அதிர்ச்சிதரும் செய்திஒன்றைக் கூற லானார்''

இவ்வாறு முதுமகளோ வருந்திக் கூற
எழிலார்ந்த கயல்விழியாள் நடுங்கிக் கொண்டே
செவ்வானம் இருண்டதுபோல் முகம்தான் மாறத்
'தெய்வமே என்அப்பா அப்பா'' என்றே
அவ்வேளை கதறுதலும் முதிய பெண்ணாள்
அம்மாஇவ் விருந்தினர்க்குத் தேநீர் வேண்டும்
இவ்வேளை அழலாமோ முதலில் தேநீர்
எடுத்துவா எனமகளை அனுப்ப லானாள்.

மகள்அழுதல் தனைப்பொறுக்கா அன்புத் தாயை
மனத்துள்ளே குமார்என்பான் வாழ்த்தும் வேளை
அகமெங்கும் முகமெங்கும் துன்பம் தோன்ற
அந்தமுது மகள்மேலும் சொல்ல லானாள்
''மிகவருந்தி அயல்வீட்டுப் பெண்ணாள் வந்து
வேதனைநீர் அடையாதீர் கொழும்பே யென்று
புகல்கின்ற பதியினிலே கலவ ரம்தான்
பெருநெருப்பாய்ப் பரவியதாம்'' என்றே சொன்னாள்

''கண்டகன வும்பாவை சொன்ன சொல்லும்
கலந்தொன்றாய்ப் படுக்கையிலே கிடந்த என்னைக்
கொண்டபெரும் விடமாகத் துன்பம் செய்யக்
குவலயத்தே எதும்செய்தல் அறியேன் ஆகிக்
கண்டுநிகர் மொழிச்சிறுமி கேட்பா ளாகில்
கலங்குவளோ எனமேலும் ஏங்க லானேன்
கொண்டதுயர் வளர்ந்ததன்றிச் சிறிது தானும்
குறையவில்லைக் குறையவில்லைத் துடிக் கலானேன்.

சுற்றத்தார் ஒருவரோ மறுநாள் வந்தே
''சொலவேண்டும் ஒருசேதி முதலில் நீதான்
பெற்றசேய் தனைஅப்பால் அனுப்பாய் என்றார்
பிள்ளையைநான் அனுப்பினேன் அவரோதானும்
உற்றதுயர் தனை மறைத்தே ''விதியைவெல்ல
உலகினிலே முடியுமோ?'' என்றே கேட்டார்.
''பற்றுடையீர் விடுகதையை விட்டேசேதி
பட்டென்று சொல்லு''மென்றேன் துடிப்பினோடே

''அம்மாநின் துணைவனார் கொழும்பின்கண்ணே
அமர்ந்திருந்தார் கடையினிலே அந்தவேளை
இம்மா நிலம்ஒருங்கே திரண்டாற் போல
எண்ணற்றோர் கூடினாராம் அவரைக்கண்டே
தம்மேனி நடுக்கமுறத் தமைமறந்தே
தடுமாறிக் குழறினராம் அந்தவேளை
எம்மாலே சொலமுடியாச் சம்பவம்தான்
எய்திற்றாம் எய்திற்றாம்'' அந்தோ என்றார்.

''கேட்டதுமே மயக்குற்றேன் தெளிந்தபோது
காலடியிற் கிடந்தழுதாள் புதல்விநானோ
வாட்டமுற்ற என்மகளைத் தேற்றத்தானும்
வையகத்தே எனைத்தேற்றிக் கொள்ளத்தானும்
மாட்டேனாய்ப் புரண்டழுதேன் எங்கள்வாழ்வு
காட்டெருமை மிதித்திட்ட சிறுபூவாகிக்
கசங்கியே சிதைந்ததென'' அழுதேசொல்வாள்.

பின்நடந்த சம்பவத்தைத் தொடர்ந்து சொன்னாள்
''பேரிடரில் நாம்மூழ்கி இருந்த வேளை
முன்னெமக்குக் கடன்கொடுத்தோர் எரிந்த வீட்டில்
பிடுங்கியதே அறுதியென எடுத்துச் சென்றார்
அன்புடையோர் போல்நடந்த சுற்றத் தாரும்
அவலமென நம்முற்றம் மிதியார் ஆனார்
அந்நிலையில் கயல்விழியாள் ரோஷத் தோடே
கல்லுடைக்கப் புறப்பட்டாள் அந்தோ அந்தோ!

எவ்வளவோ நான்தடுத்தும் கேட்டாள் இல்லை!
எண்ணுங்கால் அதைவிடுத்தால் வழியும் இல்லை!
செவ்வியதாம் சிறியமலர் ஒவ்வோர் நாளும்
செகத்திடையே வாடிடுதல் காணக் காண
இவ்விதயம் பொறுப்பதில்லை விரைவில் தெய்வம்
இச்சிறிய மலருக்கே அருள்செய் யாதோ
இவ்வினிய மலர்தனக்கே ஏற்ற தான
இடமதனை அந்தஸ்தை எய்திடாதோ?

(வளரும்)

## சாந்தன் சோவியத் செல்கிறார்

இலங்கை- சோவியத் நட்புறவுக் கழகம் தன் வெள்ளி விழாவையொட்டி நடத்திய கட்டுரைப் போட்டியில் ஐயாத்துரை சாந்தன் முதலிடம் பெற்றுள்ளார். இதற்கான பரிசு சோவியத் யூனியனுக்கு இலவசப் பயணமாகும். அடுத்த ஆண்டு முற்பகுதியில் இவ்வாய்ப்பு அவருக்கு வழங்கப்படும்.

சாந்தன், சாகித்தியமண்டலப் பரிசு பெற்ற சிறுகதை எழுத்தாளர். ஒரு குறுநாவலும் ஐந்துகதைத்தொகுதிகளுமாக அவரது ஆறு நூல்கள் இதுவரை வெளிவந்துள்ளன. இவற்றில், 'முளைகள்' 'கிருஷ்ணன் தூது' ஆகிய இரண்டு தொகுதிகள் கடந்த ஆண்டு தமிழ் நாட்டில் பிரசுரிக்கப்பட்டவை.



# தேவனை நினைவு கூர்வோம்

['ஆல்றவுண்டர்' என்று பரவலாகஎல்லோராலும், துணிச்சல் மிக்க எழுத்தாளன், பேச்சாளன் என்று இலக்கியவாதிகளாலும் போற்றப்பட்டு வரும் அமரர் தேவனின் நினைவுதினம் கடந்த 8ம் திகதி வியாழக்கிழமையாகும். அவரது எழுத்துக்களால் கவரப்பட்டவரும் 'ஈழநாடு' அபிமானியுமான உரும்பராயைச் சேர்ந்த 'செல்வி' என்பவர் தேவனை இங்கு நினைவு கூருகிறார்.]

புட்டபர்த்தியில் நான்' என்னும் தொடர் அமசம் 'ஈழநாடு' இதழில் இடம் பெற்ற சமயம். சகலருமே ஆர்வத்துடன் படித்தனர். இவர்தான் தேவன் மாஸ்டர் என்று எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

அன்றுமுதல் இறையடி சேர்வதற்கு இரண்டுவாரம் முன் சர்வோதய சீட்டிழுப்பு பற்றி 'மக்கள் கருத்து'க்கு எழுதிய கடிதம் ஈறாக உள்ள தேவன்-யாழ்ப்பாணம்' ஈழநாட்டில் எழுதிய சகலவித அம்சங்களையுமே கருத்தூன்றிப் படித்து புகழ் பொருத்தமான இடத்தில் உள்ளது என்று கண்டேன்.

கிடைத்தற்கரிய சிறு சிறு சுவைமிக்க செய்திகளைத் தந்து 'ஈழநாடு' வாசகஉள்ளங்களில் கோலோச்சிய நாடும் நடப்பும் எழுதி வந்த 'ஊர்சுற்றி' சந்தர்ப்பம் ஒன்றில் தேவன் மாஸ்டர் பணியாற்றும் பிரபல கல்லூரியையும் காட்டி வைத்தார். அன்றிலிருந்து யாழ் இந்துக்கல்லூரித் தம்பிமாரைக் கண்டு விட்டால் பேச்சுக்கு இழுப்பேன். நிச்சயமாக தேவன் மாஸ்டர்தான் கருப்பொருளாகியிருப்பார்.

முன்னொருதடவை இனிய ஊர்சுற்றியாரே தேவன் மாஸ்டர் கடும் சுகயீனமுற்று அறிவிழந்து வைத்தியசாலையில் இருப்பதாகவும் பழைய மாணவர்கள், நண்பர்கள் சென்று பார்வை இட்டுவருவதாகவும் எழுதி இருந்தார். இச்செய்தி என்மனதைப் பெரிதும் தாக்கியிருந்தது. தம்பிமாரிடம் ஆவலுடன் நலம் விசாரித்துக்கொண்டே இருப்பேன்.

ஈழநாட்டில் 'நாடும் நடப்பும்' பகுதியை நிரப்புவது போல சில நாட்கள் இடம் ''பெற்ற ''கேட்டீர்களா?'' தலைப்பில் எழுதிவந்த'கொண்டோடி' முன்கூட்டியே தேவன் மாஸ்டர் பதவியில் இருந்து ஓய்வு பெறும் செய்தியை அறியத்தந்தார். யார் மூலமாக இனிமேல் தேவன் மாஸ்டரின் நலமறிவது என்ற ஒரு ஏக்கம்.

29-9-82ல் ''வாத்திவேலைக்குச் சலாம்! ''என்னும் அம்சத்தை 'தேவன் - யாழ்ப்பாணம்' ஈழநாட்டில் எழுதி இருந்தார் அக்கட்டுரைபற்றித் தனியான கருத்தொன்று எனக்கு ஏற்பட்டது. அதன் தூண்டுதலால் 'விமர்சனம்' ஒன்று எழுதினேன்.

அவருக்கு எழுதிய கடிதமொன்றில் வேடிக்கையாக நான் கேட்டிருந்தேன், ''ஈழநாடு'' வெள்ளி விழா ஆண்டு வருகிறதே. அதற்கு நானும். ஏதாவது எழுதவேண்டுமே. எழுதத் தெரியாதே சொல்லித் தாருங்களேன்'' என்று.

அவர்கள் வேடிக்கை என்று கொள்ளாது ஆழமாமவே பதில் தந்தார்கள்: ''ஈழநாட்டுக்கு எழுத விருப்பமாயின் வரிக்கு வரி இடைவெளிவிட்டு தாளின் ஒருபக்கத்தில் மட்டும் ஏதாவது எழுதி அனுப்பினால் பார்வையிட்டு, திருத்திஅவர்களிடமே கொடுத்து விடுவேன்''

திருப்பத் திரும்ப அக்கடிதத்தைப்படித்தேன். படித்துக் கொண்டே இருக்கிறேன்.

''செல்வி''

## கலைஞானம்: ஓர் அறிமுகம்

யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விக்கழகத்தினது ஆண்டுச் சஞ்சிகையான கலைஞானம் இரண்டாவது இதழ் பல ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி வெளி வந்துள்ளது. இம்மலர் பல கட்டுரைகளையும் ஆய்வுகளையும் கொண்டு, கல்விக்கருவூலமாக வெளி வந்துள்ளமை, பெரிதும் பாராட்டுக்குரியதாகும்.

இம்மலரில் காணப்படும் பேராசிரியர் ப. சந்திரசேகரம் அவர்களினதும், கலாநிதி தி. வேலாயுதம் அவர்களினதும் கட்டுரைகள் கல்வியாளருக்கு மிகவும் உறுதுணை புரிபவையாக மிளிர்கின்றன. மேலும் பல விரிவுரையாளர்களினதும், முதுகலை ஆராய்ச்சியாளர்களினதும், கல்விச் சான்றிதழ் மாணவர்களினதும் ஆராய்ச்சிக் கட்டுரைகள், சிந்தனைக்கு விருந்தாக அமைவதோடு கல்வியின் புதுப்போக்குகளைப் புதிய கோணங்களில் கோடிட்டுக் காட்டி நிற்கின்றன. எழுத்தாளரும் கல்வித்துறை முதுமாமணி ஆராய்ச்சியாளருமான வண்ணை செ. சிவராஜா இதன் ஆசிரியர். கல்வி சம்பந்தமான தரமான கட்டுரைகளைமட்டுமல்லாது, கல்வித்துறையின் பல்வேறு பிரிவுகளையும் உள்ளடக்கியதாக ஆசிரியர் இந்நூலை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக கல்வித்துறைத் தலைவர் கலாநிதி கோதைபிள்ளையவர்கள் அளித்துள்ள கட்டுரை மகளிர் கல்விபற்றிய ஆய்வாக அமைவதோடு மகுடமிட்ட கட்டுரையாகவும் மிளிர்கின்றது.

## புதிய புத்தகம்

பேராசிரியர் சந்திர்சேகரம் அவர்களின் கல்விச்சீர்திருத்தம் பற்றிய கட்டுரையில் கல்வி வெள்ளை அறிக்கைபற்றி ஆராய்கிறார். தாய்மொழியே போதனா மொழியாக இருக்க வேண்டுமென்ற கொள்கை சட்ட ரீதியாகச்செயல்படுத்தப்பட வேண்டுமென்று அவர் தமதுகட்டுரையில்கூறுகின்றார். கலாநிதி வேலாயுதம் அவர்களின் கல்விநிர்வாகம் பற்றிய கட்டுரை, பொது நிர்வாகிகளுக்கும் வழிகாட்டியாக அமைகின்றதெனலாம். சிரேட்டவிரிவுரையாளர் திரு வ. ஆறுமுகமவர்களின் கட்டுரையில் பல மொழித்துவம் பற்றிய பிரச்சனைகளைநோக்குவது, இவற்றின் சிக்கல்களுக்குத் தீர்வுகாண வழிவகுப்பதாக அமைகின்றது. எழுத்தாளரும்; விரிவுரையாளருமான சபா. ஜெயராஜாவினுடைய கட்டுரையும்; எழுத்தாளரும் முதுகலைமாணி மாணவியுமான வள்ளிநாயகி இராமலிங்கத்தின் கட்டுரையும் குறிப்பிடத்தக்கவையாகும். இம்மலரைச்சிறந்த முறையில் வெளிக்கொண்டு வந்துள்ள இதன் ஆசிரியரான எழுத்தாளர் முதுகலை வண்ணைசிவராஜா அவர்களும், யாழ், பல்கலைக்கழகத்தினரும், கல்விக்கழகத்தினரும் கல்வித்துறையினரும் பாராட்டுக்குரியவர்கள். மேலும் இம்மலர் காலம் சென்ற யாழ். பல்கலைக்கழக கலைபீடத்தின் பேராசிரியர் க. கைலாசபதி அவர்களுக்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை சாலப் பொருத்தமானதே.

'பாரதி'

## ரயிலும் தண்டவாளமும்

கிருபானந்தவாரியார் அண்மையில் ஒரு இடத்திற் கதாப் பிரசங்கம் நிகழ்த்திக் கொண்டிருந்தார். அப்போது கூட்டத்தில் இருந்தவர்கள் பலத்த சத்தமாகத் தமக்குள் பேசிக் கொண்டனர். இது வாரியாருக்குப் பிடிக்கவில்லை. அவர் தமக்கே உரிய நகைச்சுவையோடு 'தண்டவாளம் அதே இடத்தில் இருக்க வேண்டும் ரயில் ஓட வேண்டும். ரயில் ஓடுகிறதே என்று தண்டவாளமும் ஓடினால் பயணம் என்னாகும். அதுபோலத்தான் நான் பேச வேண்டும் நீங்கள் பேசாமல் இருக்க வேண்டும். நானும் பேசி நீங்களும் பேசினால் பிரசங்கம் என்னாகும்' என்றார். அதன்பின் மக்கள் அமைதியாகப் பேச்சைக் கேட்டனர்.

- இளங்கோ

# தொடர் நவீனம்

## கடுகு வேலி

**செங்கை ஆழியான்**

ஊரில் நிகழ்ந்திருந்த மாற்றங்களின் சுவடுகளை மாமாவின் வீட்டில் காணவில்லை. அதே பழைய வீடு. இரண்டு அறை, ஒரு தலைவாசல், குசினி. இருப்பதற்கு அதே வாங்குகள். செம்மண் படர்ந்த தலைவாசல் சிமெந்துத் தரை. தலைவாசலின் ஒரு பக்கத்தை புகையிலைப் பாடம் ஒன்று பிடித்திருந்தது. இன்னெரு மூலையில் காயப்போடுவதற்கான மிளகாய்ப் பழங்கள் குவிந்து கிடந்தன. முற்றத்தில் தாய் ஆட்டைச் சுற்றி மூன்று குட்டிகள் துள்ளித் திரிந்தன.

கிராமத்து மாற்றங்கள் இந்த வீட்டின் வாசலை எட்டிப் பார்க்கவில்லை என்று அவன் நினைத்தான். பவளம் தேநீருடன் வந்தாள். அவளில் ஏதோ மாற்றம் தெரிவதாக அவனுக்குப்பட்டது. அவளை ஆழமாகப் பார்த்தான்.

''என்ன அத்தான், அப்படிப் பார்க்கிறியள்? தெரியாதவையைப்பார்க்கிறமாதிரி...?''

பவளம், அவன் மாமாவின் மகள்; சீராளனின் தங்கை. மாமாவிற்கு இவர்கள் இருவர் தாம் பிள்ளைகள். பவளத்திற்கு அவனது கலியாணமான தங்கையின் வயது. இப்போது பார்க்கும்போது, சிறிய பெண் மாதிரித் தெரிந்தாள்.

''இல்லைப் பவளம்... உன்னில் ஏதோ மாற்றம் தெரியுது...'' என்றுன் அவன். அவள் கலகலவெனச் சிரித்தாள்.

- முந்தி நான் சேலை கட்டியிருப்பன். இப்ப சட்டை போட்டிருக்கிறன்.

உண்மைதான். அவளின் தோற்ற மாற்றத்திற்குக் காரணம் அவனுக்குப் புரிந்தது. வெளியுலக மாற்றம் இந்த வீட்டில் நுழையவில்லை எனச் சற்றுமுன் எண்ணியிருந்தான். மாற்றங்கள் எப்படியோ எவ்வடிவிலோ எங்கும் நுழைந்துவிடுகின்றன.

''ஏன் சட்டை போட்டிருக்கிருய் என்று நீங்கள் கேட்கவில்லை...?'' என்று பவளம் கேட்டாள்.

''அது உன் விருப்பம்...'' என்றுன் அவன்.

''விரும்பி நான் போடவில்லை. வயதைக் குறைக்க வேசம் கட்டியிருக்கிறன், அத்தான். முப்பது வயதாகுது. எல்லாருக்கும் பாரமாக இருக்கிறன்...'' அவள் நெடுமூச்செறிந்தாள். அவனுல் அவளை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை. அவன் மூத்த தங்கை உமாவிற்குக் கலியாணமாகி ஐந்து வருடங்களாகின்றன. மூன்று குழந்தைகளுக்குத் தாயாகவும் மாறிவிட்டாள்.

பவளம் - ? மாமா பலவிடங்களில் கலியாணம் பேசிப் பார்த்துவிட்டார். சீதனம் மட்டுமன்றி ஏழில் செவ்வாய் வேறு அவள் கலியாணத்திற்குத் தடையாகியது. சீராளனுக்கு அவன் தன் தங்கைக்காக நன்கொடை கொடுக்கப் போகிறுன். மாமா ஐம்பதினுயிரம் கேட்டிருந்தார். சீராளன் கூட்டுறவுச் சங்கமொன்றில் கிளார்க்காக வேலை செய்கிறுன். உத்தியோகம் பெரிதாகவில்லை என்றுலும், ஒழுங்கானவன். எல்லாவற்றிற்கும் மேலாக கிளி அவனை விரும்புகிறுள். ஐம்பது என்ன எழுபத்தைந்தையாவது கொடுத்து கலியாணத்தை முடித்துவிடவேண்டும். அவன் கொடுக்கும் பணம், பவளத்திற்குத்தானே?

''என்ன அத்தான் மௌனமாகிவிட்டியள்? நான் சட்டை போடுவது பிடிக்கவில்லையா...?''

''சட்டை போட்டால் தவறில்லை. ஆனுல் நீ அதற்குக் கூறும் காரணம்தான் சரியாகத் தெரியவில்லை. இந்தக் காலத்தில் கலியாணமாகிக் குழந்தை குட்டிகளோடு இருக்கிறவையும் யாழ்ப்பாணத்தில் சட்டை போடுகினமாம்...... நீ போட்டால் என்ன...? -

பவளம் திடீரெனச் சிரித்தாள்.

''ஓம் அத்தான்...... பெரிய மாமியின் மகள்..... அதுதான் வாசுகி அக்கா...இப்ப சட்டை தான் போடுகிரு ......பெரிய பிள்ளைகளும் இருக்குது. வெளிநாட்டில் புருசன். ஒவ்வொரு நாளும் காகிதக்காரனை எதிர்பார்த்து வாசலில் நிற்பா. யாரோ ஒரு பொடியன் இவவைக் கண்டிட்டான். ஒரு நாள் கண்ணைக் காட்டியிருக்கிறுன்; மறு நாள் காதல் கடிதம் கொடுத்திட்டான். வாசுகி அக்கா பெரிதாகக் கத்தி ஊரைக் கூட்டிவிட்டா...... பொடியளுக்கு இப்ப தாய்க்கும் மகளுக்கும் வித்தியாசம் தெரியவில்லை. கள்ளருக்குப் பயந்து கலியாணமானவை இப்ப தாலிக்கொடியும் போடுகிறதில்லை.''. .... பவளத்தின் சிரிப்புடன அவனும் சேர்ந்து கொண்டான். முற்றத்தில் ஆட்டுக்குட்டிகள் துள்ளி விளையாடின. அவற்றின் கத்தல் ஒலி அவன் கவனத்தைக் கவர்ந்தது. அவன் முற்றத்தைப் பார்த்தான். பவளம் திடீரெனக் கேட்டாள் ''உங்களுடனுவது உங்க மனைவி சந்தோசமாக இருக்கிறுவா ?''

அவன் வியப்புடன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''என்ன பவளம்...? ''

- உங்கடை மனுசிக்குப் பெரிய பவர்; ஒருத்தரையும் பரவாய் பண்ணமாட்டா. ஒன்றுக்கும் வரமாட்டா. கண்டாலும் கதைக்கமாட்டா, உங்க வீட்டோடும் கோபமாம், நீங்க அவவையே கட்டினியள் டோனேசனைத்தானே கட்டினியள். பவளத்தின் குரலில் அசூசை தொனிப்பதை அவன் உணர்ந்தான். பவளத்தை மாமா அவனைக் கலியாணம் செய்துகொள்ளுமாறு கேட்டிருந்தார். ஆனுல், வீட்டின் நிலைமை அதற்கு இணங்கவில்லை. பவளம் தன் ஏமாற்றத்தைக் கொட்டுகிறுளா?

''பவளம், நீ இன்னமும் அவற்றை மறக்கவில்லை.....?''

''எப்படி அத்தான் மறக்கிறது?'' ஒவ்வொரு பெண்ணுடைய மனசிலும் தனக்கு வரப்போகிற கணவன்பற்றிய கற்பனைகள்... ... எதிர்பார்ப்புகள் இருக்கத்தான் செய்யும். நானும் அப்படி ஒரு ஆசையை மனதில் வளர்த்திருந்தேன். அதை நீங்கள் நிராசையாக்கிவிட்டியள் ..''

''இதெல்லாம் இப்ப கதைக்கிற கதையா, பவளம்? சின்னப் பிள்ளைமாதிரி. நான் உன்னுடன் அப்படியா பழகினன்...?''

''நீங்க அப்படிப் பழகவில்லை. நீங்க தங்கச்சிகள்... தம்பி....அம்மா....ஐயா என்று இருந்தியள். அதை நான் மறக்கவில்லை. நான் உங்களில பிழை சொல்லவில்லை. நீங்களாவது சந்தோசமாக இருந்தால் சரி. எனக்கு அதிலும் சந்தேகம்...''

சண்முகம் பவளத்தைப் பரிதாபமாகப் பார்த்தான். இவளுக்கு எல்லாம் தெரியுமோ? நிர்மலாவிற்கும் அவனுக்கும் இடையிலான பிரச்னைகளின் விரிசலை இவள் அறிந்திருக்கிருளோ?

''எனக்கு ஐயா கலியாணம் பேசாத இடமில்லை. கலியாணம் செய்யத்தான் போறன். ஆனுல், மனசில ஒருத்தரை வைச்சுக்கொண்டு இன்னெருத்தருடன் சந்தோசமாக வாழ முடியும் என்பதில் சந்தேகம். என்னைப்போலத்தான் நிர்மலாவும்......''

அவன் சிலகணங்கள் நிலைகுலைந்து போனுன். பவளம் எதைச்சொல்ல முயல்கிறுள்? நிர்மலாவைப் பற்றி ஏதாவது அவதூறு சொல்லப் பார்க்கிருளோ?''

''முதல் நாள் கலியாணம் பேசினியள்... மூன்றும் நாள் தாலி கட்டிவிட்டியள்? எதை விசாரித்தியள்? உங்களுக்குப் பெண்ணிலும் அவர்கள் தந்த வீடு வளவு, காணிநகைநட்டு, டோனேசன் இவற்றிலதான் கவனம் இருந்தது...''

''பவளம். தயவு செய்து... உன்னைப்பற்றி நான் உயர்ந்த அபிப்பிராயம் வைச்சிருக்கிறன் வீணுகப்பழி சுமத்த முயலாதே...''

''அதனுல் தான், அத்தான் சொல்லுறன். நிர்மலாவிற்கு பகீரதன் என்பவனிலை காதல் இருந்தது. அதைத்தெரிந்து தான் அவர்கள் அவசரமவசரமாக அவளுக்குக்கலியாணம் கட்டிவைச்சினம். அவர்களுக்கு வெகுகாலமாகத் தொடர்பிருந்தது. நாங்க அவவின்ர ஊராக்கள் என்று தெரிந்தும் நீங்கள் எங்களிடம் விசாரிக்கவில்லை. கல்லுக்குத்திவிடுவம் என்று இரகசியமாகக் கலியாணம் செய்தியள். கலியாணற்திற்கு முதல் ஒருத்தனை விரும்புவதில் தவறில்லை. ஆனுல் கலியாணம் செய்து கொண்டால் ஒழுங்காக இருக்கவேண்டும்.''

அவன் வாங்கினைவிட்டு எழுந்திருந்தான் நிர்மலாவை அவனுக்குத் தெரியும். பவளம் தன் ஏமாற்றத்தை தீர்த்துக் கொள்ள அபாண்டமான பழியைச் சுமத்துகிறுள்.

''உங்களை எல்லாரும் ஏமாத்துகினம்... ஊர் எல்லாம் தெரிந்த விசயம். உங்களுக்குத் தெரியாமல் இருக்கக்கூடாது. நான் ஒருக்காலும் உங்களுக்குப் பொய் சொல்ல விரும்பமாட்டன். பகீரதன் உங்க வீட்டிற்கு அடிக்கடி வாற விசயம் ஊரெல்லாம் தெரிந்த பரகசியம்... உங்களுக்கு மட்டும் தெரியாத ரகசியம்.''

அவன் விருட்டென்று முற்றத்தில் இறங்கினுன்.

உடலெல்லாம் பற்றி எரிவது போலஉணர்ந்தான. ஐந்தாண்டுகளின் இழப்புகள். ஊரில் என்னென்னவோ நடந்துவிட்டன. நிர்மல அப்படியிருக்க மாட்டாள். அப்படி இருக்கக் கூடாது.

''நான் வாறன் பவளம்...'' மாமா வந்தால் நான் வந்ததாகச் சொல் - பவளம் இரக்கத்துடன் சிரித்தாள்.

''நீங்கவந்த விசயத்தையும் தெரிந்துகொண்டு போங்க...''

அவன் திரும்பி அவளைக்கலக்கத்துடன் பார்த்தான்.பின்னர் மீண்டும் வாங்கில் அமர்ந்து கொண்டான்.

''அண்ணனுக்கும் கிளிக்கும் கலியாணம் பேசி முற்றுக்கத் தானே வந்தியள்?''

''அதில இனிப்பேச என்ன இருக்குது?... பேசி முற்றுன விசயம்தானே?...'மாமா கேட்டபடி சீதனந்தந்து சீராளனை எடுக்கப் போறன்.''

அவள் உதடுகளில் புன்சிரிப்பொன்று கோடிட்டது.

''அத்தான், நீங்க ஊர் உலகம் தெரியாமல் வளர்ந்திட்டியள். காதல் என்பது காலதாமதமானுல் நிலைத்திருப்பது அரிது அத்தான். கிளிக்காக அவ்வளவு காலம் அண்ணன் காத்திருக்கத் தயாராயில்லை. அவனுக்கு ஒரு பெண் தேவைப்பட்டது...'' அவள் எங்கோ வெறிக்கப் பார்த்தாள்.

''நீ என்ன சொல்கிருய் பவளம்?''

''அண்ணன் ஒரு வரியமாக இங்க வாறதில்லை... அவன் எங்கையோ ஒருத்தியைக் கட்டிக்கொண்டு, போயிட்டான். எல்லாரும் உங்களை மாதிரி இருக்கமுடியுமா?...''

பவளத்தின் கண்கள் கலங்கின. அவள் முகத்தைத்திருப்பிக் கண்ணீரைத் துடைத்துக் கொண்டாள்.

அவன் குவைத்திலிருந்து வந்து இன்னமும் இரண்டு நாட்கள் கழியவில்லை. அதற்குள் இடிமேல் இடியாக ஐந்தாண்டு மறைக்கப்பட்டிருந்த சம்பவங்கள் இறங்குகின்றன. ஊரில் எவ்வளவோ நடந்துவிட்டன. எல்லாரும் எல்லாவற்றையும் மறைத்துவிட்டார்கள். ஏன்? அவன் எதுவித கவலையும் இல்லாமல் அங்கு இருக்க வேண்டும் என்பதற்காகவா? இருக்காது. எதுவித கவலையுமில்லாமல் உழைக்க வேண்டும் என்பதற்காகத் தான் இருக்கும்.

அவன் உடல் சோர, உள்ளம் எரிமலையாகக் குமுற நடந்தான்.

ஏமாற்றங்கள். ஏமாற்றங்கள்.

காலையில் நடந்துவரும் போது இதமாக இருந்த தோட்டவெளி இப்போது சூடேறிக்கிடந்தது, செடிகளுக்கு நீர் இறைத்திருந்தார்கள். அப்படியிருந்தும் அந்தக் காங்கைவெப்பத்தில் நிலம் கொதிப்பதாக அவனுக்குப் பட்டது.

சீராளன் ஏமாற்றிவிட்டான் என்பதிலும் நிர்மலாபற்றி பவளம் தெரிவித்த செய்திகளின் தாக்கத்தை அவனுல் தாங்கிக்கொள்ள முடியவில்லை. அப்படியொரு செய்தியை எந்தக் கணவனுல் தான் தாங்கிக் கொள்ள முடியும்?

வழியில் அவனைத் தெரிந்த பலர் சுகம் விசாரித்தனர்.

''தம்பி, எப்ப வந்தது? எப்பபோறது? என்னென்ன கொண்டு வந்தீர்?'' என்பதாகவே அவ்விசாரணைகள் இருந்தன. அவன் தரித்து நின்று அவர்களுக்குப் பதில் சொல்லும் நிலையில் இருக்கவில்லை. ஒருவிதமாகச் சாமாளித்துக் கொண்டு நடந்தான் இதயத்தில் படபடப்பும் குமுறலும் எஞ்சியிருந்தன.

வழியில் வாசிகசாலை குறுக்கிட்டது. அதற்குள் நுழைந்தான். எவரும் இருக்கவில்லை. இன்றைய தினசரிகள் எதுவும் வரவில்லை. நேற்றைய தினசரிகள் பக்கமிழந்துகிடந்தன.

வாங்கில் அமர்ந்து ஒரு தினசரியைப் பிரித்தான். ஒரு மூலையில் கிடந்தசெய்திதான் கண்களில் பட்டது.

''... வெளிநாட்டிலிருந்து வந்த கணவன், மூன்று பிள்ளைகளுக்குத் தாயான தன் மனைவி பக்கத்துவீட்டு இளைஞனுடன் எங்கோ ஓடிவிட்டாள். தேடிப்பிடித்துத்தரும்படி பொலிசில் முறைப்பாடு ... - செய்திருந்தான். செய்தி மனதிற்கு எரிச்சலாகஇருந்தது. பேப்பரைச் சுழற்றி வீசிவிட்டு விறுவிறுவென வீட்டிற்குவந்தான்.

ஹோலில் யாருடனே நிர்மலா பேசிக்கொண்டிருப்பது தெரிந்தது.

அவன் படிகளில் ஏறினுன்.

''இவர்தான் என் கணவர்... இவர் பகீரதன்... என்னுடன் படித்தவர்...'' என்று நிர்மலா ஒரு இளைஞனை அவனுக்கு அறிமுகப்படுத்தினுள்.

(வளரும்)



## தொலைபேசியிற் கவிஞர் கண்ணதாசன்

கவிஞர் கண்ணதாசன், 'கண்ணதாசன் பிலிம்ஸ்' என்று சொந்தப் படத் தயாரிப்பு நிறுவனம் ஒன்றைத் தொடக்கி இருந்தார். அப்போது அந்த நிறுவனம் 'கறுப்புப்பணம்' என்ற படத்தைத் தயாரித்துக் கொண்டிருந்தது.

பாடல்களைக் கவிஞர் எழுத மெல்லிசை மன்னர் இசையமைத்தார்.

'கையிலே பணம் இருந்தால்
கழுதைகூட அரசனடி
கைதட்ட ஆளிருந்தால்
காக்கைகூட நடிகனடி'

என்ற பல்லவியை ஒரு பாடலுக்குக் கவிஞர் எழுதினுர். தமது சொந்தப்படம் ஆதலால் பின்பு மிகுதியை எழுதலாம் என்று அவர் விட்டுவிட்டார். பாடலைச் சொல்லச் சொல்ல எழுதும் உதவியாளர் உடல்நலக் குறைவாய் இருந்தமையால் கவிஞர் அதை மறந்தேவிட்டார். அந்தப் பாடல் சம்பந்தமான படப்பிடிப்பின் அன்றே மிகுதி எழுதப்படவில்லை என்ற உண்மை தெரியவந்தது.

உடனே டைரக்டர் தொலைபேசிமூலம் கவிஞருக்கு நிலைமையைக் கூறினுர். மிகுதிப் பாடலைக் கவிஞர் கண்ணதாசன் வெகுவிரைவாகத் தொலைபேசியிலேயே கூறினுர்.

'பொய்யிலே நீந்தி வந்தால்
புளுகன் எல்லாம்
தலைவனடி
பூசாரி வேலைசெய்யும்
ஆசாமி சூரனடி

என்று தொடர்ந்து 16 வரிகளைக் கொண்ட முழுப்பாடலையும் போனிலேயே சொல்லி முடித்தார். உடனே பாடல் பதிவானது. தொலைபேசியில் கவிதை சொன்ன முதற் கவிஞர் கண்ணதாசனே.

- முரளி

# இரண்டு கோடி டாலர் செல்வத்தை புலமைப் பரிசிலுக்கு ஈந்த ரேட்ஸ்!

## எண்பது ஆண்டுகளில் 4700 பேருக்கு புலமைப் பரிசில்கள் வழங்கியுள்ளது ரேட்ஸ் அறக்கட்டளை நிறுவனம்

**ஆ. சபாரத்தினம்**

''பயன்மரம் உள்ளூர்ப்
பழுத்தற்றால் செல்வம்
நயனுடையான் கட்படின்''

இங்கிலாந்திலுள்ள ஹேட்ஃபோஷயரில் ஒரு போதகரின் நோஞ்சான்பிள்ளை செசில்ரேட்ஸ் சாதாரண மாணவன். 17வயதில் தென் ஆபிரிக்காவுக்கு உடல்நலம் தேறக்கூடும் என்று அனுப்பப்பட்டான். அங்கேவைரம் அகழ்ந்தெடுத்தல் மூலம் அதிருஷ்டதேவதையின் அருள் நோக்கு அவன்மீது விழுந்தது. மீண்டும் இங்கிலாந்துக்கு வந்து ஒக்ஸ்ஃபோட் பல்கலைக் கழகத்தில் படித்து 1881ல்பட்டதாரியானன் மீண்டும் தென் ஆபிரிக்கா சென்று ஒருசுரங்கம் அறுக்கும் கம்பனியை நிறுவினன். இன்றுவரை அதுவே உலகின் வைரச்சந்தையைக் கட்டுப்படுத்தும் வல்லமையுடன் திகழ்கிறது. கேப்குடியேற்றத்தின் தேசாதிபதியாயிருந்து, வடக்கேசனங்களைக்குடியேற்றும் முக்கிய பணியில் ஈடுபட்டவன், தென்ருெடீஷியா என்ற இரு புதிய குடியேற்றங்களை ஸ்தாபித்தான் (இன்று அவை சிம்பாவே, ஸாம்பியா, எனஅழைக்கப்படுகின்றன)

### 2 கோடி டொலரை என்ன செய்வது?

தமது 2 கோடி டொலர் செல்வத்தைக்கொண்டு என்ன தர்மம் செய்யலாம் என்று ஸேர் செசில் ரேட்ஸ் சிந்தித்தார். தாம்படித்த ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம் மனிதரை நாகரிகமடையச் செய்யும் திறமைவாய்ந்தது; தேசங்களின் தலைவர்களை உற்பத்தி செய்யவல்லது; உலகசமாதானத்துக்குப் பாடுபடும் தலைவர்களைப் பயிற்றுவிக்கத்தகுதியான இடம் எனநம்பினர். உலகின் வெவ்வேறு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் அங்கு மூன்று ஆண்டுகள் கற்கத்தக்கதாகப் புலமைப்பரிசில்களை வழங்க வகை செய்தார். இப்பொழுது ஒரு மாணவன் ஆண்டு ஒன்றுக்கு 15,000 டொலர் பெறுகின்றன். மூன்று ஆண்டுகள் படிக்கிறன். 1903முதல் சுமார் 4700 பேர் இந்தப்பரிசில் பெற்றுக்கல்வி கற்றுள்ளார்கள். இவ்வாண்டு 71 மாணவர் இந்தச்சிறப்பைப் பெற்றுள்ளார்கள். (அவர்களுள் 32பேர் அமெரிக்க ஐக்கியநாட்டினர்.) முன்னைநாள் பிரித்தானிய குடியேற்ற நாடுகளாயிருந்து சுதந்திரம் பெற்றநாடுகளிலிருந்தும், ஜேர்மனியில்இருந்தும் மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறர்கள். மேற்கு ஜேர்மனியிலிருந்து ஆண்டுதோறும் இருவர் தேர்வு பெறுகிறர்கள். ஏனெனில் ரேட்ஸ் போர் ஏற்படாது ஒன்றுபட்டு உழைக்க பிரிட்டன், அமெரிக்கா, ஜேர்மனி ஆகிய மூன்றுநாடுகளும் ஒத்து நிற்கவேண்டும் எனக் கருதினர்.

### தீரர்கள் தெரிவாகினர்

அப்புலமைப்பரிசில் பெறுவதற்கு மாணவரைத்தேர்ந்தெடுக்கும்முறை காரணமாகவே அதற்குப்பெருமதிப்பு ஏற்பட்டது. ரேட்ஸ், விக்டோரியா இராணிகாலக் கல்வி இலட்சியங்களில் ஊறியவர். தேர்வுக்குழுக்கள் மாணவரை அவர்தம் கல்வி அறிவுத்திறனுடன், புருஷத்துவத்தின் உயர் நலங்களாகிய, தைரியம், இரக்கம், தலைமைப்பண்பு ஆகியனவற்றுக்காகவே தேர்ந்தெடுக்க வேண்டும் என விதிசெய்தார். வெறும் புத்தகப்பூச்சிகளாயிராது, உலகின் நலனுக்காகப் போராடவல்ல தீரர்களையே தேர்ந்தெடுத்துப்பயிற்ற வழி செய்தார். காலத்துக்கேற்ற பலசீர்திருத்தங்கள் செய்தாலும், அவர்வகுத்தஅடிப்படை விதிகள் மாறவில்லை. அதனல் 'ஒக்ஸ்போட்டில் ரேட்ஸ் ஸ்கொலர்' என்ற தகுதியே மட்டற்றபெருமையை ஒரு மாணவனுக்கு அளிக்கிறது. இதற்கு அமெரிக்காவில் மாணவர்களைத் தேர்ந்தெடுக்கும் திட்டத்தின் செயலாளர் டேவிட் அலெக்சாந்தர் கூறுகிறர்: ''ரேட்ஸ் தேர்வுப் போட்டிதலைவர்களாக உருவாகும் தகுதிவாய்ந்த அதிதிறமையாளரைத் தேர்ந்தெடுக்கும் தீவிர வேட்டை என்று வருணிக்கலாம்.''

பல்வேறுநாடுகளின் வெவ்வேறு துறைகளில் தலைமை பெற்றுள்ள பலர் ரேட்ஸ் புலமைப்பரிசில் பெற்றுஒக்ஸ்போட்டில் பயின்றவர்களாகத்திகழ்கின்றதிலிருந்து செசில் ரேட்ஸின் தீர்க்கதரிசனத்தின் உயர்வை நாம்கணிக்கலாம். அமெரிக்காவின் முன்னுள் அரசுச்செயலாளர் டீன்றஸ்க், அவுஸ்திரேலியாவின் பிரதமர் ருெபேட்ஹோக் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். முன்னுள் செனெட்டர் வில்லியம் புல்பிறைற் இந்தப்புலமைப் பரிசில் காரணமாகத்தாம் பெற்ற பேரனுபவத்தை மனத்துட் கொண்டு, தாமும் அதே போன்ற ஒரு அமெரிக்க புலமைப்பரிசிலைத் தம்பெயரால் ஏற்படுத்தியுள்ளார்.

### பெண்களுக்கும் பரிசு

1938ல் ரேட்ஸ்பரிசில்பெற்ற பைரன் உவைற் இன்று அமெரிகக உயர்நீதிமன்றத்து நீதிபதியாக அமர்ந்துள்ளார். இன்றுள்ள ஐந்து செனட்டர்கள், நாவலாசிரியரும் கவிஞருமான வாரென், பொருளியல் நிபுணர் லெஸ்ரர்தரோ, பாடகர், விளையாட்டு வீரர் பலர் இப்புலமைப் பரிசிலால் உயர்வடைந்தோராவர். அமெரிக்காவிலுள்ள சுமார் 1500 ரேட்ஸ் பரிசிலாளருள் 245 பேர் சட்டதரணிகளாயும், 365 பேர் கல்வி நிபுணர்களாயும் விளங்குகின்றனர். 1907ல் ஒரு கறுப்பர் இப்பரிசில் பெற்றுப்பின் கல்வித்துறையில் பணிபுரிந்தார். 1975லிருந்து பெண்களும் இப்பரிசில் பெறும் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. அடுத்த ஆண்டு முதல் புலமைப்பரிசில் பெற்றவருள் பெண்களின் தொகை சுமார் 30 வீதமாகும்.

### நேர்முகப் பரீட்சையில் புதுமை

இதற்குத்தேர்ந்தெடுக்கும் முறை மிகக்கடினமானது. சென்ற ஆண்டு 1183அமெரிக்க கல்லூரிச்சிரேஷ்ட மாணவர்களும் பட்டப்பின் படிப்பு மாணவரும் விண்ணப்பித்தனர். முதல் நேர்முகப்பரீட்சை நடாத்தும் எண்மர் பெரும்பாலும்தாமே ரேட்ஸ் புலமைப்பரிசிலரே. அவர்கள் துழாவித் துழாவிக்கேட்கும் கேள்விகள் ஒரு மாணவனைச் சகல துறையிலும் பரீட்சிக்கும். அதுவே ஒரு பெரிய அனுபவம் என மாணவர்மகிழ்வர். முன்னுள் சபாநாயகர் காள் அல்பேட் (75வயது) 1930ல் இவ்வாறு பரீட்சிக்கப்பட்ட அனுபவத்தைச் சென்ற வாரம் கூறினர்: ''பொருளாதார மந்தம் நிலவிய அந்நாட்களில் அவர்கள் என்னைக்கேட்ட கேள்வி ஒன்று, இன்றுமிகமுக்கியமான தேசியப்போக்கு என்ன' என்பதாகும். நான் 'அறிவுமுறைக்கு எதிரான ஒரு செயல்முறைப் (pragmatic) புரட்சி' எனப்பதிலளித்தேன். அது ஒரு சிரிப்பைக் கிளப்பியது''

சென்றஆண்டு அலபாமா பல்கலைக்கழக அமைப்பின் வேந்தராக நியமிக்கப்பட்ட தோமஸ் பாட்லெற் 1951ல் ரேட்ஸ் புலமைப்பரிசில் பெற்றவர். ''நான் ஓர் ஏழையின் மகன் என்றநிலையிலிருந்து தப்பும் வாய்ப்பைப்பெற்றேன். என்புலமைப்பரிசில் பணத்திலிருந்து சேமித்து ஒரு மோட்டார் சைக்கிள் வாங்கி ஐரோப்பாமுழுவதும் 15,000 மைல் பிரயாணம் செய்தேன். எனது சகபுலமைப்பரிசிலர்களின் முன்மாதிரியைக் கொண்டு நான் கடுமையாகப் படித்து முன்னேறினேன். அப்படியான இலட்சிய வெறியுள்ள மாணவர்களை நான் எங்குமே கண்டதில்லை'' என்கிறர்.

அமெரிக்க உளவு ஸ்தாபன (சி. ஐ. ஏ) முன்னுள் இயக்குநர் அட்மிறல் ரேணரும், அமெரிக்க இராணுவத்தலைவர் ரேஜர்ஸும் 1947ல் ஒக்போட்டுக்குவந்தனர். அங்கு ஆசிரியர்களின் உத்வேகமும் கடுமையும் நிறைந்த சிந்தனை அவர்களை உலுப்பியது. ''அறிவுத்துறையில் ஒரு திருப்புமையம் அது; நான் தர்க்கரீதியாகச் சிந்திப்பது எப்படி என உணர்ந்தேன்'' என்கிறர் ரேணர்.

### பட்டை தீட்டிய வைரம்

தென் ஆபிரிக்காவிலிருந்து 1951ல் தேர்வு பெற்று வந்த பிரையன். பம்போட் ''ஒக்ஸ்போட்டின் இலட்சிய மனிதன் கோணல்கள்அற்ற, பட்டைதீட்டிய வைரமாய் மனிதத்தன்மையின் உறைவிடமாய் இருக்கவேண்டும். இக்குறிக்கோள் சாமானியமானது அன்று'' என்கிறர். இன்று அவர்ரேட்ஸுக்குப்பிரியமான பொதுச்சேவையில் ஈடுபட்டுப் பராளுமன்ற அங்கத்தவராயுள்ளார். இனவேறுபாட்டை எதிர்க்கும் முற்போக்குச்சமஷ்டிக்கட்சியின் பிரதிநிதியான அவர், ''நாம் ஒரு பொழுதும் வெற்றி பெறமுடியாவிட்டாலும் தொடர்ந்து நீதிக்காகப் போராடுவோம்'' என்கிறர்.

சென்ற ஜூலை மாதம் ரேட்ஸ் அறக்கட்டளை நிறுவனத்தின் 80ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடும் முகமாக 800க்கு மேற்பட்ட புலமைப் பரிசிலர்கள்-முதியவரும் இளைஞரும்-தமது பல்கலைக்கழகத்

(VIIம் பக்கம் பார்க்க)

# மறக்கமுயன்றல் துளிர்க்கும் நினைவுகள்

### மரநிழலில் பொப் இசை!

பிரபல பொப் பாடகர் ஒருவரும் அகதிகளாக்கப்பட்டு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் தஞ்சமடைந்திருந்தார்.

கல்லூரி மைதானத்தினருகே உள்ள மரத்தின்கீழ் பலகை ஒன்றைப் போட்டுப் படுத்தவாறு 'பொப்' பாடல்களைப் பாடுவது அவரது பொழுதுபோக்கு. எந்நேரமும் அவரைச்சுற்றி சிறு கூட்டமே இருந்து கொண்டிருக்கும்.

''வன் - ரூ - திறீ
ஐ ஆம் இன் ஏ றிபியுஜி
காம்ப் (One, Two, Three, I
am in a refugee camp)
எல்லோரும் வந்து
உதவுங்கள்...''

இதுவே முகாம் ரசிகர்களைப் பெரிதும் ர்வகந்த அவரதுபாடல்.

### சிகரட் அமோக விற்பனை

உறவுகளை இழந்து - உடைமைகளை இழந்து- உயிருக்குப் பயந்த நிலையில் - உண்ண உணவின்றி- உடுக்க உடையின்றி அவதியுற்ற அகதிகள் மத்தியிலும் சிகரட் விற்பனை அமோக இடம்பெற்றது.

கலவரம் அடங்கியும் அடங்காமலும் இருந்த வேளையில் முகாம் வாசலில் நின்ற தொண்டர்களினதும் அதிகாரிகளினதும் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு முகாம்களுக்குள் நுழைந்த சிறுவர்கள் சிகரட் ஒன்று 2 ரூபாவீதம் விற்பனை செய்தார்கள்.

ஓரிரு நிமிடங்களில் பெருமளவு சிகரட் விற்பனையாகியது.

### காதலர்கள் பிரிவுத்துயர்

முகாம்களுக்கு வெளியேயும் உள்ளேயும் சில சிங்கள இளம் பெண்கள் வாடிய முகத்துடன் அடிக்கடி காணப்பட்டனர்.

தமிழ் இளைஞர்களினது காதலர்களே இவ்வாறு காணப்பட்டனர்.

அகதிகள் கப்பலுக்குச் செல்வதற்கு பஸ்ஸில் ஏறிய வேளைகளில் சிலர் கண்ணீர் சிந்தியவாறு காணப்பட்டனர்.

### ரி. வி.யில் தமிழ்ப்படம்

ஒருசில அகதிகளிடம் ரி. வி. டெக், ரேடியோ உண்டு.

புதன்கிழமைகளில் ஒரு பொது இடத்தில் ரி. வி. ஒன்று வைக்கப்பட்டிருக்கும். தமிழ்ப்படம் பார்ப்பதற்காக அந்த இடத்தில் அநேகர் கூடியிருப்பார்கள். அவ்வப்போது 'டெக்'கிலும் படம் போட்டுக் காண்பிப்பார்கள்.

### தாராளமோ தாராளம்

பம்பலப்பிட்டியிலிருந்த முகாம்களில் அகதிகளின் பாவனைக்கு வழங்கப்பட்ட கோப்பைகள் தேவை முடிந்தவுடன் உடனுக்குடன் திருப்பிப் பெறப்பட்டனவாம்.

தமது தொழில் நிறுவனம் தீயில் கருகிய போதிலும் மிஞ்சிக்கிடந்த கோப்பைகளை அகதிகளுக்கு உதவிய அந்த நிறுவன அதிபர், கோப்பைகள் திரும்பவும் பெறப்படுவதை அவதானித்துவிட்டு அந்தக் கோப்பைகளை அவதியுற்ற மக்களுக்கே கொடுத்துவிடும்படி கூறினராம்.

### முடி அலங்கரிப்புத் தொழில்

அகதி முகாம்களில் முடி அலங்கரிப்புத் தொழிலும் நன்ருக இடம்பெற்றது. வெளியிலிருந்துவந்த சவரத் தொழிலாளி கைநிறையப்பணம் சம்பாதித்துச் சென்றர்.

புனித பீட்டர்ஸ் கல்லூரி முகாமில் வெட்டப்பட்ட முடி அகற்றப்படாமல் முகாமை அசுத்தப்படுத்தியமைக்காக அத்தொழில் பின்னர் நிறுத்தப்பட்டது.

- கொழும்பான்

# இவ்வாரம் எப்படி?

## மேஷம்

சகோதர வழிப்பிணக்கு சஞ்சலங்களை உருவாக்கும். சிறிய பிணியுடன் இடப்பிரிவுமுண்டு. மாணவர்களுக்குசிறந்தவாரம். தொழில் விடயங்களில் முன்னெச்சரிக்கையுடன் நடப்பின் நன்று. உடல்நிலையில் மாற்றம் தென்படும். உணவு விடயத்தில் கவனம் செலுத்தவும். கொடுக்கல் வாங்கல் விடயத்தில் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்ள நேரிடும். எதிலும் பொறுமையுடனும் நிதானத்துடனும் ஈடுபடவும்.

## ரிஷபம்

பாட விடயங்களில் பெரியோர் புகழ்ச்சிக்கு இடமுண்டு. புண்ணிய விருப்பு மேலிடும். தாய்வழிமூலம் தனவரவும் கிட்டும். சிறியவர்களின் விடயத்தில் வெறுப்புணர்ச்சி மேலோங்கும். வீராப்புப்பேசி மற்றவர்களை வீழ்ச்சியடையச் செய்வீர்கள். தொழில் விடயங்களில் சிறப்பு மேலோங்கும். சிந்தனை வெற்றிக்கு இடமளிக்கும்.

## மிதுனம்

குடும்பத்தில் குதூகலம்பெருகும். கணவன் மனைவி உறவு மலரும். புத்திர மகிழ்ச்சிக்கும் இடமுண்டு. பெரியவர்களின் மதிப்பைப் பெற வாய்ப்புண்டு அடக்க குணத்தால் சில லாபமும் உண்டாகலாம். இடப்பிரிவுகள்மூலம் மனவேதனை உண்டாகும். தொழில் புரியும் இடங்களில் சிறியவர்கள் விடயத்தில் நிதானத்துடன் செயல்படுவது உங்களை உயர்த்தும்.

## கடகம்

கழுகுப்பார்வை உங்களை வட்டமிடும். நம்பியவர்களே காலை வாரிவிடுவர். வழக்குவிவகாரங்களில் சம்பந்தப்படாதிருப்பது நன்று. ஆயுத பீடைக்கும் இடமுண்டு. கொள்கைவழி வாழ்க்கையை வளம்படுத்தும். நீண்டநாள் எதிர்பார்த்த செய்தி கிடைக்கலாம். தொழில் புரியும் இடத்தில் செல்வாக்கு உயரும். தாய்வழிச்சுகமும் வாகன சுகமும் உண்டு.

## சிம்மம்

இன்பத்தின் அணைப்பில் இதயம் பறிபோகும். பிரமச்சாரிகளின் வாழ்வில் காதல்கணை தாக்கும். குடும்பஸ்தர்களுக்கு சுவையான சம்பவங்கள்உண்டு முகமன் பேசிக் கொண்டே உங்கள் முன்னேற்றத்தைத் தடைசெய்யும் காரியங்கள் நடைபெறும். உதவிசெய்யப் போய் உபத்திரவத்தைத் தேடிக் கொள்வீர். புத்திரர் மூலம் பாராட்டைப் பெறுவீர்கள்.

## கன்னி

ஏமாற்றத்திற்கு இடமுண்டு. சூழ்ச்சிவலை விரிக்கப்படும். சத்துருக்களால் தொல்லைகள் அதிகரிக்கும். பிரயாணங்களைப் பின் போடவும். உணர்ச்சிவசப்படுவீர்கள். களஸ்திரவழியால் லாபம்கிட்டும். அமைதி நன்று. பகைமூட்டம் பதட்டநிலையை உருவாக்கும்.

## துலாம்

புதிய நண்பர்களின் சேர்க்கையால் மனதில் உற்சாகம் பிறக்கும். சுற்றுடலில் நிலைமை சீர்பெறும். உடல்நலிவு தோன்றும். பிணிக்கு இடங்கொடாது சுகாதாரத்தைப் [illegible] பேணவும். குடும்பப் பிரச்னைகளில் சுமுகமான நிலை தென்படும். சிலருக்கு திடீர் திருமணமும்நடைபெறும்-

## விருச்சிகம்

செய்தொழிலால் சிறப்படைவதற்கு இடமுண்டு. கண்டுபிடிப்புகளும் இடம்பெறும். மேலதிகாரிகளின் பாராட்டுக்குஇலக்காவீர்கள். சில யாத்திரைகளும் மேற்கொள்ளப்படலாம். தொழில்துறையிலும் உயர்ச்சியான மாற்றங்கள் ஏற்படும். நீண்டநாள் பிரச்னையில் சமரச முடிவு தலைதூக்கும். அடுத்துக் கெடுப்பவர்கள் உங்கள் அருகிலேயே இருப்பர். பாதையில் பள்ளம் உண்டு. பார்த்துச் செயல்படவும்.

## தனுசு

பொருளாதாரநிலை சீரடையும். எதிர்பாராத வரவுக்கும் இடமுண்டு. வெளியூர்ச் செய்தியும் கிடைக்கும். பிரயாணங்கள் மேற்கொள்ளப்படலாம். தொழில்துறையில் உயர்ச்சியானமாற்றங்கள் தென்படும். பெரியவர் ஒருவரின் உதவி எதிர்பாராதவகையில் கிட்டும். புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுபவாரம்.

## மகரம்

அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும். உடல் நலம் பாதிக்கப்படலாம். அதிக கட்டுப்பாடு அவசியம் தேவை. பணவரவு மனநிலையை மாற்றமடைய வைக்கும். பொதுத் துறையில் நாட்டம் பிறக்கும். பெரியோர்களின் ஆதரவு தப்பாமல் கிட்டும். மகிழ்ச்சிகரமான பிரயாணங்கள் மேற்கொள்ளப்படும். புதுமனை கட்டத் திட்டங்கள் உருவாகும்.

## கும்பம்

எந்த விடயத்திலும் நன்ருக யோசித்த பின்பே முடிவெடுக்கவும். கழுகுப்பார்வை வட்ட

**திருமதி. க. வேலுப்பிள்ளை**

## சட்டத்தின் முன்...

சட்டத்தரணி: எதிரி என்னை நீ என்று கூறிவிட்டான்; சரியான தண்டனை கொடுங்கள் பிரபு!

எதிரி: சட்டத்தின் முன் யாவரும் சமன் ஐயா!

- பேராலை

- என். தாமோதரன்

# இரண்டு கோடி டாலர்

(VIம் பக்கத் தொடர்ச்சி)

தில் ஒன்றுதிரண்டனர். மகாராணியாரும்கலந்து கொண்டார். பல்கலைக்கழகத்தின் வேந்தரும் முன்னுள்பிரதமருமான மாக்மிலன் ''கல்வியுலகில் திட்டமிடப்பட்ட, மிகச் சிறந்த கற்பனைவளம்மிக்க, கருத்து; மிகப்பாரியதிட்டம்'' என்று அப்புலமைப்பரிசில் முறையைப்பாராட்டினூர்.

### காலத்துக்கேற்ற தேர்வு

காலத்துக்கு ஏற்ற புதிய தேர்வு முறைகள் அவசியம் எனக்கூறும் அறிஞரும் இருக்கின்றனர். பாட்லெற் கூறுகிறுர்: ''B + அதிகம் பெற்ற மாணவர்களை நாம் தேர்ந்தெடுப்பதுசரியல்ல; அவர்கள் பல துறைகளிலும் வல்லுநர்களாயிருப்பினும் ஒன்றிலும் அதிவிசேட வல்லுநர்களாயிருப்பதில்லை.''

1946ல் நியூசிலாந்திலிருந்து புலமைப் பரிசில் பெற்றுவந்தவரும் தற்போது ஒக்ஸ்போட் பல்கலைக்கழகக் கல்லூரியில் உபதலைவருமான ஜோர்ஜ் கோக்வெல் கூறுகிறுர்: ''பல பரிசிலர்கள் அதிதிறமையுடைய மாணவர்களாகத் திகழ்கின்றனர். ஆனுல் எல்லாரும் அப்படியல்ல. உலகம் அதிதிறமையாளரால் மட்டும் நடத்தப்படுவதில்லையே. நல்ல முழுமையான தனிமனிதரால்தான் நடத்தப்படுகிறது.''

றேட்ஸ் புலமைப் பரிசில் பெறுவது பேரொளியுடன் திகழ்வதற்கு முன்னேடி அன்று; ஆனுல் பெறுபவரின் இயல்பு, நடத்தை தனித்தன்மைக்கு அளவுகோலாகத் திகழ்கிறது.

எமது பல்கலைக்கழகங்களில் புலமைப் பரிசில்களுக்கென நல்லோர் வழங்கிய பணம் எப்படிப் பயன்படுத்தப்படுகிறது; எப்படியான கல்விமான்களை, தலைவர்களை உருவாக்குகிறது என்பதைக் கல்வியுலகுடன் தொடர்புடைய பெரியோர்கள் சிந்திக்கிறுர்களா?

## (கும்பம் தொடர்ச்சி)

மிடும். பகைவர் காத்திருப்பர். நிதி நெருக்கடியைத் தவிர்க்க மதவழிநில் புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும். புதிய சாதனை உருவாகும். துள்ளி வரும் வெள்ளிப்பணம் புதிய நண்பர்களைக் கொண்டுவரும்.

## மீனம்

சமயோசிதமான நடவடிக்கைகளின்மூலம் எதையும் சமாளிப்பீர். பூமியால் லாபம் உண்டு. பேச்சுவார்த்தை நல்ல பலனை அளிக்கும். பிரிவின் தாக்குதலால் வேதனைப்படுவீர்கள். தொழில்துறையிலும் தயக்க நிலை தென்படும். அற்ப விடயத்திற்கும் ஆத்திரப்படுவீர்கள். அவதானம் வேண்டும்.

# சிறுகதை

(III- பக்கத் தொடர்ச்சி)

களுக்கு விசித்திரமாகத் தெரியலாம். ஆனுல் அதுவே எங்கள் ஆத்மதிருப்தி. -

வருடங்கள் உருண்டன. தியாக வாழ்வுகள் தொடர்ந்தன. தொடர்ந்த பாதையில் நிசாவின் கால்கள் தடுமாறின! துணைக்குத் துணையையே அழைத்தாள் நிசா. பிரிந்தவர்கள் கூடினூர்கள். கூடியும் கூடாத நிலையில் அவள் தவித்தாள். நிசாவின் விழிகள் மேலே மேலே போய்க் கொண்டிருந்தன. சிறில் அவசரப்பட்டான்.

- நிசா உனக்கென்னம்மா... என் செல்வமே...! - அவனுடைய குரல், போய்க் கொண்டிருந்த அவளை இடையில் நிறுத்தியது. அவள் உடல் செயல் இழந்துவிட்டது. உதடுகள் லேசாகப்பிரிய ஆவலோடு அவன் அதை நோக்குகிறுன்.

- சிறில், எனக்கு... பிளட்... கா...ன்... ! -

சிறிலின் கரங்களில் நிசாவின் உடல்துவண்டு போய்க் கிடந்தது. மரணங்களைப் பார்த்துப் பார்த்துப் பழகிய டொக்டர் சிறிலுக்கு மரணம் சாதாரண நிகழ்ச்சிதான். ஆனுல் அவனே தலையைப்பிய்த்துக் கொண்டு வாய்விட்டுக் கதறினுன். அவள் உடலை முதன் முதலில் முத்தமிட்டபடியே அவன் அழுதான். அவள் கரங்களை தன் கரத்தோடு சேர்த்துப் பார்த்து அழுதான். அந்தக் கடற்கரை ...கற்பாறைகள், எல்லாம் அதிரக்கதறினுன். அந்தக் கற்பாறைகளும் கூடத்தான் இரத்தக் கண்ணீர் வடித்தன.

(யாவும் கற்பனை)


# விவசாயிகளே!!

உங்கள் நெற்பயிரைத் தாக்கும் எரிவந்தம், வெடிப்பு, கபிலப்புள்ளி, மடீற்கொப்புள நோய்களைக் கட்டுப்படுத்த பாவியுங்கள்.

அதிசிறந்த பங்கசு கொல்லி

**ஹினேசான் E. C. 50%**

(எடின்பென்பொஸ்)

100 மிலி — 31/50, 200 மிலி — 61/75, 450 மிலி — 132/50

இது பல வருடங்களாக உங்களுக்கு சேவையாற்றி

**''தமரோன்'', ''அன்ரகோல்''**

போன்ற சிறந்த மருந்துவகைகளை தயாரித்து விநியோகிக்கும்

**ஹேகெம் லிமிட்டெட் இன்**

மற்றும் ஒரு சிறந்த தயாரிப்பு ஆகும்.

உங்கள் விநியோகஸ்தர்கள்:

**யூனியன் ஏஜென்சீஸ்,**
பலாலி றேட், யாழ்ப்பாணம்.

**பாயர் அக்ரோ கெமிக்கல்ஸ்,**
கிளிநொச்சி.

**குளோப் ரேடர்ஸ்**
வவுனியா.

● பேரறிஞர் ஹன்டி பேரின்பநாயகனை நினைவு கூருவோம்

# மறைந்திலை நீ!

பேரின்ப நாயகநீ
பெயர்ந்தங்குச் சென்றதிங்கு
பேரன்புடன் பழகப்
பேரறிஞ ரின்மைகண்டோ?
சீரின்மிகு செகப்பிரியர்
ஹோமர் ஷெல்லி மில்ரனுடன்
நாரின்மிகு வள்ளுவனும்
நக்கீரன் கம்பனுமே

வாவென் றுனைக்கூவி
வண்ணமலர்த் தேரேற்றிச்
சாவின்றி வாழத்
தம்மருகு வைத்தனரோ?
பூவுலகு மன்றிப்
பொன்னுலகு முன்னதுவே
தேவுலகு மின்று
சிறந்து மகிழ்ந்ததையா

கொக்குவில்செய் நற்றவமே
கூறு மிந்துக் கல்லூரி
பக்குவமாய்ப் பேணி
பலர்வியக்க வைத்தனையே
தக்கதன வந்தரிடம்
தகுபொருள்கள் தனை இரந்து
மிக்கெழுந்த மேல்மாடிக்
கட்டிடமு மாக்கினையே.

மூதறிஞ! நீ நாட்டும்
முன்மா திரிபலவே
பேத மொன்றும் பாராட்டாய்
பேணினை நீ சுதந்திரமும்
நோதகவு செய்தநிலை
நோன்மை மிகவுடையோய்
ஆதரவு யாரிடமும்
அன்றளித்தாய் ஆரமுதே.

நீயளித்த கல்வி
நேயமுடன் பெற்றுயர்ந்தோர்
பாய புகழ்மேவி
பலவிடத்து மின்றுள்ளார்
சேயவிடமெல்லாம்
சென்றதுவே உன்கீர்த்தி
தாயளிக்கு மன்பு
தக்கோய்நீ காட்டினையே.

சிறந்த மொழிப் பற்றுடனே
தேசியப் பற்றுடையோய்
நிறைந்த மனம்போல
நீ வாழ்க்கை செய்தமர்ந்தாய்
மறைந்தனை யென்றுன் னை
மண்ணோர்கள் மதிக்கின்றார்
மறைந்திலை நீ மாண்புடனே
மனங்களிடை வாழ்கின்றாய்.

- ஆ. நாகலிங்கம்

## யாழ். கடல நீர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கரடி நன்னீர் தேங்கும்.

இந்த நன்னீர் யாழ்ப்பாணக் குடா நாட்டின் தரைக்கீழ் நீர்வளத்தை அதிகரிக்கும். யாழ்ப்பாணக்குடா நாட்டின் கிணறுகள் உவராவதை இத்திட்டம் தடைப்படுத்தும்.

கடுங்கோடையிலும் கிணறுகளில் நன்னீர் போதியளவில் இருக்கும்.

கடனீரேரிகளையடுத்து இன்று உவர்த்தரையாகக் கிடக்கும் நிலங்கள் பயிர்செய்கைக்குட்படுத்தப்பட வாய்ப்புண்டாகும்.

இவ்வகையில் 11,000ஏக்கர் நிலம் இக்கடனீரேரிகளையடுத்துப் பயிர்ச்செய்கைக்குட்படும் நிலை உருவாகும்.

இக்கடனீரேரிகள் நன்னீராகில் இன்று பயிர்ச்செய்யப்படும் பயிர் நிலத்தில் 20,000 ஏக்கர்கள் மேலதிக நீர்ப்பாசன வசதிகளைப்பெறும்.

### இரு தடைகள்

இத்திட்டம் நிறைவேற்றப்படுமா என்பது ஐயத்திற்குரியது. இதற்கு இரு தடைகள் உள்ளன.

ஒன்று, இத்திட்டம் நிறைவேற 3 கோடியே 20 லட்சம் ரூபா தேவை.

இரண்டு, நமது மக்களின் ஒத்துழைப்பின்மை வடமராட்சிக் கடனீரேரியினுள் மீன் பிடிப்பதற்காகத் தொண்டமானாற்று அணைக்கதவுகளை இரகசியமாகத்திறந்து கடல் நீரைஉள்ளேவர விடுகிறார்கள், ஆனையிறவுக்கிழக்கு மூடு அணையைவெட்டி இறால் பிடிப்பதற்காக கடல்நீரை உள்வர விடுகிறார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளத்தை பெருக்குவதற்கும் பாதுகாப்பதற்கும் உதவக்கூடிய ஒரு திட்டம் இந்த நன்னீர்த்திட்டமாகும். 1879 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரை ஏறத்தாழ 104 ஆண்டுகளாக இது திட்டமாகவே இருக்கின்றது. இத்திட்டம் நிறைவேறுமா? யாழ்ப்பாணக் குடாநாட்டின் நீர்வளம் பெருகுமா?

## நிறுவை

தாமரைகள்
வாழும்—
குளத்தில்தான்
தவளைகளும்
வாழ்கின்றன.
எனினும்—
தவளைகளின்
எண்ணிக்கையைக்
கொண்டு
குளமானது
மதிக்கப்படுவதில்லை!...

- சுதாகர்

# நல்ல தருணம் இது

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வரை புதுடில்லிப் பேச்சுப் பற்றிய பேச்சாகவே இருந்தது.

இச்சமயத்தில் இலங்கை அரசுக்கும் தமிழ்த் தலைவர்களுக்குமிடையே உள்ளூர் மட்டத்தில் அரசியல் தூதுவராக இயங்கி வரும் அமைச்சர் தொண்டமான் புதுடில்லி ஆரம்பப்பேச்சுக்களில் கலந்து கொண்டுவிட்டு கடந்த 30ந் திகதி நாடு திரும்பினார்.

செய்திப் பசியுடன் இருந்த பத்திரிகையாளர்களுக்குத்தீனி போடும் வகையில் அன்று பிற்பகல் 2மணிக்கே ஒரு மகா நாட்டைக்கூட்டிப் புதுடில்லி நிலைமையைப் பத்திரிகையாளர்களுக்குத் தெளிவுபடுத்தினார் தொண்டமான்.

பத்திரிகையாளர் மகாநாட்டிற்குச் செல்வதைவிட அவரை நேரில் தனிமையில் சந்திப்பதன்மூலம் அதிக தகவல்களைப் பெறலாம் என்ற எண்ணத்தில் நான் பத்திரிகையாளர் மகாநாட்டிற்குச் செல்லவில்லை-செல்லவும் முடியவில்லை.

பத்திரிகையாளர்களைக் கௌரவிக்கத் தவறாத அரசியல்வாதிகளில் அவரும் ஒருவர் என்பதை ஏற்கனவே நான் அறிந்து வைத்திருந்ததால் பாராளுமன்றத்தில் வைத்து அவரைச் சந்திக்கலாம் என்ற நம்பிக்கை எனக்கிருந்தது.

பாராளுமன்றத்தில் பட்ஜட் மீதான குழுநிலை விவாதம் நடந்து கொண்டிருந்தது பத்திரிகையாளர் கலரியிலிருந்து, அமைச்சர் சபைக்குள் வந்து அமர்ந்ததை அவதானித்ததும் சபை சேவகர் மூலம் அவருக்கு ஒரு தகவல் அனுப்பினேன்.

அனுமதிகிடைத்தது.

மாலை 6 மணியளவில் பராளுமன்றத்தில் அவரது அலுவலகத்தில் சந்திப்பும் நிகழ்ந்தது. அப்பிரமாண்டமான கட்டிடத்தில் அவரது அலுவலக அறையைத் தேடிக்கண்டுபிடித்ததும் ஒரு குட்டிக்கதை.

''பத்திரிகையாளர்கள் மகாநாட்டுக்கு வந்திருக்கலாமே?''

அவரது முதல் கேள்வியே என்னைச்சிந்திக்க வைத்தது. கேள்வி கண்டிப்பான குரலில் இருக்காததால் ஏதோ கூறிச் சமாளித்துக் கொண்டேன்.

அக்கேள்வியுடன் அமைச்சர் தொடர்கிறார்.

### பிராந்திய சுயாட்சி

''இந்திராகாந்தியின் விசேட தூதுவர் பார்த்தசாரதியின் ஆலோசனைப்படி தமிழ்மக்களின் அபிலாஷைகளைத் தீர்க்கக்கூடிய விதத்தில் பிராந்திய சுயாட்சி கொண்ட பிராந்திய சபைகளை அமைக்க இலங்கை அரசு இணங்கியுள்ள போதிலும் அரசுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையே இரு விடயங்களில் அபிப்பிராய பேதம் ஏற்பட்டது.

(1) அபிப்பிராய வாக்கெடுப்பு - (Referendum)

(2) வடக்கு - கிழக்கு ஒரே சபை

அபிப்பிராய வாக்கெடுப்பு நடத்தும்பட்சத்தில் சமூக விரோதசக்திகள் நாட்டில் குழப்பத்தைத் தூண்டுவார்கள்; இதன் மூலம் நலிந்து கிடக்கும் தமிழனுக்கு மேலும் மேலும் இடர்கள் ஏற்படும் எனக்கூட்டணியினர் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதனை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டு அபிப்பிராய வாக்கெடுப்புத் தேவையில்லை என்று கூறிவிட்டார்.

### இணைப்புத்தான் பிரச்னை

வடக்கு- கிழக்கு இணைப்புத்தான் இப்போது பெரியபிரச்னையாக உள்ளது.

''இன்றைய அரசியல் சாசனத்தில் வடக்கு, கிழக்கு நிர்வாக மொழி தமிழ் நீதிமன்ற மொழி தமிழ் என்பது உறுதி செய்யப்பட்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் பூர்வீக பூமி என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே இரு மாகாணங்களையும் இணைத்து ஒரு மாநில சபையாக்க வேண்டும் எனறும் ''அவசியமானால்கல்முனை, சம்மாந்துறை, அம்பாறைத் தொகுதிகளை உள்ளடக்கிய அம்பாறை மாவட்டத்தில் முஸ்லிம்கள் அதிகமாக வாழ்வதால் அம்பாறை மாவட்டத்தை தனிச்சபையாக்கலாம் என்றும், மேலும் அவசியமானால் வவனியாவில் சிங்கள மக்கள் வாழும் பகுதியையும் வடமேல் மாகாணத்துடன் இணைக்கலாம் என்றும், ஆனால் வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு ஒரே மாநிலமாக்கப்படவேண்டும் என்றும், கடந்த காலங்களில் எத்தனையோ தமிழ்ப்பகுதிகள் சிங்களப் பகுதிகளாக மாற்றப்பட்டுவிட்டன என்றும், இப்போது வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படாமல் விட்டால் கிழக்கில் உள்ள பல தமிழ்ப்பகுதிகள் காலகட்டத்தில் தமிழர்களுக்கு இல்லாத நிலையே ஏற்படும் என்றும் உறுதியாகக் கூறிவரும் தமிழர்விடுதலைக் கூட்டணியினர் தமது இந்த நிலைப்பாட்டிலிருந்து சிறிதளவேனும் அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை' என்றும் தெரிவித்த தொண்டமான்-

''இன்றைய பேச்சுவார்த்தைகள் எதுவித முடிவுக்கும் வழி வகுக்காவிட்டால். .?'' என்ற கேள்வியை நான் போட்டபோது புன்முறுவலுடன் கீழ்க்கண்டவாறு பதில் தந்தார் அமைச்சர்.

### பார்த்தசாரதி மீண்டும் வரலாம்

''இப்போது ஒரு முடிவும் காணப்படாவிட்டால் பேச்சுவார்த்தையோ அல்லது அதற்கான முயற்சிகளோ முறிந்துவிட்டதாகக் கருதக்கூடாது. பார்த்தசாரதி மீண்டும் இங்கு வரலாம்; பேச்சுவார்த்தை நடத்தலாம்.

கேள்வி: வடக்கு-கிழக்கு இணைப்புப்பற்றிய உங்கள் கருத்தென்ன?

பதில்: இந்த விடயம்பற்றி வடக்கு - கிழக்கு மக்களே தீர்மானிக்க வேண்டும்.வடக்கிலும் கிழக்கிலும் உள்ள மக்கள் ஸ்தாபனங்கள் மத்தியில் இதுபற்றி ஆய்வு நடத்தி அவர்களின் அபிப்பிராயங்களைத் திரட்ட வேண்டும். அவர்கள்தான் இணைந்து வாழப்போகிறார்கள்; அவர்களே தீர்மானித்துக் கொள்ளட்டும். அவர்களே முடிவு செய்ய வேண்டியவர்கள்.

பாதுகாப்பு அதிகாரம் இல்லாத பிராந்திய சபைகள் எதற்கு என்று கூட்டணியினர் கூறுகிறார்களே, இதுபற்றித் தங்கள் கருத்தைக் கூறுகிறீர்களா?

### கோபத்தை எழுப்பிய கேள்வி

எனது இக்கேள்வி அவருக்குச் சிறிது கோபத்தை ஏற்படுத்திவிட்டது போலும். சற்றுக்கடுமையான தொனியில் பதில் கூறுகிறார்:

### அப்படி யார் சொன்னது?

''பிராந்திய சபைகளுக்குப் பாதுகாப்பு இல்லை என்று யார் ஐயா சொன்னது? தமிழ் நாட்டிலும் பெரியவனும் சரி சின்னவனும் சரி இதே கேள்வியைத்தான் கேட்டார்கள்''

### இது என்ன சந்தேகமோ?

உத்தேச பிராந்தியசபை ஆட்சி அமைப்பில் தமிழ் மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் பாதுகாப்புக்கிடைக்குமா என்பது பற்றியே சந்தேகிக்கப்படுகிறது. இதுபற்றிய தங்களது கருத்தென்ன?

''ஏனய்யா உங்களுக்கெல்லாம் இப்படிச் சந்தேகம்......?'' இது அவரது பதில் கேள்வி.

''இல்லை... இல்லை... எங்களுக்கு அப்படிச் சந்தேகம் இல்லை... கூட்டணியினரின் சந்தேகத்தையே இங்குகுறிப்பிடுகிறேன்'' என நான்கூறிய பின் அவர் நீண்டவிளக்கம் ஒன்றை அளிக்கிறார்:

### அர்த்தமில்லாத பிதற்றல்

''மக்களையும் மக்களது உடைமைகளையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமை. அரசாங்கம் அந்தக்கடமையிலிருந்து தவறும் பட்சத்தில் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அன்றும் இதைத்தான் சொன்னேன்; இன்றும் அதையே சொல்லுகிறேன்.

''எமது பெண்களைக் கற்பழித்து விட்டார்கள்''

'எமதுமக்களின் உடைமைகளைச் சூறையாடிவிட்டார்கள்.''

'எமது மக்களின் உயிரைக் குடிக்கிறார்கள்'

''இவ்வாறெல்லாம் மேடைமேடையாக உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் சென்று பிதற்றுவதில் என்ன பயன். இந்தக் கூக்குரல் மேலும் மேலும் எமது மக்களைப் பலவீனர்களாக்குகின்றது - கோழைகளாக்குகின்றது.

''முஸ்லிம்களைப் பாருங்கள் ...அண்மையில் சில நெருக்கடிகளை அவர்கள் எதிர்நோக்க வேண்டி இருந்தது. எதற்கும் அவர்கள் கலங்கவில்லை.''

''இந்த நாட்டில் நாம் 1500 ஆண்டுகளுக்கு மேலாகவாழ்ந்துவருகிறோம்; இந்தநாட்டுப் பிரஜைகள் நாம்; எம்மை எவரும் எதுவுமே செய்துவிட முடியாது' என்று அவர்கள் துணிச்சலுடன் கூறிவிட்டார்கள்.

ஆனாலும் ஒன்று-

''ஆடிக்கலவரம் நடந்திருக்கவே கூடாது தான்; எனினும் அந்த ஆடிக்கலவரம்தான் தமிழ்மக்களுக்கும் பிரச்சனைகள் உண்டு; அவைதீர்க்கப்பட வேண்டியவை என்பதைப் பலருக்கு உணர்த்தியுள்ளது' 'என்றார்.

கேள்வி: ஜே. ஆரின் பிராந்திய சபையோசனைகளை அதாவதுவடக்கும் - கிழக்கும்தனித்தனி பிராந்தியமாகவே இருக்வேண்டும் என்ற திட்டத்தை ஏற்றுக்கொள்ளுமாறு தமிழர் விடுதலைக்கூட்டணியை வற்புறுத்தும்படி தமிழகத் தலைவர்களை நீங்கள் கேட்டுக்கொண்டதாக பத்திரிகைகளில் செய்தி வெளிவந்திருந்தனவே?'

பதில்: இல்லை... எதையுமே எவரிடமுமே வற்புறுத்துமாறு நான் தமிழகத்தில் எவரையும் கேட்கவில்லை. என்னைப் பொறுத்தவரை இது ஒரு நல்ல சந்தர்ப்பம்; இதனைக் கூட்டணி தவறவிடக்கூடாதே என்பதே எனது கருத்து. இதே கருத்தைத்தான் தமிழகத்திலும் கூறினேன்.

கேள்வி: இலங்கைத் தமிழர் பிரச்னையில் தமிழகம் என்ன எண்ணுகிறது.

பதில்: தமிழக மக்கள் மிகவும் உணர்ச்சிவசப்பட்டுள்ளனர். கருணாநிதியின் உணர்வு பற்றிக் கூறத்தேவையில்லை. 'தனிநாடு' காண்பதே தமிழ் மக்களின் பிரச்னைக்குத்தீர்வு காண்பதற்கான ஒரே வழி என்ற எண்ணத்தில் அசையாது நிற்கிறார் கருணாநிதி.

'இலங்கைத் தமிழ் மக்களுக்கு உதவ தமிழகம் என்றும் தயாராக இருக்கிறது. ஆனால் அவர்களது இலட்சிய வெற்றி மக்களினதும் தலைவர்களினதும் தியாகத்திலேயே தங்கியிருக்கிறது'

இது எம். ஜி. ஆரின் கருத்து.

# மாஸ்கோவில் இரு பெரும் கலைஞர்கள் சந்திப்பு:

## மாயா - விஜயாம்பிகை



கடந்த இரு வாரகாலமாக மாஸ்கோ மருத்துவ மனையொன்றில் சிகிச்சை பெற்றுவரும் ''ஜன நர்த்தகி'', ''நடனச் சுடரொளி'' விஜயாம்பிகை இந்திரகுமாரை, ''பாலே'' நடனத்தில் உலகு கண்ட ஒப்பற்ற நர்த்தகி என்று பெயர்பெற்ற மாயா பிளிஷெட்ஸ்காயா சந்தித்து. திராவிட - ரஷ்ய நடன வடிவங்கள் பற்றிக் கருத்துப் பரிவர்த்தனை செய்துகொண்டார். இச் சந்திப்பு, ஈழத்துக்குக் கிடைத்த பெரிய கௌரவம் என்று சொல்லலாம்.

தாக ஒரு அழைப்பு வந்திருந்தது.

''வந்துசேர்ந்த புதிதில், நிறைந்த வேலைப் பளுவிற்கு மத்தியிலும், எங்கள் நாட்டு நடனத்தை இங்கே மேடையேற்றுவதைப் பார்க்கவேண்டும் என்ற ஆவலில் சென்றிருந்தேன். எனது நேரம் வீண் போகவில்லை. எங்கள் இசைமேதை சைக்காவ்ஸ்கியின் ஸிம்ஃபானிக் இசையின் ஒலிப் பதிவை ஓடவிட்டு. அதற்குத் திராவிட நடன வடிவங்களில் நடனம் அமைத்து, அவரே பிரதம பாத்திரமாக வந்து ஆடியதைக் கண்டு திகைத்து விட்டேன். அவர் வெளிப்படுத்திய திராவிட நடனங்களுக்கே பிரத்தியேகமான விழி அசைவுகள், பாவங்களில் மட்டும் வைத்தே ''ஸ்வான் லேக்'' பாலேயின் மூலக் கதையின் அத்தனை அம்சங்களையும் வாசித்தேன்.

### சவாலாக ஏற்றுள்ளோம்

''என்னுடைய நிகழ்ச்சிக்கு வந்திருந்த தூதரகத்தைச் சேர்ந்த நண்பர்கள் அனைவரும் இந்தப் பெண்ணால் இதை எப்படிச் சாதிக்க முடிந்தது என்றே ஆச்சரியப்பட்டார்கள். நிகழ்ச்சியின் பின், அவரை வாழ்த்த மேடையின் பின்னால் நாம் சென்றபோது, ஆக்க பூர்வமான சிருஷ்டி ஒன்றை

# சோவியத் மண்ணில் காலடிவைத்த முதலாவது ஈழத்து தமிழ் நடன நர்த்தகி

### உலகப் புகழ் பெற்றவர்

கால் நூற்றாண்டு காலமாக சோவியத் ''பாலே'' நடனத்தின் முடிசூடா சக்கரவர்த்தினியாகத் திகழ்ந்தவர்தான் மாயா பிளிஷெட்ஸ்காயா. இவர் நடனமாடிய பொல்ஷோய் குழுவினரின் படைப்புகள் பிரான்ஸ், இங்கிலாந்து, இத்தாலி, அமெரிக்கா போன்ற நாடுகளுக்கெல்லாம் சென்றபோது, அந்நாட்டு ரசிகர்கள் மாயாவின் நடனத்தைப் பார்ப்பதற்கு டிக்கெட்பெற மணிக்கணக்காகக் கியூ வரிசையில் காத்துக் கிடப்பார்களாம். ''மாயாவுக்கு இணையான பாலே நர்த்தகி இன்னும் உலகில் தோன்றவில்லை'' என்ற புகழுடன், நடனமாடுவதில் இருந்து ஓய்வுபெற்று, இன்று பொல்ஷோய் நடன மன்றத்தின் நடன ஆசிரியைகளில் ஒருவராக மாயா விளங்கிவருகின்றார்.

விஜயாம்பிகையின் மாஸ்கோ பயணம்பற்றி சோவியத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் (கலாசார விவகாரம்) திரு பார்மென் ஷென்ஷின் ''ஈழநாடு'' நிருபரிடம் தெரிவித்ததாவது:-

'விஜயாம்பிகையை இந்த நாட்டின் ஒரு ஈடிணையற்ற கலைஞராக நாம் கணிக்கின்றோம்.

### அன்னத் தடாகம்

''நான் இரண்டரை வருடங்களுக்கு முன் கொழும்பிலுள்ள சோவியத் தூதராலயத்தில் கடமையேற்று ஒருவாரம்கூட ஆகியிருக்காது. விஜயாம்பிகை இந்திரகுமார் என்ற இந்நாட்டு நர்த்தகி ''அன்னத் தடாகம்'' (Swan Lake) என்ற எங்கள் நாட்டு 'பாலே' நடனத்தைத் தழுவி ஒரு நாட்டிய நாடகத்தை மேடையேற்றவிருப்ப



அழகாக அரங்கேற்றிய களைப்பு மன உளைச்சல் எதுவும் இல்லாமல் அனுயாசமாகச் சிரித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

'இந்த சிருஷ்டிக் கலைஞர் ஒரு வருடத்திற்கு முன் வீதி விபத்து ஒன்றில் தனது பாதத்தின் 'ரென்டன்'களை அறுத்துக்கொண்டபோது நாம் மிகவும் கவலைப்பட்டோம். இங்கு செய்யப்பட்ட அறுவைச் சிகிச்சையின் பின், அவர் குணமடைந்து நடனப்பயிற்சி செய்ய ஆரம்பித்தாலும், ''அன்னத் தடாகம்'' நாட்டிய நாடகத்தில் அவர் இணைத்திருந்த ''பாலே'' நடனத்தை ஒட்டிய கஷ்டமான சில அசைவுகளைச் செய்யமுடியாமல் பாதம் இறுக்கம் அடைந்திருந்தது

இதனை ஒரு சவாலாக ஏற்று, இந்தக் கலைஞரின் பாதத்தை எப்படியும் பூரண குணமாக்கி, அவரது ஆக்கப்பணியை எதுவித தடையுமின்றி தொடர வைக்கவேண்டுமென்று நாம் உறுதிபூண்டோம். இதற்கான செலவுகள் அனைத்தையும் சோவியத் அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. இதன் விளைவுதான் நடனக் குழுவுடன் மாஸ்கோவிற்கு ஏற்கெனவே செல்லவிருந்த

(8-ம் பக்கம் பார்க்க)


## அரிய சந்தர்ப்பம்

★ எலெக்ரிக் வெல்டிங்

★ குழாய் பொருத்தல் (PIPE FITTING)

யாழ். நகரில் முதல் தடவையாக வெளிநாடுகளில் வேலை செய்வதற்கேற்றமுறையில் இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

ஆரம்பம் 18-12-83

விபரங்களுக்கு:

The School of Computer Studies,

52/1, கனகரத்தினம் கட்டிடம், [றெயில்வே கடவை அருகாமை]

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.



## நவீன உல்லாசக் குடிசைகள்



எல்லாம் உங்களுக்காகவே

A WEEKEND BONANZA IN LUXURIOUS COMFORT BY THE SEA AT PRICES THAT ARE HARD TO MATCH BY ANY STANDARDS

Eastern Buffet Lunch - Only Rs. 35/-
EVERY SATURDAY AND SUNDAY

Bar Be Que Dinner - Only Rs. 60/-
EVERY SATURDAY

Discotheque - Every Saturday
Kiddes — 2 p. m. to 5 p. m. No cover charge
Adults — 5 p. m, onwards cover charge Rs. 15/-

Family Weekend Package - 2 Nights
A/C ROOM Rs. 590/- PER COUPLE
NON A/C ROOM Rs. 500/- PER COUPLE
Children below 10 years half rates Children below 5 years no charge
Extra Bed in Room Rs. 50/-
Package inclusive of
Friday — Eastern Dinner with Video Show
Saturday — Western Breakfast
— Eastern Buffet Lunch
— Bar be Que Dinner with Disco
Sunday — Eastern Breakfast
— Eastern Buffet Lunch
N. B.: 10% Service charge additional on above rates

Our other facilities:
- OPEN AIR LOUNGE, WITH A MAGNIFICENT VIEW OF THE SEA - SCAPE
- VAST BANQUET HALL FOR WEDDINGS, RECEPTIONS AND OTHER FUNCTIONS.
- THE MAIN RESTAURANT, SERVES SOME OF THE FINEST FOOD YOU'VE EVER TASTED.
- 2 WELL STOCKED AIR CONDITIONED BARS—WITH YOUR FAVOURITE DRINKS.
- SOON BOAT RIDES FROM PRIVATE HOTEL PIER.
- IT'S QUITE AN EXPERIENCE

Special rates for Sri Lankans and Foreign Residents in Sri Lanka.

Harbour View Hotel
Keerimalai Road,
Kankesanturai,
Sri Lanka.

ANOTHER HOTEL MANAGED BY
AITKEN SPENCE & CO LTD
Lloyds Building, Sir Baron Jayatilaka Mawatha
Colombo 1. Tel : 27861-8 547161

Telegrams : ANCHOR Kankesanturai. Telephone ; 22605 Jaffna.

வடபகுதியில் அமைந்துள்ள ஒரே ஒரு பூங்கா உல்லாச பயணிகள் ஹோட்டல்

காங்கேசன்துறை

ஹாபர் வியூ ஹோட்டல்

THE ONLY GARDEN RESORT HOTEL IN THE NORTH

## 25 வீடுகள் அமைக்க வை. எம். சி. ஏ. முடிவு

(மன்னார்)

வை. எம். சி. ஏ. மன்னார் பகுதியில் 25 வீடுகளை அமைத்து வீடில்லாதவர்களுக்கு வழங்க முன்வந்துள்ளது. ஆதலால், இவ்வீடுகளை அமைப்பதற்குத் தேவையான அரச காணிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவும்.

இவ்வாறு கூறும் மகஜர் ஒன்றினை மன்னார் மேற்குகிராமோதய சபைத் தலைவர் திரு. எம். சர்க்கரியாஸ் காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைத்துள்ளார்.


## யாழ். மக்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி

நீங்கள் வெளிநாடு செல்லவேண்டுமா?
உங்கள் பிரயாணச்சீட்டுக்களை இன்றே யாழ்நகரிலேயே பதிவு செய்துகொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

குரேஸ் ட்ரவல் சேர்விசஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

கொலன்ட் வழியாக பிரான்ஸ், ஜெர்மனி செல்வதற்கான சகல ஏற்பாடுகள்,
மற்றும் பெல்ஜியம் விசாவுடன் பயணச்சீட்டுக்களை மிகக் குறைந்த கட்டணத்தில் பெற உடனே நாடுங்கள்.

CROSS TRAVEL SERVICES (PTE) LTD.
STAGE II MODEL MARKET,
No. 5, 1st FLOOR,
BUS STAND CENTRE ROAD,
JAFFNA.
Phone No. 22065, 22040

★ பேளின் (BERLIN) ரூபா 9,500/- ஒரு வழி பயணச்சீட்டு



# காங்கேசன் ரவல்ஸ்

## சொகுசு பஸ்சேவை

காங்கேசன்துறை-யாழ்ப்பாணம்-மட்டுநகர்-கல்முனை.
காங்கேசன்துறை-யாழ்ப்பாணம்-கொழும்பு.

எதிர்வரும் 14-12-83 புதன்கிழமை முதல் எமது

காங்கேசன்துறை-கல்முனை பஸ்சேவை

யாழ்ப்பாணம்-மட்டுநகர் ஊடாக மீண்டும் ஆரம்பமாகிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

தற்போதைக்கு இரவுசேவை மட்டும் செயலாற்றப்படும்.

எமது காங்கேசன்துறை-கொழும்பு பஸ்சேவை வழமைபோல் நடைபெறும். கொழும்புக்கு செல்லும் பஸ்கள் வெள்ளவத்தை இராமகிருஷ்ணா வீதி வரை செல்லும்.

காங்கேசன்துறை-கல்முனை சேவை புறப்படும் நேரங்கள் :

| | |
|---|---|
| காங்கேசன்துறை பிற்பகல் 4 மணி | கல்முனை பிற்பகல் 4 மணி |
| யாழ்ப்பாணம் ,, 5-30 மணி | மட்டுநகர் ,, 5-45 மணி |

கட்டண விபரம் :

காங்கேசன்துறை-கல்முனை / யாழ்ப்பாணம்-கல்முனை } ரூ. 80/-
காங்கேசன்துறை-மட்டுநகர் / மட்டுநகர்-காங்கேசன்துறை } ரூ. 75/-

காங்கேசன்துறை-கொழும்பு சேவை
புறப்படும் நேரம் :

| | |
|---|---|
| காங்கேசன்துறை-பிற்பகல் 6 மணி | கொழும்பு கோட்டை-பிற்பகல் 7-15 மணி |
| யாழ்ப்பாணம் - ,, 7-30 மணி | செட்டியார்தெரு பிள்ளையார் கோவிலடி ,, 7-30 மணி |

ஆசனம் பதிவு செய்யும் இடங்கள் :

1. காங்கேசன் ரவல்ஸ், காங்கேசன்துறை. தொலைபேசி : 34.
2. ஸ்ரீ சாயி ஸ்ரோர்ஸ், ஆஸ்பத்திரி வீதி, நவீனசந்தை, யாழ்ப்பாணம். தொலைபேசி : 22660.
3. இராஜேஸ்வரி ஸ்ரோர்ஸ், மட்டுநகர். தொலைபேசி: 2035.
4. முருகன் ஸ்ரோர்ஸ், மட்டுநகர். தொலைபேசி : 2630.
5. ராஜா ஸ்ரோர்ஸ், வாடிவீட்டு வீதி, கல்முனை.
6. அம்பலவாணர் அன் சன்ஸ், 78, மலிபன் வீதி, கொழும்பு-11. தொலைபேசி : 24821.
7. பேர்ள் லைற்ஸ், 79, மலிபன் வீதி, கொழும்பு - 11. தொலைபேசி : 28244.

காங்கேசன் ரவல்ஸ் 122, மெயின்வீதி, காங்கேசன்துறை.


## இலக்கிய உலகு

ஈ. கே. ஆர்

கூப்பாடுமல்ல; அளப்புமல்ல!

தனிநபர் வசைபாடுவதற்காகவும்,

கொச்சைப் படுத்துவதற்கும்,

யோக்கியத்தனத்தை பரீட்சித்துப் பார்ப்பதற்கும் —

'தாய்ப்பாச, சேய்ப்பாச' உணர்வுகளை நான் எழுதவில்லை!

13 - 11 - 83-ல் 'இலக்கிய உலகு' கருத்துக்களுக்கு 27 - 11 - 83-ல் பதில் எழுதியுள்ளார் எழுத்தாளர் அகஸ்தியர்!

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்துக்காகவும் அதன் ஆயுட்காலச் செயலாளருக்காகவும், வக்காலத்து வாங்கியுள்ள அவர்.

அந்தச் சங்கத்தில் ஆயுட்கால அங்கத்தவராக இருப்பதால்,

'இலக்கிய உலகு' கருத்துக்களைக் கண்ணுற்றதும்,

சீறிச் சினந்து, ஆவேசப்பட நியாயமுண்டு! அவற்றையெல்லாம் அலசி ஆராய்ந்து, பத்திகளை வீணாக்க விரும்பவில்லை.

ஒரு துறையில் பயிற்சியில்லாமல், அந்தத்துறை சார்ந்த இயக்கமொன்றில் தலைவராகவோ, செயலாளராகவோ இருப்பதனை எந்த வகையில் நியாயப் படுத்த முடியும்?

வெற்றி, தோல்வி பற்றி யார் எழுதினார்கள்?

இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தை வெற்றி கொண்டவர்கள் கிடையாது!' என்று கூறும் அகஸ்தியர், இதற்கு ஈழத்து இலக்கிய உலகின்வரலாறு உண்மை பகரும் என்கிறார். அதைப்பற்றியெல்லாம் யார்எழுதினார்கள்? யார் கேட்பார்கள்?

அகஸ்தியரைப் போல ஒரு சிலர் வீராவேசம் போட்டுக் கொண்டாலும், இந்தக் கருத்துக்கு உடன் பாடுள்ளவர்களை அரங்குக்குக் கொண்டு வந்து இந்தக்கருத்தை நியாயப் படுத்த வேண்டிய அவசியமில்லை!

'இலக்கிய உலகு' தொடர்ந்து வரவேண்டுமென்று ஊக்கமும் உற்சாகமும் தந்து கொண்டிருக்கும் ஆயிரக்கணக்கான வாசகர்கள் இருக்கும் வரை இந்தப் பகுதி வாராவாரம் தவறாது வந்து கொண்டிருக்கும்!

யாரையும் துதி பாடுவதோ, தூக்கி வைப்பதோ, தாக்குவதோ இந்தப் பகுதியின் நோக்கமல்ல!

குறிப்பிட்ட வட்டத்துக்குள் நின்று கொண்டு,

குறிப்பிட்ட சிலரைப் பற்றி மட்டும் எழுதிக்கொண்டிருக்க வேண்டுமென்று நினைப்பவர்களுக்கு இந்தப்பகுதி ஏமாற்றத்தையே தரும்!

நல்லதை வரவேற்கும் அதே நேரத்தில்,

பயனற்ற சங்கதிகளைச் சாடாமல் இருக்க முடியுமா?

உண்மைகள் சில நேரங்களில் கசக்கத்தான் செய்கின்றன!

## போலி அகதிகள்!

(சாவகச்சேரி)

கைதடி அகதிகள் முகாமில் பொய்யான தகவல்களைக் கொடுத்து அகதிகளாகத் தம்மைப் பதிவுசெய்து கொண்ட கிளிநொச்சி, செட்டிகுளம் பகுதிகளைச் சேர்ந்த மக்களை திரும்பவும் அவர்களது முன்னைய இடங்களுக்கு அனுப்பி வைப்பதவற்கான ஏற்பாடுகளை முகாம் நிர்வாகிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

இவர்கள் அங்கு வசித்தமைக்கான போதிய சான்றுகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக தெரிகிறது. (கு)


வாகனச் சொந்தக்காரருக்கு

## ஒரு வரப்பிரசாதம்

உங்கள் வாகனங்களுக்குத் தேவையான, யப்பானில் இருந்து நேரடியாக இறக்குமதி செய்யப்பட்ட, சகல வாகனங்களுக்கும் ஏற்ற

25 வீதம் பாவித்த ரயர்கள் விற்பனைக்கு உண்டு.

MAXS DISTRIBUTORS
மக்ஸ் எஸ் டிஸ்ரிபியூட்டர்ஸ்

20, யூப்பிலி பஜார், யாழ்ப்பாணம்.

(ராணி சினிமா அருகாமையில்)



வங்கிச் சேவைகள் போட்டிப் பரீட்சை
வங்கிகளுக்கான
எழுதுவினைஞர், உதவிக் காசாளர் தேர்வு

## போட்டிப் பரீட்சைக்குரிய வகுப்புகள்

ஆரம்பம் 18-12-83

பாடநெறிகள் :
பொதுஉளச்சார்பு : பொதுஅறிவு

காலம் : ஒரு மாதம் கட்டணம்: ரூபா 120/-

- திறமை வாய்ந்த ஆசிரிய குழுவின் ஒருங்கிணைந்த சேவை,
- இலவச அச்சடித்த பயிற்சிக் குறிப்புகள்.

தபால்மூலம் பாடநெறிக் குறிப்புகளைப் பெற விரும்புவோர் ASTAN INSTITUTE, JAFFNA என்ற விலாசத்திற்கு ரூபா 70/- காசுக்கட்டளையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.
விபரங்களுக்கு :

ASTAN INSTITUTE
166/1, HOSPITAL ROAD — JAFFNA.

**ஸ்ரீதர்** (யாழ். நகர்)
தினசரி: 10-30, 2-30
6-00,
கமல்-ஸ்ரீதேவி
சில்க் சுமிதா
**மூன்றும்பிறை**
(வெள்ளிவிழா சித்திரம்)

**ஹரன்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
ராஜன் - பாரதி
**பூவும் பொட்டும்**
(புதிய பிரதி)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-00
**காதலிக்க நேரமில்லை**

**ராணி** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-30
சிவாஜி - சரோஜாதேவி
**ஆலயமணி**
12-12-83 முதல்
அரங்கேற்றம்

இன்றுமட்டும்
**Rajah** JAFFNA
Daily 10-30, 2-00, 4-30
6-30 and 8-30
SONDRA CURIE
TONNY YOUNG
**Police Women**
(Color)
12-12-83 முதல்
பாகப்பிரிவினை

**லிடோ** (யாழ் நகர்)
தினசரி 3 காட்சிகள்
எம். ஜி. ஆர்.
**நீரும் நெருப்பும்**
(கலர்)

**வெலிங்டன்**
(யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
**ரகசிய பொலிஸ் 115**

**சாந்தி** (யாழ். நகர்)
10.30, 2.30, 6.30 மட்டும்
5-வது வெற்றி வாரம்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடிப்பால்... படப்பிடிப்
பால் இனிய இசையால்...
சிறந்த கதையால்
உயர்ந்த
**ஊரும் உறவும்**
வண்ணச்சித்திரம்

**மனோகரா**
(யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15
சிவாஜி — K. R. விஜயா
மாதவி, சுருளிராஜன்
ஸ்ரீபிரியா மற்றும் பலர்
நிறம்பட நடித்த
வர்ணப்படம்
**சத்திய சுந்தரம்**

**Regal**
Daily 10.30 a.m., 2-30,
4-45 and 7-00 p.m
Clint Eastwood... in
**The ENFORCER**
Actlon - Packed - Thrilling
வெகு விரைவில்
**பயணங்கள் முடிவதில்லை**

**வின்ஸர்** (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
6-15, 9-30
தென்னகத் திரைவானில் தேன்சிந்தும் அமுத ராகமாய், காதலின் அமர காவியமாய் பார்ப்பவரைப் பரவசமூட்டி - மீண்டும் பார்க்கத்தூண்டும் - சிந்திக்க வைக்கும் - அதி உன்னத காதல் ஓவியமாய் பவனி வந்த வண்ணத்திரை விருந்து!
சிவகுமார் - ராதா
(அலைகள் ஓய்வதில்லைபுகழ்)
சிவச்சந்திரன் - அருணா
நடித்த
**ஆனந்தராகம்**


(மன்னார்)

மடு - பண்டிவிரிச்சான் வீதியில் அண்மையில் இடம்பெற்ற கொள்ளைச்சம்பவம் தொடர்பாக நடைபெற்ற அடையாள அணிவகுப்பில் கொள்ளையில்

## கொள்ளைச் சந்தேகநபர் அடையாளம் காணப்படவில்லை!

ஈடுபட்ட சந்தேகநபர் எவரும் அடையாளம் காட்டப்படவில்லை.

இவ்வடையாள அணிவகுப்பு மன்னார் பதில் நீதவான் ஜனாப் எம். எம். அபுத்தாகிர் முன்னிலையில் நடைபெற்றது.


கலர் புகைப்படங்களை
குறைந்த செலவில்
குறுகிய காலத்தில்
PROCESSING AND PRINTING
செய்து நயமடைய நாடுங்கள்!
**கொழும்பு ஸ்ரூடியோ**
யாழ்ப்பாணம்.
10310

### உடன் ஆட்கள் தேவை
கண்ணாடித் தொழிற்சாலைக்கு
அனுபவமுள்ள புளோவர் (BLOWERS)
கெல்ப்பர் (HELPERS) பபுளர் (BUBBLERS)
போன்றவர்களும்
அனுபவமுள்ள BOTTLE and PRESS MECHINE
இயக்குநரும், கெல்ப்பரும் தேவை.
அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.
வேலை பழகுபவர்களும் தேவை.
உடன் நேரில் வரவும்.
சேவி கிளாஸ் அன் மெட்டல் வேக்ஸ்
நீர்வேலி. (10281)

### உடன் விற்பனைக்கு
24 ஸ்ரீ 5575 இசுசு லொறி
விண்ணப்பங்கள் 16-12-1983-ம் திகதிவரை ஏற்றுக் கொள்ளப்படும்.
விபரங்களுக்கு:
சட்ட அதிகாரி
த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,
249, மின்சாரநிலைய வீதி,
யாழ்ப்பாணம்,


ஒளியற்று இருளில் மண்டிக்கிடக்கும் தமிழ் இனத்துக்கு ஒளிதந்திட வழியற்று வாடி வதங்கிக் கிடக்கும் தமிழ்ப்பாட்டாளிகளுக்கு வழிகாட்டிட இன்று பாரதி ஜயந்தி நாளில் உதயமாகிறது.

## பாரதி அறப்பணி மன்றம்

★ சமுதாய விழிப்புணர்ச்சி ★ மனிதகுலவளர்ச்சி
★ கிராமிய எழுச்சிக்காக உழைத்து புதிய சமுதாயத்தை கட்டி எழுப்பிட அனைத்து பெரியோர்கள், தாய்மார்கள், இளைஞர்கள், யுவதிகள், உழைப்பாளர்களை,

### பாரதி அறப்பணி மன்றம்

அறைகூவி அழைக்கிறது!

★ ஏழை மாணவர்கட்கு இலவசக்கல்வி
★ அனாதை சிறுவர்கள் இல்லம்
★ தொழிற்பயிற்சி ஊக்குவிப்பு நிலையங்கள்
★ கிராம அபிவிருத்திதிட்டங்கள்
★ இளைஞர் யுவதிகள் வேலைவாய்ப்பு
★ சுதேசிய பொருளாதார வளர்ச்சி இசைத்துறையில் ஈடுபாடுள்ளவர்கள்

சமநிதிக் கீதம்

எழுச்சி நிகழ்ச்சியில் பங்கு பற்ற வாய்ப்பு!

தொடர்புகளுக்கு!

பிரதம அமைப்பாளர்

### பாரதி அறப்பணி மன்றம்

த. பெ. இல. 1
கே. கே. எஸ். றேட்,
தெல்லிப்பளை.

ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா!
எளிமை கண்டு இரங்குவாய் வா வா வா!!

10498

காலஞ்சென்ற

திரு. தம்பையா கந்தையா M. B. E.

அவர்களின்

## ஓராண்டு நிறைவு நினைவு அஞ்சலி விழா

வயாவிளான் பலாலி தெற்கு ஸ்ரீசின்னத்தம்பி தம்பையா தருமப்பணியின் தலைமை நிறுவனரும், இந்நிறுவனத்தின் இன்றைய உரிமையாளரான மலேஷியா திரு. த. செல்லப்பா (கணக்காய்வாளர்) A.M.N., P.J.K., F.C.C.A., F.C.I.S., MACPA, B.I.M. அவர்களினதும் அளவெட்டி காலஞ்சென்ற திரு. த. சின்னத்துரை (நடராசா) ஆசிரியர் அவர்களினதும் சகோதரனுமான காலஞ்சென்ற திரு. த. கந்தையா M.B.E. அவர்களது ஓராண்டு நிறைவு அஞ்சலிவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை (11-12-83) மாலை 3 மணியளவில் வயாவிளான் ஸ்ரீ தம்பையா கட்டிடத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீ சின்னத்தம்பி தம்பையா
தருமப்பணியினர்.

10490

மூன்றாவது ஆண்டு

## நினைவஞ்சலி

திரு. சின்னப்பு சுப்பிரமணியம்

(அதிபர்)

(வேரப்பிட்டி, சங்கானை, கொண்டாவில், பலாலி)



மலர்வு: 1922-12-03 உதிர்வு: 1980-12-11

மூன்றாண்டென்ன, எத்தனை ஆண்டுகள்தான் கடந்தாலும் அன்பாலும் பண்பாலும் எம்நினைவை விட்டகலாத அன்புத் தெய்வத்தை நினைவுகூரும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரர்கள்

''பிரபை மனை'', உரும்பிராய். 10464

மாந்தை மேற்கு பல நோ. கூ. சங்கம்

திருக்கேதீஸ்வரம்

4125 வெற்றுச்சாக்குகள்

## விற்பனைக்கு கேள்வி கோரல்

மேற்படி சங்கத்தால் கீழ்காட்டப்பட்ட வெற்றுச்சாக்குகள் விற்பனைக்கு கேள்வி கோரப்படுகின்றன. கேள்விகள் அனைத்தும் ரூபா 25/- செலுத்தி எமது சங்கத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரத்தில் பூர்த்தி செய்து 31.12-83 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக பொது முகாமையாளர், மாந்தை மேற்கு பல நோ. கூ. சங்கம், திருக்கேதீஸ்வரம் என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் மீளப்பெறக்கூடிய வைப்புப்பணமாக ரூபா 500-/ விண்ணப்பப்படிவம் பெறும் போதும் சங்கத்தில் கட்டுதல் வேண்டும். தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''சாக்கு கேள்வி'' எனக்குறிப்பிடல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | சாக்கு | 3 புசல் | — 839 |
| 2. | ,, | $2\frac{1}{2}$ புசல் | — 604 |
| 3. | ,, | (மாவு 150 ரூ) | — 898 |
| 4. | ,, | (சீனி 2 அந்தர்) | — 163 |
| 5. | ,, | $2\frac{1}{2}$ புசல் சுமார் | — 232 |
| 6. | ,, | கறுப்புப்பட்டை | — 115 |
| 7. | ,, | இளக்கம் | — 272 |
| 8. | ,, | கட்டை (சீனி) | — 166 |
| 9. | ,, | 50 Kg கட்டை கறுப்புகுறி | — 836 |

இவற்றை வேலைநாட்களில் காலை 9 00 மணிமுதல் மாலை 5.00 மணிவரை எமது தலைமைச்சங்கத்தில் பார்வையிடலாம்.

N. சிவபாதம்
பொதுமுகாமையாளர்

10470

# 'மனித உரிமை மீறலை தடுக்க ஐ. நா. அமைப்பு அவசியம்'

(நல்லூர் நிருபர் வி. வி. சுந்தரம்)

''மனித உரிமை சாசனத்தை உலகில் பல்வேறு நாடுகள் புனிதமாகப் பேணிக் காக்கத் தவறுமிடத்து ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க ஐ நா சபை ஒருவிசேட அமைப்பினை உருவாக்குதல் வேண்டும்.,'

யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் மனித உரிமைகள் தின விழாவில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்ப்பாண மாவட்ட சபை முன்னாள் தலைவர் திரு. எஸ் நடராசா மேற்கண்டவாறு கூறினார்.

அறங்காவற் குழுத் தலைவர் பேராசிரியர் திரு கு.நேசையா தலைமையில் நடந்த இவ்விழாவில் திரு. எஸ் நடராசா தொடர்ந்து பேசுகையில் குறிப்பிட்டதாவது:

ஐக்கியநாடுகள்சபை மனித உரிமைகள் பற்றி மிகவும் விரிவாகவும் விளக்கமாகவும் சொல்லழகுகருத்தழகு ததும்ப மனித உரிமை சாசனம் ஒன்றைப் பிரகடனஞ்செய்துள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும் உலகநாடுகள் பலவற்றில் இம்மனித உரிமை மீறல் தொடர்ச்சியாக நடைபெறுகிறது. இவ்வத்துமீறலைப் பேச்சளவில் கண்டிப்பதுடன் ஓயாது, பாதிப்புற்ற மக்களுக்கு உடனடிப் பரிகாரம் வழங்க ஓர் அமைப்பை ஐக்கியநாடுகள்சபை ஏற்படுத்துவது அவசியமாகும். அவ்வாறு ஓர் அமைப்பை ஏற்படுத்தத் தவறுமிடத்து இப்பிரகடனம் ஓர் ஏட்டுச்சுரைக் காய்போல் அமையும்.

மறைந்த வணபிதா லூசியன் விக்கிரமசிங்க மனித உரிமைகள் பேணப்படுவதில் அக்கறை காட்டியவர். தமிழர்களுக்கு இன்னல் வந்தபோதெல்லாம் தமிழ்மக்களைச் சந்திக்கவோ, அதுபற்றி அறிக்கை விடுக்கவோ, உரிய பரிகாரம் காணவோ அவர் தவறியதில்லை என்றும் குறிப்பிட்டார்.

பேராசிரியர் நேசையா தமதுரையில் ''பிறப்புரிமையாம் மனித உரிமைகள் ஒருவனிடமிருந்து பிறிதொருவன் பெறுவதன்று. அல்லது ஓர் அமைப்பிடமிருந்து பெறப்படுபவை அல்ல மாறாக ஒருவன் தன் செயற்பாட்டினால் அவ்வுரிமைகளுக்கு அருகதை உடையவனாகவேண்டும். மனித உரிமைகள் தினத்தில் மக்கள் தம் ஆத்மீக சக்தியை வளர்க்கத் திடசங்கற்பம் பூணவேண்டும்'' முதற்கண் மக்களிடையே இனங்களுக்கிடையே பகைமை உணர்வைத் தூண்டும் நூல்களை எரிக்க வேண்டும். அத்தகைய பாடநூலாகக் கல்லூரிகளில் போதிக்கக் கூடாது திரிக்கப்பட்ட வரலாற்று உண்மைகள்பாடநூல்களில் திணிக்கப்படுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

இங்கிலாந்து போன்ற நாடுகளில் பல்லின மாணக்கர்களைக் கொண்ட வகுப்புகள் அமைக்கப்பட்டு இன,மத ஒருமைப்பாடு போணப்படுகிறது ஒரு நல்ல முன்மாதிரியாகும், இதே நிலை எல்லா இடமும் ஏற்படவேண்டும் என்றார்.

முன்னாள் கல்லூரி அதிபர் திரு சுப்பிரமணியம் பேசுகையில்: மக்கள் மத்தியில் அகிம்சையில் நம்பிக்கை அற்றுப்போன துர்ப்பாக்கிய சூழல்நிலவுகிறது அவர்களிடத்து மீண்டும் அகிம்சையில் ஈடுபாடு ஏற்படுத்த முயலவேண்டும் என்றார். நாக. பத்மநாதனும் உரையாற்றினார்.

## கப்பல் சேவையில் ..

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்பல் சேவை ஆரம்பித்ததும் முதல் தடவையிலேலே சுமார் ஆயிரம் பேரை இந்தியாவுக்கு அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யப்படுகின்றதாம்.

## ஈழநாட்டுக்கு பாராட்டு

(நல்லூர்)

மனித உரிமைகள் தின விழா யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பொழுது தலைமைதாங்கிய முன்னாள் பேராசிரியர் திரு. கு. நேசையா தனது தலைமை உரையில் 'ஈழநாடு' பத்திரிகை மனித உரிமைகள் பற்றி வெளியிட்ட ஆசியரி தலையங்கத்தையும் பிரஸ்தாபித்து பாராட்டினார்,

## நீதித்துறை சுதந்திரம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கம் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தியோ, அல்லது செல்வாக்கைப் பிரயோகித்தோ தீர்ப்புக்களில் மாற்றங்களைச் செய்ய முனையக் கூடாது என்றார்.

இம்மகாநாட்டில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள், மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள், மேல் நீதிமன்ற நீதிபதிகள், உட்பட சிரேஷ்ட நீதிபதிகள், நீதித்துறைப் பிரமுகர்கள் பலர் கலந்துகொண்டனர். நீதியமைச்சர் கலாநிதி நிஸங்கா விஜேரத்தினவும் இம் மகாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார். (கி)

## மாஸ்கோவில்...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

விஜயாம்பிகையின் பயணத்தை சற்று மாற்றி, கலாசார நல்லெண்ணத் தூதாகவும் மருத்துவ சிகிச்சைக்கு உரிய பயணமாகவும் மாற்றியமைத்தோம்.

கடைசியாக எனக்கு மாஸ்கோவிலிருந்து கிடைத்த தகவலின்படி, விஜயாம்பிகைக்கு சிகிச்சை அளித்துவரும் மருத்துவ நிபுணர் குழு சிகிச்சையின் விளைவாக ஏற்கெனவே மிக நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று திருப்தி தெரிவித்துள்ளனர். சிகிச்சை மேலும் தொடர்கிறது.

எப்படியும்விஜயாம்பிகையை பழைய திறமையுடனும் துரிதத்துடனும் மேடைக்குக் கொண்டுவருவோம் என்று உறுதியளித்தார் திரு. பார் மென்ஷென்ஷின்.

இலங்கையிலிருந்து சோவியத்நாட்டிற்கு சோவியத் அழைப்பின் பேரில் செல்லும் முதலாவது தமிழ் நடன நர்த்தகி சோவியத் அரசினால் சிகிச்சை அளிக்கப்படும் இலங்கையின் முதலாவது நர்த்தகி என்ற கௌரவத்திற்கு உரித்தாகிறார் விஜயாம்பிகை இந்திரகுமார். இவருக்கு ஆசிய-ஆபிரிக்க எழுத்தாளர் சங்கத்தின் இலங்கைக் கிளையான மக்கள் எழுத்தாளர் முன்னணி 1975ல் ''ஜனநர்த்தகி'' என்றும், டாக்டர் கலைஞர் மு கருணாநிதி 1982ல் ''நடனச் சுடரொளி'' என்றும் பட்டமளித்துக் கௌரவித்தமை தெரிந்ததே.

# கிராமப்புற சிங்கள இளைஞர்க்கு தமிழ் சுற்பியுங்கள்

(கொழும்பு)

கிராமப்புற சிங்கள இளைஞர்களுக்கும் ஆங்கிலத்துடன் தமிழும் கற்பிக்கப்படவேண்டுமென்று நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் பொல்காவலை எம். பி. திரு சுனில் றஞ்சன் ஜயக்கொடி கூறினார்.

இளைஞர் வேலைவாய்ப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீடுகள் மீதான விவாதத்தில் அவர் பேசினார்.

எதிர்காலத்தில் யுத்தம் ஒன்று வந்தால் சிங்கள இளைஞர்களுக்கு தமிழ் தெரிந்திருக்கவேண்டும். தமிழ் தெரியாமல் யுத்தம் செய்ய முடியாது என்று அவர் கூறினார். கிராம சேவகர் அலுவலகங்கள் மூலம் இந்தப் பணியை மேற்கொள்ளவேண்டும் என்று அவர் வலியுறுத்தினர்.

கல்வி அமைச்சர் பேசும் போது அடுத்த மாதம் 4 ஆயிரம் பேருக்கு ஆசிரிய நியமனம் வழங்கப்படும் என்று தெரிவித்தார். (இ)

## இன்று இலவச பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் இலவச பத்திரிகைத்துறை பயிற்சிநெறி இன்று மாலை யாழ்ப்பாணம் பொன்ட் கல்வி நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியின் முதல் விரிவுரைகளை யாழ். பல்தொழில் நுட்ப உப அதிபர் திரு. அ இரத்தினம் நிகழ்த்துவார். (கெ)

## பிரிவினையைக்...

(1ம்பக்கத் தொடர்ச்சி)

ஐக்கியதேசியக்கட்சி பாதுகாக்கும்.

''ஜூலைக் கலவரம் பற்றி வெளிநாடுகளில் பொய்ப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டன. புதுடில்லி காமன்வெல்த் மகாநாட்டில் கலந்துகொண்டமையினால் அந்தப் பொய்ப் பிரசாரங்களை முறியடிக்க முடிந்தது.

''இந்தக் கலவரத்தில் நாடு பொருளாதார ரீதியில் பின்தங்க வேண்டியேற்பட்டது ஆயினும் இலங்கைக்கு கிடைத்துவரும் வெளிநாட்டு உதவி எந்த வகையிலும் குறையவில்லை. இன்னொரு கலவரமொன்று ஏற்படுமாயின் இந்த உதவிகள் பெருமளவுக்குக் குறைக்கப்படலாம் இலங்கையிலுள்ள இந்திய பிரசைகளை காப்பாற்றும் பொறுப்பு இந்தியாவுக்குண்டு என்றும் அவர் தெரிவித்தார்.

பிரதமர் ஆர். பிரேமதாசா உரையாற்றுகையில், முன்னர் தனிநாடு கேட்டவர்கள் இப்போது அதனை கைவிட்டு ஒற்றையாட்சி முறைக்கு இணங்கியுள்ளார்கள்- இது ஒரு சிறப்பான அம்சமாகும் என்றார்.

கைத்தொழில் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சர் திரு. சிறில் மத்தியூ பேசுகையில், தமிழர் விடுதலைக் கூட்டணி பயங்கரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஒரு இனவாத இயக்கமாகும் அண்மைய கலவரங்களுக்கும் எனக்கும் எதுவித தொடர்பும் கிடையாது. எனக்குத் தொடர்பு இருப்பதாக கூட்டணியினரே வெளிநாடுகளில் பிரசாரம் செய்தார்கள். இலங்கையில் சிங்களவரின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படக் கூடாது என்று கூறினார்.

அமைச்சர் திரு. தேவநாயகம், திரு காமினி திஸநாயக்கா, திரு. மொகமட் மற்றும் பல அமைச்சர்களும் அங்கு உரையாற்றினர்கள்.

ஐ தே. கட்சியின் தலைவராக எம். ஜி. பி. பண்டிரத்ன மீண்டும் ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டார். ]சு]

## இளைஞரை மோதிய மோட்டார் சைக்கிள் தலைமறைவு

(யாழ்ப்பாணம்)

சைக்கிளில் சென்ற இளைஞரை விபத்துக்குள்ளாக்கிய மோட்டார் சைக்கிள் தலைமறைவாகிவிட்டதாக யாழ். பொலிஸ் போக்குவரத்துப் பிரிவில் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஏ. ராஜ்மோகன் என்பவர் கொழும்புத்துறை வீதிவழியாகச் செல்லும்பொழுது மோட்டார் சைக்கிள் ஒன்று தம்மை விபத்துக்குள்ளாக்கியதால் தாம் காயமுற்றுள்ளதாகவும், சைக்கிள் சேதமடைந்துள்ளதாகவும் பொலிஸில் புகார் செய்துள்ளார்.

பொலிசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (மா)

## 5-வது கிரிக்கெட் டெஸ்ட் இந்தியா 231—8

(கல்கர்த்தா)

இந்திய-மேற்கிந்தியக்கோஷ்டிகளிடையே கல்கர்த்தாவில் ஆரம்பமான 5-வது கிரிக்கெட் டெஸ்ட்டில் முதலாவது நாள் ஆட்ட முடிவில், இந்தியாக் கோஷ்டி 8 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 231 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய ஆட்ட ஆரம்பத்தில் முதலில் வீசிய பந்திலேயே சுனில் கவஸ்கர் ஆட்டமிழந்தார். மதிய போசன இடைவேளையின் போது இந்தியக் கோஷ்டி 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 47 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இக்கோஷ்டியின்கப்டன்கப்பில் தேவ்வும், பினியும் சிறப்பாக துடுப்பெடுத்தாடி முறையே 63 44 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தனர். கிர்மானி 42 ஓட்டங்களுடனும், ஜாதப் 08 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருக்கின்றனர். மே இந்தியக் கோஷ்டியின் ஆரம்ப பந்துவீச்சாளர்களான மல்கம் மார்ஸ்ஸல், கொல்டிங் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்கள். (வி

## தர்மகர்த்தா சபைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இணுவில் கந்தசுவாமி கோவில் தர்மகர்த்தா சபைத் தேர்தல் கூட்டம் இம்மாதம் 17-ம் திகதி கோவில் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது


## மரண அறிவித்தல்

### திரு. ஆறுமுகம் முத்துவேலு

சுதுமலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும் உரும்பராய் வாசியும், இளைப்பாறிய எழுதுவினைஞர் நாயகமுமான திரு. ஆறுமுகம் முத்துவேலு அவர்கள் காலமானார்.

நேற்று வெளியான ஈழநாட்டில் குறிப்பிட்டது போல அன்னாரின் ஈமைச்சடங்குகள் இன்று 11-12-83 ஞாயிறு பிற்பகல் நடைபெற மாட்டாது

13-12 83 செவ்வாய் பிற்பகல் 3 மணிக்கு ஈமைச்சடங்குகள் உரும்பராயில் நடைபெறும். உற்றார் உறவினர் நண்பர்கள் தயவுசெய்து இந்த அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். 10507

## மரண அறிவித்தல்

### ஜெபநாயகம் நவரட்ணம் அல்பேட்

(சிங்கர் கொம்பனி)

காலஞ்சென்ற திரு. திருமதி. எஸ். பி. நவரட்ணத்தின் அருமை மகனும், புளோரன்ஸ் ஜெயமலரின் அன்புக் கணவரும், ஜெபநேசன் (இறையியல் கல்லூரி), ஜெபவதனி (புத்தூர் வைத்தியசாலை), ஜெபதபஷினி (சீமா சில்க் இன்டஸறீஸ்), ஜெபறஞ்சன், ஜெபரூபன் ஆகியோரின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற திரு. ரஞ்சிதனாயகம், திருமதி. அருமைநாயகம் திருமதி. செல்வநாயகம், திருமதி. அரியரட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற திரு எஸ் ரி. வில்லியம்ஸ் அவர்களினதும், திருமதி வில்லியம்ஸ் அவர்களினதும் அருமை மருமகனுமாவார். பூதவுடல் ஞாயிற்றுக்கிழமை 11-ம் திகதி மாலை 4 மணிக்கு நல்லடக்கத்திற்காக கொட்டடி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

35, மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம். 19518


இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், [illegible] வீதி, 68-ம் இலக்க அச்சகத்தில் 1983-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 11-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka, under number B 100236/81. Eelanadu- P. O.Box: 49,Telephone: 22389 — 24126.